
# முத்தமிழ்






## சித்திரை 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JR PRINT

57 Boundary Road
Walthamstow
London E17 8NQ

Tel:0208 - 503 6643
Fax:0208 - 521 2365
Mob:0956 963 470

*Letter Heads*
*Compliment Slips*
*Visiting Cards*
*Souvenirs*
*Invoices*
*Rubber Stamps*
*Invitation cards*
*Wedding Cards*
*Birthday Cards*
*Cake Boxes*
*Shorteat Boxes*
*Shorteat Bags*
*Colour Printing*

*Leaflets*
*Arangetram Books*
*Raffle Tickets*
*Laminating*
*Photocopying*
*Fax Services*
*Translation*
*Typing Services*
COMPETITIVE PRICES
FRIENDLY SERVICE
WHATEVER YOU NEED?
CALL US FOR QUATATION

அழைப்பிதழ்கள்
திருமண வாழ்த்து மடல்கள்
பிறந்தநாள் பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்
துண்டுப்பிரசுரங்கள்
அரங்கேற்ற மலர்கள்
நினைவு மலர்கள்
ரிக்கற்றுக்கள்
கேக் பெட் கள்
பொலிதீன் பைகள்
பலகாரப்பைகள்
கலண்டர்கள்
றபர் ஸராம்புகள்
வர்ண விளம்பரங்கள்
மொழிபெயர்ப்புச்சேவை
புத்தகங்கள்
போட்டோ கொப்பிகள்
தொலைநகல் சேவை

இன்னும் என்னென்ன அச்சுத் தேவைகளோ
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஜே ஆர் அச்சகம் லண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்

கலை, கலாச்சார, விஞ்ஞான,
மாதாந்த சஞ்சிகை
**சித்திரை 2000**

ஆசிரியர்: நீற்றா பற்றிமாகரன் B.A, B.Sc.PGD(Social Policy)
வெளியீடு:முத்தமிழ் பிரசுரம், ஜே ஆர் அச்சகம்
57 Boundary Road, Walthamstow, London E17 8NQ
Tel: 020 - 8503 6643 Fax: 020 - 8521 2365
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்
# சித்திரைத் திங்கள்
# உள்ளே........

*விடயம்* *பக்கம்*


| விடயம் | பக்கம் |
|---|---|
| இந்த நூற்றாண்டில் தமிழ் அழியுமா? | 1 |
| பே(ா)ச்சு வார்த்தை | 2 |
| மாறி வரும் சினிமா உலகு | 5 |
| அறிவினால் வளர்ந்த உலகம் | 6 |
| அதிசயங்களும் சாதனைகளும் | 7 |
| மருத்துவ உலகம் | 8 |
| தமிழ்க்காதல் கொண்ட ஐரோப்பிய பெஸ்கி வீரமாமுனிவர் | 9 |
| தமிழ்க்கலாச்சாரத்தை விளக்கும் பாடல் | 10 |
| தந்தையின் நினைவு தினத்தில்..... | 11 |
| தமிழே உலகின் முதன் மொழி.... | 13 |
| சிவயோக சமாஜம் தந்த சுவாமி... | 15 |
| யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய குமாரசாமிப்புலவர் | 16 |
| பிரச்சனைகள்..... | 17 |
| வலன்ரைன் தினம் என்றால்.... | 20 |
| தமிழ்க்கவிஞர்கள் சிந்திய......... | 22 |
| தடியடி இராமன் - 1 | 25 |
| இலங்கையின் காலனித்துவ விலகல் தினமும்.... | 27 |
| பெண்களின் வயதைத் தெரிந்து கொள்ள... | 29 |
| லூர்து பதியின் வரலாறு... | 30 |
| தமிழர்களின் சமுதாய் உருவாக்கம் | 31 |
| எழுத வாசிக்க ஆரம்பிக்கும் குழந்தைக்கு...... | 36 |
| உங்களுக்கு ஒரு அவசர... | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூற்றாண்டில் தமிழ் அழியுமா?

இந்த நூற்றாண்டில் வழக்கழிய கூடிய இரு நூறு மொழிகளில் தமிழும் ஒன்று என ஆய்வு ஒன்று தகவல் தெரிவித்துள்ளது பலருக்கு அதிர்ச்சி தரக் கூடிய செய்தியாக உள்ளது.

ஆனால் இந்த தகவல் அரசியல் நோக்கங்களினால் கூறப்பட்ட ஒன்றல்ல. உலக மக்களிடை அவர்களது சமுதாய ஈடுபாடுகளை வாழ்க்கைத் தன்மைகளை ஆய்வு செய்து வெளிப்படுத்தப்பட்டுள்ள எதிர்வு கூறல்.

ஆகவே இதனைக் குறித்து ஒவ்வொரு தமிழனும் சிந்திக்க வேண்டிய நேரம் இது. நாம் நமது மொழியை பேணுவது நமது கையில் தான் உண்டு.

நாம் தமிழர்களாக வாழ்ந்தால் தமிழ் தானே வளரும். நாம் தமிழை நாளாந்த வாழ்வில் எவ்வளவுக்குப் பயன்படுத்துகின்றோம் என்பதைப் பொறுத்தே எமது குழந்தைகளும் தமிழைப் பேச எழுத ஆசிப்பார்கள். நாம் ஐரோப்பிய கலாச்சாரத்தில் மயங்கும் பொழுது நம் குழந்தைகளுக்கும் கலாச்சார மயக்கம் தானாகவே ஏற்பட்டு அவர்கள் தம்மை மாற்றிக் கொள்ளும் பொழுது மட்டும் நாம் தமிழர்களாக அவர்கள் வாழ மறுக்கின்றார்களே என அவர்களைத் திட்டுவதில் பயனில்லை.

மேலும் ஒரு மொழி வாழ்வதற்கு அந்த மொழி பேசும் மக்கள் வாழும் நிலம் அவர்களுடையதாக இருக்க வேண்டியது முக்கியமான தேவைகளில் ஒன்று.

வட வேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளும் – எனவும் – செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு – என்றும் தமிழை தமிழ் பேசு நிலத்தொடு தொடர்பு படுத்தி அதற்கு இலக்கணம் கண்ட தொல்காப்பியர் மொழிக்கும் அது வழங்கு நிலத்திற்கும் உள்ள தொடர்பின் இன்றியமையாமையை எடுத்து விளக்கினார்.

தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற – எங்கள் தாயென்று கும்பிடடடி பாப்பா எனத் தமிழ் மகக்ள் தங்கள் நாட்டை தெய்வமெனப் போற்ற வேண்டிய அவசியத்தைப் பாரதியும் இடித்துக் கூறினான்.

தமிழர்கள் தங்கள் நாட்டை இழந்து வருவதன் விளைவு தான் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சோதனை.

காலனித்துவ வாதிகள் தமிழர்களின் கலை கலாச்சார மொழியியல் போக்குகளில் பலத்த மாற்றங்களை ஏற்படுத்தியதன் விளைவாக வீரமும் அதனை ஊட்டும் காதலும் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அருவருப்பான விழுமியங்களாக நோக்கப்பட்டன.

இதன் விளைவு தமிழர்களின் கலாச்சாரம் எனப்பட்ட வீரமம் காதலும் மக்களால் போற்றப்படாத நிலையால் வீரமற்ற மனிதநேயமற்ற சுயநலப் பிறவிகளாகத் தமிழ் இனம் மாற மாற்றார்கள் ஆட்சியில் தமிழர் நாடுகள் அடிமையாகின.

காலனித்து விலகலின் பின்னரும் தமிழர்களின் ஆட்சி உரிமைகளை அவர்களால் மீட்டுக் கொள்ள அவர்களிடை காலனித்துவ கல்வி முறைகளின் கலாச்சாரத் தன்மைகள் இடமளிக்கவில்லை.

இந்த நிலை 1980களில் ஆரம்பமான தமிழீழ விடுதலைப் போராட்டத்தினால் மாற்றங் காணத் தொடங்கியுள்ளமையே தமிழ் வழக்கழியாது வாழும் என்ற பெரு நம்பிக்கையை இனமானத் தமிழர்களுக்கு அளித்த வருகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியில் தமிழீழ மக்களின் வாழ்க்கை மட்டுமல்ல உலகில் தமிழ் மொழி நிலை பெறும் தன்மையும் பின்னிப் பிணைந்து உள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் ஏற்படும் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சிகளைத் தமிழோடு கலக்கும் சக்திகளாக மாறி வருகின்றனர். இதற்குத் தலைசிறந்த உதாரணம் உலகின் கணணி வலைகளில் தமிழ் மொழிப் பயன்பாடு பெற்றுள்ள பெரு வளர்ச்சி சைபர் ஸ்பேசுக்கு உலகத் தமிழர்கள் அனைவரையும் இணைக்கும் வலிமை வந்துள்ளது.

இந்த நேரத்தில் புலம் பெயர் தமிழர்களிடை முத்தமிழையும் தமிழீழ உணர்வையும் வளர்க்கும் பணியில் வெளிவருகிறது இந்த முத்தமிழ் மாத இதழ்.. இதனை புலம்பெயர் தமிழர்கள் முத்தமிழையும் தங்கள் தமிழீழ உணர்வையும் வளர்க்க வடிவமைக்கப் பயன்படுத்துவார்களானால் நாம் இந்த முத்தமிழ் இதழை வெளிக் கொண்டு வர எடுக்கும் முயற்சிகள் பெரு . வெற்றி பெற்றதாக மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பே(ா)ச்சு வார்த்தை

சுந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் ஒரு புறம் வாருங்கள் வாருங்கள் சிங்கள இளைஞர்களே படைக்குத் திரண்டு எழுந்து வாருங்கள் என்று சிங்கள பௌத்த பேரினவாதத்து ஜய பேரிகை முழங்கி பாரிய யுத்தம் ஒன்றுக்கு தாயாராகும் படி சிங்கள மக்களுக்கு போர் வெறி ஊட்டுகின்றது.

மறுபுறம் யுத்தத்திற்கு படை சேர்க்கும் அதே சந்திரிகா அரசாங்கம் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முயற்சிக்குமாற் போல் நடிக்கிறது.

நிறுத்தப்பட்ட அல்லது குறைக்கப் பெற்ற வெளிநாட்டு நிதி உதவிகளை மீளப் பெறுவதற்கான ராஜ தந்திர விளையாட்டு சந்திரிகாவின் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என்ற மில்லேனிய நாடகம் என்பதை அதன் ஆரம்பமே பல வகைகளில் தெளிவுபடுத்தி வருகிறது.

இதனை மேலும் உறுதி செய்யுமாற் போல் பேச்சுவாத்தை நாடகத்துக்கு அரிதாரம் போட்டுக் கொண்டிருக்கும் போதே சந்திரிகா 5243 கோடி ரூபாக்களை பாதுகாப்பு செலவீனங் களுக்காக வரவுசெலவு திட்டத்தின் மூலம் அள்ளி வழங்கி தன் படையினருக்கு தமிழ் மக்களை இனஅழிப்பு செய்வதற்கான நிதி வளங்களை பெருக வைத்துள்ளார்.

ஆயினும் போச்சு பேச்சு வார்த்தை வேஸம் என்று தமிழ் மக்கள் அங்கலாய்க்க வில்லை. காரணம் பேச்சுவாத்தைகள் போச்சு வாத்தைகளாக போவதும் – பௌத்த சிங்கள சிறிலங்காவின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் வேகம் பேச்சு வார்த்தைகளின் முடிவில் அதிகரிப்பதும் கடந்த நூற்றாண்டு முழுவதும் தமிழீழ மக்கள் கண்டு அனுபவித்த வரலாறாக உள்ளது. யுத்த நெருக்கடிகளால் பேச்சுவார்த்தைகள் முறியவில்லை. பேச்சு வார்த்தைகள் சிங்கள தலைமை களால் காலத்துக்கு காலம் முறிக்கப் பட்டதினாலேயே யுத்தம் தோன்றியது – வளர்ந்து கொண்டி ருக்கிறது.

பிரித்தானியர்கள் பாராளமன்ற ஆட்சி முறையினை வளர்க்கத் தொடங்கிய காலம் முதலே சிங்களத் தலைமைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுவதை தடுத்து வந்துள்ளன.

தமிழ் மக்களின் அன்றைய பிரதிநிதியாகிய ஜீ ஜி. பொன்னம்பலம் அவர்கள் வட்டமேசை மகாநாட்டின் மூலம் அரசியல் திட்ட வளர்ச்சிகளை மேற்கொள்ளும் படி பிரித்தானியர்களுக்கு விடுத்த கோரிக்கைக்கு இணங்க வேண்டாமென சிங்களத் தலைமைகளே தடுத்தன.

அது மட்டுமா? தமிழ்ப் பிரதிநிதிகளை உத்தியோக பூர்வமாக சந்தித்து பேசக் கூடாது என்று சட்டவாக்கசபையின் தலைவர் என்ற பதவிவழி அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்தவர். டி. எஸ். சேனநாயக்கா.

பின்னர் தமிழர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப் படும் வரை காலனித்துவ விலகலுக்கான காலம் நீடிக்கப்படலாம் என்ற நிலை தோன்றிய நேரத்தில் அந்நியர்களை வெளியேற்ற உதவுங்கள் உங்களின் பிரச்சினைகளை சுதந்திர இலங்கையில் நான் தீர்த்து வைக்கின்றேன் எனக் கனவான்கள் ஒப்பந்தம் செய்து காலனித்துவம் விலகியதும் அதனைக் காற்றிலே பறக்க விட்டு தமிழர் தாயகமெங்கும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழர்களின் சட்டவாக்க வலிமையினை இழக்கச் செய்தவர் டி. எஸ். சேனநாயக்கா.

தமிழ் சிங்கள அரசுக்களின் இயற்கை எல்லைகளாகத் திகழ்ந்த காடுகளை அழித்ததின் மூலம் இது தான் தமிழ்ப்பகுதி இது தான் சிங்களப் பகுதி என்று மக்களிடை இருந்த இயல்பான புவியில் பிரிநிலைகளை மாற்றி யமைத்தமையே இன்றைய பிரச்சினை களின் ஊற்றாக அமைந்தது என சிங்கள வரலாற்றுப் பேராசிரியரான கே. எம். டி . சில்வா குறிப்பிட்டுள்ளமை எடுத்து நோக்க வேண்டிய ஒன்று.

ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தமிழர்களை சிறுபான்மையினர் என்ற நோக்கில் எடுத்து நோக்குவது தவறு என வலியுறுத்தினார். இரு தனியான இறைமையுள்ள அரசுக்களையே காலனித்துவம் இலங்கைத் தீவில் ஆயுத முனையில் கைப்பற்றியதனால் காலனி த்துவம் விலகும் பொழுது 50க்கு 50 என்ற ரீதியல் எல்லா உரிமைகளும் அமையக் கூடிய வகையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்படல் வேண்டு மென்பது ஜி.ஜி யின் கோரிக்கையாக இருந்தது.

டி. எஸ். சேனநாயக்காவை அடுத்து சிங்களத் தலைமையாக விளங்கிய எஸ். டபிள்யூ. ஆர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீ. பண்டாரநாயக்கா தந்தை செல்வநாயகத்துடன் 26 ஜூலை 1957ல் செய்த ஒப்பந்தத்தை சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கோரிக்கைக்கு பணிந்து கிழித்து எறிந்து இலங்கைத் தீவின் அரசியல் எதிர்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அல்லாமல் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளினாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்பதை தெளிவாக்கினார். இதே பண்டாரநாயக்காவே 1927களில் இலங்கைத் தீவின் அமைதிக்கு தமிழர் களுக்கும் கரையோரச் சிங்களவர் களுக்கும் கண்டி சிங்களவர் களுக்கும் தனித்தனியான மூன்று சபைகளைக் கொண்ட சமஸ்டியாட்சியே உகந்தது என முதன் முதலில் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்களத் தலைமை களின் பேச்சுக்கள் முன்னுக்குப் பின் முரணாவதற்கு பண்டாரநாயக்கா குடும்பத்தவர்கள் தலைசிறந்த உதாரணங் களாக உள்ளனர்.

24.03.1965ல் செய்து கொள்ளப்பட்ட ட்டலி சேனநாயக்கா–செல்வா ஒப்பந்தமும் சிங்களத் தலைமைகளால் அமுலாக்கப் படாமலே மறைந்து போனமை மற்றொரு வரலாறு. சிங்களத் தலைமைகள் சில உள் நோக்கங்களுடன் தமிழர் பிரச்சினையை தீர்க்குமாற் போல் பேச்சு வார்த்தைகளை நடாத்தி விட்டு அந்நோக்கை தாம் எய்தியதும் தமிழ் மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை தூரவீசி விடுவது நவீன வரலாறாக உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களினதும் சிங்களவர்களினதும் இறைமையை பொதுவாக வைக்கும் பொழுது பிரித்தனிய காலனித்துவ அரசாங்கம் சோல்பரி அரசியல் அமைப்பால் வழங்கிய சிறிபான்மையின மத பாதுகாப்புக்கான உத்தரவாதமாகிய 29 (2) வது விதியை சிங்களத் தலைமைகள் மீறி சிறிலங்கா என்னும் தன்னிச்சையான பௌத்த சிங்களக் குடியரசை 22.05.1972ல் நிறுவி தமிழ் மக்களுக்கு அந்நிய அரசாகத் தங்களை மாற்றிக் கொண்டனர்.

இதனை அடுத்து தமிழர்களின் அன்றையத் தலைவரான அமரர் எஸ் ஜே. வி. செல்வநாயகம் தனது காங்கேசன்துறைப் பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்து தமிழ் மக்கள் 1972ம் ஆண்டு அரசியலமைப்பை நிராகரிக்கிறார்கள் என்பதற்கான மக்கள் விருப்பை அறியும் கருத்தறியும் தேர்தலாக அதனை நடாத்தும் படி சிறிலங்காவைப் பணித்தார்.

ஆயினும் 1975வரை அத்தேர்தலை நடத்தாது தமிழ் மக்களின் கருத்து வெளிவருவதைத் தடுத்த சிறிலங்கா அக்காலத்தில் தனது பொலிசாரை இராணுவத்தினருக்கு உரிய செயற்பாடு களை செய்ய வைத்து அவர்கள் மூலமாகத் தமிழின அழிப்பை நடாத்தி மக்களுக்கு இனங்காணக் கூடிய அச்சத்தை தோற்றுவித்தது.

இதன் பின்னர் 1975ம் ஆண்டில் காங்கேசன்துறை தேர்தலை நடாத்திய பொழுதிலும் மிகப் பெரிய பெரும்பான்மை வாக்குகளால் தந்தை செல்வநாயகம் வெற்றி பெற்று தமிழ் மக்கள் சிறிலங்கா உருவாக்கிய அரசியலமைப்பை முற்று முழுதாக நிராகரிக்கின்றார்கள் என்பதை உலகிற்குத் தெளிவாக்கினார்.

இதனை அடுத்து சிறிலங்காகப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய தந்தை செல்வநாயகம் தமிழ் மக்கள் தாங்கள் காலனித்துவத்திடம் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே காலனித்துவத்திற்கு எதிராகப் போராடினர் எனவும் இழந்த தமது அரசியல் உரிமைகளை சிங்களவர்களுடன் சேர்ந்து பெறலாம் என்ற நம்பிக்கை கடந்த கால அனுபவங்களில் சாத்தியப்படாத ஒன்றாகி விட்டது என்றார்.

சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கும் அல்லது இரண்டாந்தரப் பிரஜை களாக்கும் போக்கையே கடைப்பிடித்தனர் என்பதை விபரித்த தந்தை செல்வநாயகம் இதற்கு காரணம் தமிழ் மக்களின் இறைமையும் சிங்கள மக்களின் இறைமையும் பிரித்தானியரால் பொதுவாக வைக்கப்பட்டமையே என்றார்.

இவ்வாறு தமிழ் மக்களின் இறைமையைப் பொதுவாக கொண்ட சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்ற அமைப்பு முறையில் இருந்து விலகிச் சென்று தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து தமது தமிழீழத் தாயகத்தை மீளவும் நிறுவி தங்கள் இறைமையைத் தாங்களே வெளிப்படுத்த முடிவெடுத்து விட்டதாக உலகிற்கும் சிங்கள மக்களுக்கும் அறிவித்த தந்தை செல்வநாயகம் இனி சிங்கள அரசாங்கத்துடனான எந்தப் பேச்சும் தமிழீழத் தாயகத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான ஒன்றாக மட்டுமே அமையும் எனத் தெளிவாக கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 1976ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தமிழீழத் தாயக்த்தை மீள அமைக்கும் தமது முடிவை உலகிற்கு பகிரங்கமாக அறிவித்தார். 1977 தேர்தல் இந்த தமிழீழத் தாயகத்தை மீள அமைப்பதற்கான தமிழ் மக்களின் குடியொப்பமாக தமிழர் கூட்டணியினரால் அறிவிக்கப்பட்டு அத் தேர்தல் மூலம் தெரிவாகும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிறிலங்காப் பாராளுமன்றத்திற்கு அல்ல தமிழீழ அரசியலமைப்பினை உருவாக்கி செயற்படுத்தும் தமிழீழ அரசியலமைப்பு சபையின் பிரதிநிதிகளாகவே செயற்படுவர் எனவும் இவ்விலக்கினை சிறிலங்காவுடன் ஜனநாயக வழிகளில் அடைய முடியாவிடில் போராட்டத்தின் மூலம் அது வென்றெடுக்கப்படும் எனவும் உலகிற்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் குடியொப்பத்தின் மூலம் தமிழீழத் தாயகத்தை ஏற்றனர். ஆனால் எதிர்பார்த்தது போலவே சிறிலங்கா தமிழீழத் தாயகத்தை ஏற்க மறுத்தது. போராட்டம் தமிழீழ விடுதலைப்புலிகள் என்னும் தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமையில் ஆரம்பமாகி இன்று வரை தொடர்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசாங்கத்துடன் என்ன நோக்கிற்காக இனிப் பேசலாம் என தமிழ் மக்கள் 1977 தேர்தல் மூலம் பேசலாம் என மக்கள் ஆணை பிறப்பித்தனரோ அந்த ஆணையின் அடிப்படையில் இரு தேச மக்கள் என்ற தோரணையில் சிறிலங்காவுடன் பேச்சுக்களை 1985ல் சிறிலங்காவிற்கு வெளியே திம்புவில் நடாத்தினர்.

தமிழர் தாயகம் தமிழீழ மக்கள் தனியான தேசிய இனம் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை என்பன முதன்மைப்படுத்தப்பட்டு அரசியல் தீர்வு குறித்து ஆலோசிக்க ஆரம்பமான பேச்சுவார்தைகளை சிறிலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத தீர்வுகளைத் திணிக்கும் போக்கும் – பேச்சுவாரத்தை நடந்து கொண்டிருந்த நேரத்தில் சிறிலங்கா தமிழ் மக்கள் மேல் நடாத்திய இன அழிப்புக்களும் முறிவடைய வைத்தது. ஆயினும் இந்தியாவின் அனுசரணை யுடன் திம்புவில் நடைபெற்ற அப்பேச்சுவார்த்தை தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையை இனியும் உள்நாட்டுப் பிரச்சினையாகப் பார்த்து அதற்கு சிறிலங்கா அரசாங்கத்தின் எல்லைக்கு உட்பட்ட தீர்வை உருவாக்க முடியாது என்பதை உலகிற்குத் தெளிவாக உணர்த்தியது.

இதன் பின்னர் பிரேமதாசா தமிழீழ விடுதலைப்புலிகளுடன் 1989களில் இந்திய அமைதிப்படை இருக்கும் பொழுது ஆரம்பித்த பேச்சுவார்த்தை முயற்சிகள் தமிழீழ மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அணுகுவதற்குரிய தமிழீழ மக்களின் அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளே என்ற உண்மையைச் சிறிலங்காவே ஏற்றுக் கொண்ட ஒரு நடைமுறைச் செயற்பாடாகியது.

அத்துடன் இலங்கைத் தீவின் தேசிய பாதுகாப்புக்காகவும் அமைதிக்காகவும் சிங்கள சிறிலங்கா தேசத்தினரும் தமிழீழத் தேசத்தினரும் தங்கள் நாடுகளின் தனித்தன்மைகளைப் பேணிய நிலையில் சில விடயங்களில் சேர்ந்து பணியாற்ற வேண்டிய தேவைகளையும் எடுத்துக் காட்டியது.

ஆனால் பிரேமதாசா வெளித் தோற்றத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடு வது போல் காட்டிக் கொண்டு பின்னணியில் தமிழ்க் கூலிப் படைகளை வேகமாக ஆயுதமயப்படுத்தி அவர்களது ஊடுருவல்கள் மூலம் தமிழீழத்தில் குழப்பநிலைகளைத் தோற்றுவித்து தமிழீழத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பாரிய யுத்தம் ஒன்றை அந்த தமிழ்க் குழுக்கள் உடன் சேர்ந்து நடாத்த விளைந்ததன் விளைவாக பிரேமதாசா விடுதலைப்புலிகள் பேச்சு வாரத்தை 1990 யூன் 13 ல் முறி வடைந்தது.

1994ல் சந்திரிகா பண்டாரநாயக்கா மீளவும் பேச்சுவார்த்தைகளை சமாதானத்திற்காகப் பயன்படுத்தாது தனது இராணுவ நலன்களை பெருக்கும் இராணுவ தந்திரோபாய முயற்சியாக மாற்றி தமிழ் மக்கள் வரலாற்றில் அனுபவிக்காத கொடுமைகளை எல்லாம் அனுபவிக்க வைத்து வருவது இன்றைய வரலாறு.

இவ்வாறாக சிங்களத் தலைமைகள் நடாத்தும் பேச்சுவாரத்தைகள் எல்லாமே போச்சு அவர்கள் வார்த்தைகள் என்ற நிலையில் மீண்டும் நோர்வே ஏற்பாட்டாளராக நிற்க ஆரம்பமாகியுள்ள புதிய பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு பிள்ளையார் சுழி இடுவதற்கு இடையிலேயே சிங்கள அமைப்புக்கள் 15 இடம் இருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்நிலையில் தமிழர்கள் தங்கள் பலத்தைப் பெருக்கி தங்களை காப்பதொன்றே வழி என்பதை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் பெருங் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வரும் சினிமா உலகு

- ❖ ரஜனி திரை உலகில் நுழைந்த 25வருடங்கள் பூர்த்தியானதையொட்டி தமிழகமெங்கும் ரஜனி 25 என்ற பெயரில் வெள்ளி விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இதில் வசூலாகும் பணம் ரஜனியின் மனைவி நடத்தும் பள்ளிக் கூடத்துக்கு செலவிடப்படும் என்ற கூறப்பட்டு வருகிறது. மூன்று முடிச்சு திரைப்படத்தில் வில்லனாக நடித்ததின் மூலம் தமிழ் சினிமா உலகில் கால் வைத்தவர் ரஜனி. ப்ரியா படத்தில் ஒரு பூகோள ஒரு உருண்டையைச் சுழல வைத்து ஜெயிச்சுக் காட்டறேன் என்று வசனம் பேசிய ரஜனி தமிழ் சினிமா உலகையே சுழலவைக்கும் கதாநாயகனாக பிரபல்யம் பெற்று விளங்குகிறார். இயக்குனர் பஞ்சு அருணாசலமே வில்லனாக நடித்துக் கொண்டிருந்த தன்னைக் கதாநாயகனாக இழுத்துக் கொண்டு வந்தவர் என ரஜனி நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.
- ❖ மூன்று பேரைக் காட்டில் கொண்ட போய் வெவ்வேறு இடங்களில் இறக்கி விட்டு விட்டு என்ன வேண்டுமென்றாலும் பேசலாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொல்லி அதனைத் திரைப்படமாக எடுத்த படம் தான் Blairwich Project என்னும் ஆங்கிலப் படம்.
- ❖ விளையாட்டுக் காட்டுக்கள் வந்திறங்கிய பொழுது அதற்கு அமெரிக்க இராணுவம் பாதுகாப்பு அளித்துள்ள வரலாற்றுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. Pokemon cards களுக்கே இந்த இராஜ மரியாதை அளிக்கப்பட்டுள்ளது. அவ்வளவு தூரத் திற்கு போக்கிமான் காட்டூன் திரைப்படம் அமெரிக்க குழந்தைகளை கவர்ந்துள்ளது. இந்த போக்கிமான் காட்டுக்களை காசு போல பேரம் பேசி பணம் கொடுத்து வாங்குவது குழந்தைகளிடை வர்த்தக ஆற்றலை வளர்ப்பதாக உள்ளதாக கருதப்படுகிறது. நல்ல போக்கிமான் காட்டு ஒன்று 20 பவுண்களுக்கு மேல் கூட விலை போகிறதாம். போக்கிமான் என்றால் யப்பான் மொழியில் பைக்குள் பூதம் என்று பொருள். இந்த யப்பானிய கார்ட்டூன் கதாபாத்திரம் வெளி வந்து யப்பானுக்கு குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுத்துள்ளது.
- ❖ கேன்ஸ் உலகப் படவிழாவுக்குத் தெரிவாகியுள்ள சுகாசினி மோகன்லால் நடித்த வனபிரஸ்தம் படத்தில் நடிப்பதற்காக ஆறு மாதம் கதகளி நடனம் கற்ற மோகன்லால் ஏழு கிலோ நிறையுள்ள கிரீடத்தை தலையில் வைத்தபடி தினசரி பத்து மணி நேரம் நடனமாடிப் பயிற்சி பெற்றராம்.
- ❖ முதல்வனில் டி.வி. நிருபராக நடித்துப் பாராட்டுப் பெற்ற அர்ஜுன் ரிதம் படத்தில் இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் படப்பிடிப்பாளராக நடிக்கின்றார்.
- ❖ ஒரு இலட்சம் ரூபா தமிழ் சினிமாவில் முதல் முதல் வாங்கிய நடிகை யார் தெரியுமா? ஞானப் பழத்தைப் பிழிந்து பாடலை பாடியவர். இப்பொழுதும் ஊகிக்க முடியவில்லையா. கே. பி. சுந்தராம்பாள் தான் அந்த நடிகை.
- ❖ 1965 ம் ஆண்டில் வெளிவந்த Pawn Brooker என்ற படத்தில் நடிகை மார்பகங்கள் தெரிய நடித்ததினால் தோன்றிய சமுதாய எதிர்ப்புக்களின் விளைவாகவே திரைப்படங்களுக்கு அவற்றை தணிக்கைக் குழு பார்வையிட்டு Adults Only என்ற பொருள்படும் A தர சான்றிதழ் வழக்கம் ஆரம்பமாகியது.
- ❖ தமிழ்த் திரை உலகிற்கு மற்றொரு அழகுராணி அறிமுகமாகியுள்ளார். கல்கத்தாவின் அழகுராணியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரியங்கா – பெண்ணின் மனசைத் தொட்டு – என்ற படத்தின் மூலம் தமிழ்த் திரையுலில் பிரகாசிக்கும் அழகுராணிகளின் வரிசையில் இணைந்துள்ளார். அது சரி – நடிகை ஐஸ்வரியா ராய் டி.வி.யில் கண்தானம் செய்யும்படி விளம்பரத்தில் கேட்டதற்காக ஒரு வாரத்தில் 30000 பேர் கண்களைத் தானம் செய்தனராம். எப்படி இருக்கிறது அழகுராணி நடிகைகளின் செல்வாக்கு.
- ❖ கமலஹாசனின் ஹே ராம் படம் தமிழில் முதன் முதலில் சிம்பொனி இசை வழங்கப்பட்ட திரைப்படம் என்ற சாதனை முத்திரை உடன் வெளிவந்துள்ளது. இலண்டன் வோல்தம் ஸ்டோவில் மகாராணியின் அழைப்பின் பெயரில் சிம்பொனி இசையில் சாதனை புரிந்த இளையராஜாவின் சிம்பொனி இசை வெள்ளத்தில் ஹே ராமில் தமிழ் இரசிகர்கள் மிதக்கப்போகின்றார்கள். ஆயினும் மகாத்மா காந்தியின் அபிமானிகள் ஹே ராமில் இடம்பெற்றுள்ள சில காட்சிகள் குறித்து கண்ணீரில் மிதக்கத் தொடங்கி விட்டனராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவினால்

# வளர்ந்த உலகம்

- இன்றைய உலகில் நாளாந்த வாழ்வின் அங்கங்களாகியுள்ள சில பொருட்கள் கடந்த நூற்றாண்டில் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பட்டியல் போட்டுள்ளார் பிரபல தமிழ் எழுத்தாளர் சுஜாதா. இதோ அவரது பட்டியலில் இருந்து சில விவரங்கள்.
  - *1978–* ஜே. வி. சி வீடியோ ரெக்கோர்ட்டர்
  - *1982–* பிலிப்ஸ் சோனி யின் வாக்மன் மற்றும் சிடி
  - *1900–* கோடாக் பெட்டிக் கமெரா
  - *1959–* ஜெராக்ஸ் போட்டோ கொப்பியர்
  - *1966–* ஜெராக்ஸ் பக்ஸ் மெசின்
  - *1984–* ஆப்பிள் மக்கின்டோஸ் கணனி
  - *1957–* போயிங் 707 விமானம்
  - *1908–* போர்ட்டு கம்பெனி மொடல் டி மோட்டார்க் கார்
  - *1907–* ஹார்லி டேவிஸ் மோட்டார் சைக்கிள்
  - *1967–* மைக்ரோவேவ் ஓவன்
  - *1916–* குளிர்சாதனப்பெட்டி
  - *1907–* வாஸிங் மெசின்
  - *1921–* வானொலி ( ஆர். சி. ஏ கம்பெனித் தயாரிப்பு)
  - *1939–* தொலைக்காட்சி ( ஆர். சி. ஏ கம்பெனித் தயாரிப்பு)
  - *1991–* WWW உலகளாவிய இன்டர் நெட் வலையம்
  - *1928–* பென்சிலின் மருந்து
  - *1921–* பான்ட் எய்ட் பிளாஸ்டர்கள்
  - *1960–* கர்ப்பத் தடை மாத்திரைகள்
  - *1921–* பெண்கள் அணியும் ப்ரா
  - *1913–* காற்சட்டைகளில் பயன்படுத்தப்படும் சிப்
  - *1903–* ரேஸர் பிளேட்டுக்கள்
  - *1961–* குழந்தைகளின் வாயில் சப்பக் கொடுக்கும் நிப்பிள்
  - *1939 –* நைலான் துணி
  - *1949–* குழந்தைகளின் லெகோ விளையாட்டுப் பொருட்கள்

- கடந்த ஆயிரமாம் ஆண்டில் சில நூற்றாண்டுகளின் முக்கிய பண்புகள்.
  - 13ம் நூற்றாண்டு உலகில் கலைகளும் சிந்தனைகளும் வளர்ச்சி பெற்ற நூற்றாண்டாக கருதப்படுகிறது.
  - 15ம் நூற்றாண்டு கடலில் இருந்து அமெரிக்கா கண்டெடுக்கப்பட்ட நூற்றாண்டு எனப் போற்றப் படுகிறது.
  - 17ம் நூற்றாண்டு நவீன விஞ்ஞானத்துக்கு வித்திட்ட நியூட்டன் போன்ற விஞ்ஞானிகள் தோன்றிய நூற்றாண்டாக கருதப்படுகிறது.
  - 18ம் நூற்றாண்டு தொழிற்புரட்சியின் நூற்றாண்டாக திகழ்கிறது
  - 19ம் நூற்றாண்டு மின்சாரம் ரயில் போன்றவை பெருமளவில் வழக்கிற்கு வந்த நூற்றாண்டாக உள்ளது.
  - 20ம் நூற்றாண்டு அணு பிளக்கப்பட்டு அணுயுகம் ஆரம்பமாகியது. விமானங்கள் விண் வெளிக் கலங்கள் பறக்கத் தொடங்கின. சந்திரனில் மனிதன் கால் வைத்தான். தொலைக்காட்சி கணணிப் பொறிகள் உலகை நிறைக்கத் தொடங்கின. பென்சிலினின் கண்டுபிடிப்பு மருத்துவ உலகில் புதிய நம்பிக்கையினைத் தோற்றுவித்தது. 4000 கார்களுடன் 19ம் நூற்றாண்டைத் தொடங்கிய உலகு ஐந்தரைக் கோடி கார்களுடன் 20ம் நூற்றாண்டை முடித்துள்ளது. 300 மீட்டர் உயரமுள்ள பாரிஸ் நகரத்து ஈபில் கோபுரத்துடன் 19 நூற்றாண்டை ஆரம்பித்த உலகு இன்று உலகின் பல நாடுகளிலும் மிக உயரமான பல கட்டிடங்களைக் கொண்டுள்ளது. ஆனாலும் மலேசியாவின் உள்ள 452 மீட்டர் உயர பெட்ரோன்ஸ் டவரே 20ம் நூற்றாண்டு முடிகையில் உலகின் அதி உயரமான கட்டிடம் என்ற புகழைத் தட்டிச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயங்களும் சாதனைகளும் விளையாட்டு உலகச் செய்திகளும்

- 6410 கிலோ நிறையை கொண்ட லொறியையும் அதில் இருந்த ஆறு மனிதர்கள் ஒரு யானை என்பவற்றை பத்து அடி தூரத்திற்கு தனது பல்லால் இழுத்துச் சென்றுள்ளார் மதுரைத் தமிழர் பால்ராஜ்.
- உலகக் குத்துச் சண்டை வீரர்களில் உலகெல்லாம் உள்ள மக்களின் மனதில் நிறைந்தவர் முகம்மது அலி (கசியஸ் கிளே). வியட்னாம் யுத்த காலத்தில் கட்டாய அமெரிக்காவின் இராணுவ சேவைக்கு போக மறுத்து சிறைக்குச் சென்று சமாதான விரும்பிகளின் மனதில் குடிபுகுந்த முகம்மது அலி குத்துச் சண்டையினால் வரும் பார்க்கின்சன் சிண்ட்ரோம் என்னும் நோயினால் தாக்குண்டு நோயாளியாகினார். தற்பொழுது அவரின் ஒன்பது பிள்ளைகளில் ஒருவராகிய லைலா தந்தை ஓய்வு பெற்று 29 ஆண்டுகளின் பின்னர் குத்துச் சண்டைக் களத்தில் குதித்துள்ளார். 21 வயதான லைலா முதலாவது போட்டியில் பௌலருடன் நியூயோர்க் நகரில் மோதி போட்டி தொடங்கி 31வது வினாடியில் பௌலரை மண்கவ்வச் செய்துள்ளார். தந்தையின் வழியில் மகளும் சாதனைகள் புரிவார் என குத்துச் சண்டை உலகம் எதிர்பார்க்கின்றது.
- 13ம் நம்பர் அதிருஸ்டம் அற்றது என்பது பலரின் நம்பிக்கை. இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் இது பொருந்தும் அவர் பிரதமர் பதவி வகித்த கடந்த காலங்களில் முதலாம் முறை 13 நாளும் இரண்டாம் முறை 13 மாதங்களும் பதவியில் இருந்துள்ளார். ஆயினும் இதனை மூடநம்பிக்கையாக மக்கள் கொள்ளக் கூடாது என்பதை நிரூபிப்பதற்காக இம்முறை 13ம் திகதியில் பதவிப்பிரமாணம் எடுத்துள்ள பிரதமர் வாஜ்பாயை இதற்காகப் பலரும் பாராட்டியுள்ளனர்.
- ரஜனியின் தமிழ் சினிமாப் பிரவேசத்தின் 25 வது ஆண்டு ரஜனி 25 கொண்டாட்ட லோகோவில் 25 என்ற இலக்கத்தை ரஜனிக்குப் பிடித்தமான உத்திராட்ச மாலை கைகாப்பு சினிமா பிலிம் கொண்டு உருவாக்கி புதுமை செய்துள்ளனர். அதுமட்டுமல்ல இந்த விழா நித்ய ஸ்ரீக்கு ஒரு புது அனுபவத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரேநாளில் காலையில்- சாத்திரிய சங்கீதக் கச்சேரியை நடாத்திய நித்யஸ்ரீ மாலையில் ரஜனி 25ல் மின்சாரக் கண்ணா பாடலைப் பாடியுள்ளார். மேலும் ரஜனி தீம்பார்க் நிறுவி இலண்டன் மடம் துசிஸ் பாணியில் மெழுகுப் பொம்மைகளால் ரஜனியின் திரைப்படக் கோலங்களையும் வாழ்க்கையின் முக்கிய காட்சிகளையும் சித்தரிக்கப் போகின்றார்களாம். பெங்களூரில் 
சீ – 10 நகரப் பேரூந்தில் நடத்துநராக வேலை செய்த காலத்தில் மகாபாரதம் நாடகத்தில் துரியோதனாக நடித்து கதாயுதத்தை பம்பரம் போல் சுழற்றி விட்டு அதனை சுற்றி சுற்றி வசனம் பேசி தனக்கென தனியான பாணியை உருவாக்கிய சிவாஜி ராவ் இன்று 150 படங்களில் நடித்த ரஜனி காந்தாக –தமிழ்நாட்டின் சூப்பர் ஸ்டாராக இலங்கி தனது சினிமாப் பிரவேசத்தின் வெள்ளி விழாக் கொண்டாடுவது ஒரு சாதனை தானே.
- யப்பானில் ரஜனியின் தமிழ்த் திரைப் படங்கள் வெற்றிகரமாக ஓடத் தொடங்கியனை அடுத்து ஜப்பானிய நடிகரான நாம்பாராவையும் நடிகையான கெடியையும் ராஜஸ்ரீயுடனும் ரியாஸ் உடனும் ஜோடி சேரவைத்து வைத்து நட்டு என்ற தமிழ்ப் படத்தை இன்டஸ் ஹெரிட்டேஜ் நிறுவனத்தனர் தயாரிக்கினறனர். ரஜனியும் யப்பானின் பிரபல நடிகர் ஜாக்கிசானும் சேர்ந்து நடிக்கும் திரைப்படமொன்றுக்கும் ஆயத்த முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. தமிழ்த் திரைப்படங்களின் யப்பான் பிரவேசம் யப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன என்ற ஆய்வுகளையும் வேகப்படுத்தியுள்ளன. தமிழ் திரைப்படங்கள் யப்பானியர்களைக் கவரத் தொடங்கியுள்ளமை தமிழ்த் திரைப்பட உலகைப் பொறுத்த மட்டில் தமிழ் நடிக நடிகையர்களின் சாதனையெனப் போற்றப் படுகின்றது.
- 89 இலே தமிழ்த் திரையுலகிற்கு வந்த விக்ரம் பத்து ஆண்டுகளில் ஆறே ஆறு திரைப்படங்களில் மட்டும் நடித்த போதிலும் அவரது பெயர் கொடிகட்டிப் பறக்கவில்லை. ஆனால் சேது திரைப்படம் அவரைப் புகழேணியின் உச்சிக்கே தூக்கிச் சென்று விட்டது. சாப்பாடே இல்லாம தினம் இரண்டு தடவை பழரசம் மட்டும் அருந்தி 16 கிலோ எடை குறைத்து மதிய வெய்யிலில் படுத்து தோளைக் கறுக்க வைத்து கடும் முயற்சிகளின் பின்னரே விக்ரம் பைத்தியக் கதாப்பாத்திரத்துடன் தன்னை ஒன்றிக்கச் செய்து நடிப்பில் மகத்தான வெற்றிபெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாலைக் கண் உள்ளவன் என்றால் என்ன பொருள் ? இருளில் நுழைந்தவுடன் கண்கள் நாவல் பார்வை என்கின்ற ரேடொப்ஸின் என்கிற இரசாயனப் பொருளைக் தானாகவே தயாரித்துக் கொள்கின்றன. இதுவே இருளில் உள்ள பொருட்களைக் கண் பார்க்கும் பொழுது அது குறித்த தகவல்களை மூளைக்கு அனுப்புகின்றது. இதனால் மங்கல் ஒளியில் பொருட்களைப் பார்க்க கூடியதாக உள்ளது. இந்த ரேடொப்ஸின் தானாகவே உற்பத்தியாகும் தன்மை பரம்பரைத்தன்மையினால் இல்லாவிட்டால் அல்லது விட்மின் A குறைவு இருப்ப தினால் இந்த ரேடொப்ஸின் உற்பத்தி பாதிக்கப்பட்டால் மெல்லிய இருள் கூட கரும் இருளாகவே மாறிவிடும் பொருட்களைப் பார்க்க முடியாது. இதனையே மாலைக் கண் என்று தமிழில் கூறுவர்.

- இருதய நோயாளிகள் பாலுறவு கொள்ளலாமா?

நாம் என்ன வேலை செய்தாலும் ஒட்சிசன் செலவாகிறது. எமக்கு வேலைகள் செய்வதற்கு தேவையான ஒட்சிசனை இரத்தத்தில் கலக்க வைக்கும் பணி இருதயத்தினால் செயற்படுத்தப்படுகிறது. இரத்தத்தில் உள்ள ஒட்சிசனின் அளவை மெட்டில் அளவிடுவர். ஒவ்வொரு வேலையையும் செய்வதற்குப் போதிய ஒட்சிசன் அளவு இருக்குமாயின் அந்த அந்த வேலைகளை செய்ய முடியும். கீழே சில செயல்களைச் செய்வதற்கு தேவையான ஒட்சிசன் அளவை மெட்டில் தருகின்றோம்.

1 மெட் ஒட்சிசன் – நாம் சாதாரணமாக நிற்பதற்குத் தேவை.
2 முதல் 5 மெட் – குளிப்பது. படுக்கை விரிப்பது. இரண்டரை மைல் தூரம் நடப்பது போன்ற செயல்களுக்குத் தேவை.
5 முதல் 7 மெட் – தோட்ட வேலை. மணிக்கு நான்கு மைல் தூரம் நடப்பது. கணவன் மனைவிக்கு இடையிலான பாலுறவு போன்ற செயல்களுக்குத் தேவை.
7 மெட்டுக்கு மேல் – கூடைப்பந்தாட்டம் – 80 பவுண்ட்டு நிறையுள்ள பொருளைத் தூக்குவது– 24 பவுண்ட் நிறையுடன் 8 மாடிப்படிகள் ஏறுவது போன்ற செயல்களுக்குத் தேவை.
ஒருவர் ட்ரெமில் அல்லது ஸ்ட்ரெஸ் டெஸ்ட்டை செய்கையில் எத்தனை நிமிடங்கள் மார்புவலியின்றி அல்லது இரத்த அழுத்த மாற்றமின்றி அதனைச் செய்கின்றார் என்பதை ஆதாரமாக கொண்டு ஒருவரின் மெட் அளவீடு கணித்துக் கூறப்படும். ஒருவர் 5 மெட் அளவுள்ள வேலைகளை செய்யக் கூடிய நிலையில் இருப்பின் அவர் மனைவியுடன் பாலுறவில் ஈடுபடலாம். இங்கு மனைவியுடன் என்பது அதி முக்கியம் . வேறு பெண்களுடன் பாலுறவில் ஈடுபடுவதால் ஏற்படும் பதற்ற நிலை உயிருக்கே ஆபத்தாக முடியும்.

- புகைப்பிடித்தலால் ஆயுள் பாதிக்கப் படுகின்றதா?

1951 முதல் 1991 வரை நாற்பது ஆண்டுகாலம் ஒரு நாளைக்குப் பதினைந்து சிகரெட்டுக்களுக்கு குறையாமல் புகைக்கும் 34439 டாக்டர்களை வைத்து நடாத்தப்பட்ட ஆராய்ச்சியில் 20 வருடத்தில் அதாவது 1971ல் 10000 பேர் இறந்து போயிருந்தார்கள். அடுத்த இருபது ஆண்டுகளில் அதாவது 1991ல் மேலும் 10000 பேர் இறந்து போனார்கள்.இந்தக் கணக்கெடுப்பு இதே மாதிரி சிகரெட் புகைக்காதவர்களிடை நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் இறந்தவர்களுடைய தொகை சிகரெட் புகைப்பவர்களிடை இறந்தவர்களின் தொகையை விட அரை மடங்காக இருந்தது.
ஆயினும் சிகரெட் புகைத்து விட்டு நடுவயதில் நிறுத்தியவர்கள் உடைய வாழ் நாள் சிகரெட்டையே தொடாதவர்களுடைய வாழ்நாளுக்கு கிட்டத் தட்ட சமமாக இருப்பது புகைப்பிடிக்கும் இளைய வர்கள் அதனை நிறுத்தினால் அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்பில் இருந்து தப்பித்து விடலாம் என்பதை உறுதி செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்காதல் கொண்ட ஐரோப்பிய பெஸ்கி வீரமாமுனிவரானார்

இத்தாலியிலிருந்து கத்தோலிக்க மறைப் பணியாற்றவென தமிழ்நாட்டிற்கு வந்திருந்த குரு யோசப் பெஸ்கி தமிழ் படித்துக் கொண்டிருந்த நேரம் ஒரு இரும்புப்பட்டறை அருகில் மழைக்கு ஒதுங்கினார்.

அப்பொழுது அங்கே இரும்பை அடிப்பதில் ஈடுபட்டிருந்த தொழிலாளி வாரும் இரும் படியும் குருவே என சர்வசாதாரணமாக கூறினார். ஆனால் கையில் புத்தகத்துடன் நின்ற யோசப் பெஸ்கியோ வந்து உட்கார்ந்து தான் கையில் வைத்திருக்கும் நூலைப் படிக்கச் சொல்கின்றாரா அல்லது தன்னோடு சேர்ந்து இரும்படிக்கச் சொல்கின்றரா எனப் புரியாது விழித்தார். இந்த சுவையான அனுபவத்தின் ஊடாகத் தமிழின் சுவைப்பெருக்கைக் கண்ட அந்த இத்தாலியத்துறவி தமிழின் மேல் தீராக் காதல் கொண்டார். அந்த துறவி தான் வீரமாமுனிவர் என்ற பெயரில் பின்னர் தொட்டாலே தமிழ் மணக்கும் தேம்பாவணி என்னும் 18ம் நூற்றாண்டின் தமிழ்ப் பேரிலக்கியத்தை இயற்றினார்.

தேம்பாவணியை ஒரு சொல் பல பொருள் தரக்கூடிய வகையிலும் எதுகை மோனை துள்ளிச் செல்லக் கூடிய வகையிலும் வீரமாமுனிவர் படைத்து அதனைப் படிப்பவர்கள் அதனைக் கீழே வைக்க முடியாத அளவுக்கு சொற்சுவை பொருட்சுவை நிறைந்த காவியமாக அதனை உருவாக்கினார்.

இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை கருப்பொருளாக கொண்ட தேம்பாவணி கிறிஸ்தவத்தை தமிழ் மயப்படுத்துகின்றது. இயேசு பிறந்ததை கேள்வியுற்ற ஏரோது பலஸ்தீனத்தில் பிறந்த இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை எல்லாம் வெட்டிக் கொள்ளும் படி இட்ட கட்டளைக்கு அஞ்சி இயேசுவை அன்னை மரியாளும் வளர்ப்புத் தந்தை யோசேப்பும் எகிப்துக்கு கொண்டோடியதை கூறவந்த வீரமாமுனிவர் தமிழ் நிலப்பரப்புக்களான குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலையூடாக திருக்குழந்தையைக் கொண்டோடுவதாக காட்டி நிலவர்ணனை செய்யும் பொழுது இயேசுவின் வாழ்க்கை வட்டம் தமிழ் மண்ணில் நிகழ்வது போல அற்புதமான சொற் சித்திரம் தேம்பாவணியில் இடம் பெறுகிறது.

திருக் காவலூர் அம்மானை அடைக்கலமாதா மேல் கிளித் தூது போன்ற பல தமிழிலக்கிய நூல்களை படைத்த வீரமாமுனிவர் சிற்றிலக்கிய வடிவங்களை மிகத் திறமையாக கையாண்டு மக்களின் மனதினைக் கவர்ந்த கவிஞனாக இன்றளவும் இலங்குகின்றார்.

வீரமாமுனிவரே தமிழில் சிறுகதை என்னும் வடிவத்தை தோற்றுவித்தவர் என்பது நம்மில் பலருக்குத் தெரியாத உண்மை. 18ம் நூற்றாண்டு முதல் இன்று வரை மக்களை குலுங்கி குலுங்கிச் சிரிக்க வைக்கும் பரமார்த்த குருவும் சீடரும் என்னும் நகைச்சுவை சிறுகதைகள் வீரமாமுனிவரால் உருவாக்கப்பட்ட முதல் தமிழ்ச் சிறுகதைகளாகும்.

வீரமாமுனிவரின் மற்றொரு மகத்தான பணி எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகம் செய்தமையாகும். வீரமாமுனிவர் காலம் வரை தமிழில் எ ஏ ஒ ஓ எழுத்துக்களை வித்தியாசப்படுத்துவதற்கு எ வின் மேலும் ஒ வின் மேலும் குற்று இடப்பட்டு வந்தது. வீரமாமுனிவரே உயிர் எழுத்துக்களுக்கு புள்ளியிடும் முறையை மாற்றியமைத்து கால் வைத்து ஏ னாவையும் காலில் சுழித்து ஓ வன்னாவையும் எழுதும் வழக்கத்தை தோற்றுவித்த பெருமைக்குரியவர். ஒரு வெளிநாட்டவர் எழுத்துச் சீர்திருத்தத்தை செய்த பொழுது அவரின் தமிழ்ப் புலமைக்குத் தலை வணங்கி அன்னை தமிழ் அதனை ஏற்றுக் கொண்டாள்.

வீரமாமனிவரின் மற்றொரு சிறப்புப் பணி சதுர் அகராதி தயாரித்து தமிழை பிறநாட்டவரும் இலகுவாக படிக்க வழிகாட்டியது. இவ்வாறாக வீரமாமுனிவரின் தமிழ்ப்பணிகளை அடுக்கி கொண்டே போகலாம் ஆயினும் இடச்சுருக்கம் கருதி அவரின் சில பணிகளை மட்டுமே தொட்டுக் காட்டி வீரமாமுனிவர் தமிழ் மொழியை ஒரு தொடர்பு சாதனமாக கருதாது அதனை வாழ்வுக்கான வாழ்வியலாக கருதியவர் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

தமிழ் வாழ்வு வாழப்புறப்பட்ட வீரமாமுனிவர் காவி உடைதரித்து சந்தனத் திலகமிட்டு தமிழ்த் தவமுனியாக தன்னை மாற்றி கிறிஸ்தவத்தையும் தமிழ் மயப்படுத்தி தமிழ் மக்களின் ஆன்மீக நெறிகளில் ஒன்றாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலாச்சாரத்தை விளக்கும் பாடல்

தமிழ்க் கலாச்சாரம் கலாச்சாரம் என்று கத்தும் மனிதர்களை நிறையக் கண்ட பொழுதும் தமிழ்க் கலாச்சாரம் என்றால் என்ன என்ற தேடுதல் ஓயவில்லை. பாரதிராஜாவின் தாஜ்மகால் பாடல் ஒன்று தமிழ்க் கலாச்சாரம் என்றால் என்ன என்பதற்கு நல்லதோர் விளக்கமாக அமைகிறது. இதுவும் ஒரு தேடலே அல்லாது விதித்த விடை அல்ல. தேடல்கள் வளர்ந்து தேசம் சிறக்கட்டும். தமிழர்களின் தொன்மையை முதன்மையை உலகு இனங்காண வைக்க வேண்டும். தமிழர்கள் மக்கள் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக் கணத்துக்கு உரியவர்கள் என்பது உறுதியாகி தமிழர்களுக்கு வரலாறு உண்டா என்று கேட்பவர்களின் வரலாற்றை மாற்றட்டும். திருப்பாச்சி அரிவாளைத் தீட்டிக் கிட்டு வாடா வாடா என்பது தான் தமிழர் கலாச்சாரம் என்பதற்கு விடையாக அமைந்த தாஜ் மகால் படத்தில் வரும் அந்தப் பாடல்.

இந்தப் பாடல் தமிழ் மக்களின் கிராமிய வாழ்வை வெளிக்காட்டுகிறது. தமிழர்களுக்கும் ஆபிரிக்க தொல்குடி மக்களுக்கும் இடை சில பலத்த ஒற்றுமைகள் உள்ளன. இருபகுதியினருமே தோல்கருவிகளை தங்கள் வாழ்வின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்துபவர்கள். உலகின் தொல்குடியினங்களின் சிறப்பு பண்புகளில் இதுவொன்று என்பது மானிட ஆய்வாளர்களின் கருத்து. தமிழர்களின் நாட்டார் பாடல்கள் கிராமியப் பாடல்கள் எல்லாவற்றிலும் தோல்கருவிகள் அழகு இசை பொழிவது வழமை. இந்தப் திருப்பாச்சி அரிவாளைத் ஒருக்கா தூக்கி தாழும் சுழற்ற [illegible] என்று [illegible] [illegible] [illegible] தாளம் துள்ளல் நடையிடுகிறது வீரம் தெறிக்கிறது.

எட்டுத் திசை தூக்கிருக்கு [illegible] வைச்ச வாடா வாடா எட்ட நின்னும் துணிவை எட்டித் தொடு வாடாவாடா என அழைக்கும் அளவுக்கு துணிவு கூடும் பாடல். ஆணுக்கு மட்டுமா வீரம் தமிழர்பெண்ணும் வீரத்திற்கு சளைத்தவளல்ல என்பதை வாள் சுழற்றும் ஆண்களுடன் சரிசமமாக கவிதையால் வாயாடும் வரிகள் விளக்குகின்றன.

உப்பு தின்டால் தண்ணி குடி தப்பு செஞ்சால் தலையில் அடி. பரம்பரையாய் எங்கள் கொள்கையடா. மானம் தானே வேட்டி சட்டை மற்றதெல்லாம் வாழை மட்டை மானம் காக்க வீரம் வேணுமடா. அட சோழக் கூழு கேட்டு வந்தால் சோறு போட்டு விசிறி விடும் வீரமுள்ளது எங்கள் வம்சமடா சோறு போட்டும் கழுத்தறுத்தால் கூறு போட்டு பங்கு வைக்கும் வீரம் தானே எங்கள் அம்சமடா. நாங்க வம்பு சண்டைக்கு போறதில்லை வந்த சண்டையை விடுவதில்லை வரிப்புலிதான் தோற்றதில்லையடா. எனத் தொடரும் பாடல் தமிழர்களின் வாழ்வியலில்புறப் பொருளாக வீரம் முதன்மை பெறுவதை தெளிவாக விளக்குகிறது. இந்த வீரம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமாக இருப்பதால் அவர்கள் தங்களது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க காதல் செய்யும் துணிவு உடையவர்களாய் இலங்குகின்றனர்.

இதனால் காதல் தமிழர்களின் அக நெறியாகிறது. ஆக கூட்டு மொத்தமாக காதலும் வீரமும் உள்ள வாழ்வு தான் தமிழர் வாழ்வு. காதலும் வீரமும் கொண்ட வாழ்வை வாழ்வது தான் தமிழர் கலாச்சாரம்.

இந்தப் பாடல் இவைகளை வெளிக் கொணரும் சக்தி வாய்ந்தது. இந்தப் பாடலில் பெண்களும் ஆண்களும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்வதாக அமைந்த பகுதியில் வரும் சில வரிகள் இடக்கரடக்கலில் அடக்கப்பட வேண்டியவை தணிக்கைக்கு உரியன என்று சிலர் கூறலாம் ஆனால் நாட்டார் இலக்கியம் மக்கள் இதயத்தின் அப்பணமான வெளிப்பாடு என்ற வகையில் நாட்டார் பாடல்களில் இப்படியான தணிக்கையற்ற போக்குகள் அமைவது இயற்கை. எது எப்படியிருப்பினும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் பார்ப்பின் இந்தப் பாடல் தமிழ்க் கலாச்சாரம் என்பதற்கு பொருள் தரும் பாடலே.

தமிழர்கள் உடைய கலாச்சாரம் என்றால் என்ன என்பவர்களுக்கு பதில் சொல்வதற்கு முன்னர் முதலில் கலாச்சாரம் என்றால் என்னவென்று பார்ப்போம். மக்களுடைய இயல்பான வாழ்வின் வெளிப்பாடே கலாச்சாரம். மக்கள் ஒளிவு மறைவு அற்ற உள்ளத்துடன் வாழும் பொழுது அவர்களின் வாழ்வு இயற்கையினைப் பிரதிபலிக்கும். அவ்வகையில் தமிழ்த் தொல் குடியினங்களுடைய ஒளிவு மறைவு அற்ற வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தும் இப்பாடல் தமிழ்க் கலாச்சாரம் என்றால் என்ன என்பதை இலகுவாக வெளிப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் நினைவு தினத்தில் தனயனை நினைக்க வைத்த கொடுமை

இலங்கைத் தீவில் தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் சமஉரிமை இருக்க வேண்டுமென வலியுறுத்திய அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் 23வது நினைவு தினம் 08.02.2000ம் அன்று இடம்பெற்றது.

1902ம் ஆண்டு கார்த்திகை 8ம் நாள் பிறந்த ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் கேம்பிரிஜ் பல்கலைகழகத்தில் சட்டத்துறை படிப்பை முடித்து 1927ல் தாயகம் திரும்பி மாபெரும் சட்டமேதையாக பெரும் புகழ்பெற்றார்.

1934ல் பருத்தித்துறை தொகுதிக்கான இலங்கை சட்டசபை பிரதிநிதியாகத் தெரிவானதன் மூலம் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணி ஆரம்பமாகியது. 1931ம் ஆண்டு அமுலுக்கு கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியலமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத் தொகுதிக்கான தேர்தலை மக்கள் பகிஸ்கரித்ததின் பின்னரும் - காலனித்துவ பிரித்தானிய அரசாங்கம் அதனை பெரிதுபடுத்தாது தொடர்ந்தும் பெரும்பான்மை இனத்தின் ஆட்சி அதிகாரங்களை அதிகரித்து வந்த நிலையில் - மீளவும் சட்டசபையில் தமிழர் பிரதிநிதிகள் அதனை எதிர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த தேவையே ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அரசியல் பிரவேசத்திற்கான காரணமாகியது.

இலங்கையில் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையில் வேறுபட்ட கருத்துக்கள் உண்டென்பதால் பிரித்தானியா வட்டமேசை மகாநாடொன்றில் அரசியல் கட்சிகள் அனைவரதும் கருத்துக்களை கேட்டறிந்து அதன் அடிப்படையில் சுதந்திரத்தை நோக்கிய சட்டவாக்கங்களை செய்தல் வேண்டும் என்பது ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் ஆரம்ப அரசியல் இலக்காக இருந்தது.

ஆனால் இலங்கையின் சட்டவாக்க சபையின் தலைவராக திகழ்ந்த சிங்களத் தலைவரான டி.எஸ். சேனநாயக்கா வட்டமேசை மகாநாட்டிற்கு இணங்க மறுத்ததும் அல்லாமல் எந்த ஒரு அரசியல் கட்சியை சேர்ந்த பிரதிநிதிகளையும் கட்சி ரீதியாக விளக்கமளிக்க பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளுக்கான செயலர் சந்திக்கவும் அனுமதிக்க கூடாது எனவும் நிபந்தனை விதித்தார்.

மற்றொரு சிங்களத் தலைவரான பண்டாரநாயக்காவோ ஒரு படி மேலே போய் கடைசி இந்தியன் இலங்கைத் தீவை விட்டு வெளியேறும் வரை தனக்கு நிம்மதியில்லை எனவும் அதுவரை தன் ஆன்மா சாந்தியடையாது எனவும் பச்சை வகுப்புவாத அரசியலை 1940களிலேயே ஆரம்பித்தர்.

இவற்றைக் கண்ட ஜி ஜி பொன்னம்பலம் அவர்கள் இனியும் சிங்களவர்களுடன் கூடிநின்று பேசி தமிழர்களின் உரிமைகளை பெற்று கொள்வது என்பது அர்த்தமற்ற ஒன்று என்று கூறி தமிழர்களின் தனித்துவத்தை உணர்த்துவதற்காக 1944 அக்டோபர் 29ல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்னும் இலங்கைத் தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியை தொடங்கினார்.

இரண்டு தேசிய இனங்களின் அரசுக்களை காலனித்துவம் கைப்பற்றியது ஆகவே இலங்கை தீவில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் 50க்கு 50 உரிமையுண்டு என உறுதியுடன் பிரகடனப்படுத்தி இலங்கைத் தீவில் சிங்கள தமிழ் தேசிய இனங்களுக்கு ஏற்படுத்தப்படும் எந்த ஆட்சியமைப்பிலும் இந்த 50க்கு 50 என்ற தன்மை இருக்க வேண்டுமென ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் ஆணித்தரமாக கோரிவந்தார்.

சோல்பரி ஆணைக்குழுவின் முன்பாக இதற்காக வாதாடிய பொன்னம்பலம் பிரித்தானிய அரசாங்கத்துடன் தான் கடிதங்கள் மூலமாகவும் நேரடியாகவும் நடத்திய பேச்சுக்கள் எதுவும் பயனளியாத நிலையில் வெளியிடப்பட்ட சோல்பரி அறிக்கைக்கு எதிராக 1945ம் ஆண்டு கார்த்திகை 3 ம் திகதி பிரித்தானியாவின் காலனித்துவ செயலர் ஹால் அவர்களுக்கு அனுப்பி வைத்த கடிதம் வரலாற்றுப் புகழ் மிக்கது.

இக்கடிதத்தில் தமிழர்களே இலங்கைத்தீவின் உண்மையான பழங்குடிகள் இலங்கைத்தீவின் ஆட்சியாளர்களாக திகழ்ந்தவர்கள். பல சிங்கள அரசர்கள் தமிழர்களின் வழித்தோன்றல்களாகவும் இருந்துள்ளனர். பிரித்தானியா கைப்பற்றும் போதிருந்த அரசர்கள் இதற்கு நல்ல சான்றுகளாக உள்ளனர். பல வகைகளில் சிங்களவர்களின் கலாச்சாரம் கொள்கைகள் என்பவற்றில் தமிழர்கள் தங்கள் பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர். பிரித்தானியாவின் மூலதனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட தமிழர்களின் மனிதவலுவுமே பெருந் தோட்டவாக்கத்தை உருவாக்கியது. இவ்வாறாக பலவழிகளில் தமிழர்களால் இலங்கைத்தீவு முன்னேற்றம் அடைந்துள்ளது. என எழுதி தலைகளை எண்ணி பெரும்பான்மை சிறுபான்மை பேசுவதில் உள்ள குறைபாட்டினை அழகாக சித்தரித்துள்ளார்.

1944 முதல் 1976 வரை தனக்கு ஏற்பட்ட அரசியல் அனுபவங்களின் அடிப்படையில் தமிழீழத் தாயகத்தை மீள அமைப்பது ஒன்றே தமிழர்களின் அரசியல் சுதந்திரத்தை மீள்விக்குமென்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஜி ஜி. யும் ஏற்றார்.

இதன் வெளிப்பாடாக தனித் தமிழீழத் தீர்மானத்தை மக்களிடை விநியோகித்தமை சட்டவிரோதமானது என சிறிலங்காவால் தொடரப்பட்ட டிரயல் அட் பார் வழக்கில் ஜி ஜி பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகி தமிழர்களின் இறைமை போர்த்துக்கேயர் சங்கிலி மன்னனை தோற்கடித்த போது போர்த்துக்கேயரிடம் சென்றதென்றும் பின்னர் சுதந்திர இலங்கையில் தமிழர்கள் இடமே வந்து அடைந்துள்ளது அதனை சிறிலங்கா தடுக்க முடியாது என சட்டரீதியாக வாதிட்டு அவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து வெற்றி பெற்றார். இந்த வெற்றி தமிழீழத்தின் இறைமையை இனம் காட்டியது.

துரதிருஸ்ட வசமாக தமிழீழத்திற்கான குடியொப்பம் 22.05.1977ம் திகதிய பொதுத்தேர்தலால் தமிழ் மக்களால் நிறைவேற்றப்பட்டதை காண்பதற்கு முன்பாக 09.02. 1977 ல் ஜி ஜி. பொன்னம்பலம் அமரரானார்.

ஆயினும் மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் என்ற சொல் என்னும் வள்ளுவத்தின் வரைவிலக்கணமாய் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உண்மைகளை சர்வதேசத்தினருக்கு வெளிப் படுத்தும் குரல் ஒலியாகவும் சிறைகளில் சித்திரைவதைப்படுத்தப்படும் தமிழ் மக்களில் பலர் நீதி பெற உழைத்த சட்டத்தரணியாகவும் ஜி ஜி. பொன்னம்பலத்தின் புதல்வர் குமார் பொன்னம்பலம் வீரத்துடன் கொழும்பில் செயற்பட்டு வந்தார். அவரை 05.01.200ல் சந்திரிகா அரசாங்கம் இனப்படுகொலை செய்து கொடிய அரச பயங்கரவாத செயலுடன் மில்லேனியத்தை ஆரம்பித்துள்ளது.

தந்தை தமிழர்களின் தாயகத்தின் இறைமையை தனித்துவத்தை இனங் காட்ட தனயனோ தாயகத்தின் அந்த இறைமையை வென்றெடுக்க நாம் என்ன செய்ய வேண்டும் என வழிகாட்டி நிற்கும் மாமனிதராக அமரத்துவம் எய்தியுள்ளார். இதனாலேயே அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் மாமனிதர் என்னும் எங்கள் தேசத்தின் அதி உயர் விருதினை அளித்து கௌரவித்துள்ளார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளே என்பதை கொழும்பில் வாழ்ந்து கொண்டே நெஞ்சுறுதியுடன் உலகத்திற்கு எடுத்துச் சொன்ன மகத்தான தமிழர். இந்த நெஞ்சுறுதியுடன் ஒவ்வொரு தமிழீழ மகனும் செயற்படுவானாயின் உலகம் எமது மக்களுக்கு சிறிலங்கா இழைக்கும் சொல்லொணா இன்னல்களை இனங்காண வெகுநாள் எடுக்காது.

உண்மைக்கு சாட்சி சொன்னவர்களே மரணத்தை வென்ற மாமனிதர்களாக வரலாற்றில் இடம்பெறுகின்றனர். அவ்வகையில் தமிழ் மக்களின் உண்மை நிலைக்கு சாட்சி சொல்லி சிறிலங்கா தன் சிறைச்சாலைகளில் சித்திரவதைப்படுத்திய எத்தனையோ தமிழ் மக்களை வழக்காடி விடுவித்து தமிழர்களின் நெஞ்சங்களிலும் வரலாற்றிலும் நீங்கா இடம்பிடித்த குமார் பொன்னம்பலம் அவர்களை அழித்ததின் மூலம் சந்திரிகா அரசாங்கம் தான் உண்மைகளுக்கு முகம் கொடுக்க மறுக்கும் கோழை அரசாங்கம் என்பதை உலகிற்கு தெளிவாக இனங்காட்டியுள்ளது. இந்த கோழை அரசாங்கம் துணிவுடன் தமிழர்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பது என்பது என்றும் பகற்கனவே.

இந்நிலையில் ஜி ஜி. பொன்னம்பலத்தாலும் குமார் பொன்னம்பலத்தாலும் ஆசிக்கப்பட்ட தமிழீழத் தாயகத்தின் விடுதலையை வென்றெடுக்க தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நாம் அளிக்கும் பேராதரவே பொன்னம்பலம் குடும்பத்திற்கு தமிழீழ மக்கள் காட்டும் நன்றிக் கடனாக அமையும். எங்கள் வரலாற்றுடன் தங்களை இணைத்துக் கொண்ட அவர்களின் ஆன்மாக்கள் எங்களின் வரலாற்றுக்கு எழுச்சி தரக் கூடியதான எமது தாயகவிடுதலையிலேயே தங்கள் இலக்குகள் நிறைவேறினமை கண்டு சாந்தி அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழே உலகின் முதன் மொழியென்ற சுவாமி ஞானப்பிரகாசர்

103 மொழிகளில் புலமை வாய்ந்த பன்மொழிப்புலவர் நல்லைச் சுவாமி ஞானப்பிரகாசரின் 53வது நினைவு தினம் 22.01. 2000 அன்று இடம்பெற்றது.

சுவாமி ஞானப்பிரகாசர் என்றதுமே மகான்களின் ஆத்மசக்தி அவர்கள் விட்டுச் சென்றவைகள் வாயிலாக உயிர்க்குறுதி செய்து கொண்டிருக்கும் என்ற எங்கள் தாயகத்து தமிழ்ப் பெரியார் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் வாக்கு தான் நினைவுக்கு வந்தது. சுவாமி ஞானப்பிரகாசர் விட்டுச் சென்று இன்று எமக்கு உயிர்க்குறுதி செய்து கொண்டிருக்கும் இரு பெரும் துறைகள் உலகத் தமிழாராய்ச்சியும் எங்கள் தாயகத்தின் வரலாற்று ஆய்வும் ஆகும். இவை இரண்டிலுமே விஞ்ஞான அணுகு முறைகளைப் புகுத்தி உலக அரங்கிலே எமது மொழியையும் எமது வரலாற்றையும் பற்றிய ஆய்வுகளுக்கு அடித்தளமிட்டவர் சுவாமி ஞானப்பிரகாசர் என்றால் மிகையாகாது.

1928ல் சுவாமி ஞானப்பிரகாசர் தான் எழுதிய யாழ்ப்பாண விமர்சனம் என்ற வரலாற்று நூலின் முன்னுரையில் கூறும் பின்வரும் கருத்து முக்கியமானது என்பதினால் அவருடைய மொழியிலேயே அதனை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

"யாழ்ப்பாணத்துப் பண்டை நாள் வரலாற்றின் கணுள்ள சிக்கல்களையெல்லாம் இந்நூல் அறுத்து விடும் எனக் கூற அமையாது. எமது ஆராய்ச்சி அறிஞர்களால் மேலும் ஆராயப்பட வேண்டுவதொன்று. எல்லாத்துறைகளிலும் முடிந்த முடிபை எடுத்தோதுவதன்று. பலப்பல அருந்துறைகளில் புது ஆராய்ச்சியின் மேல் ஊக்கத்தைக் கிளர்த்தி விடுவதே இந்நூலின் கருத்தாமென அறிக".

இந்த முன்னுரை சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் மொழி தமிழர்களின் வரலாறு என்பவற்றை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்வதற்கான ஒரு யுகத்தை தோற்றுவிக்க எந்தஅளவுக்குத் துடித்தார் என்பதை உலகிற்கு தெளிவாக் குகின்றது.

சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த 125 வது ஆண்டு இவ்வாண்டு. ஆம் அவர் 1875ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் நாள் மானிப்பாயில் பிறந்தார்.

இவர் பிறந்த காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் தலைமையிலான பண்பாட்டு மீட்டுணர்வு இயக்கம் உச்சக் கட்டத்தில் இருந்தது.

சைவம் உயிர் தமிழ் உடல் சைவம் தழைக்க தமிழ் வளர்க்கப்படல் வேண்டும் என்பது நாவலர் வழி வந்த கந்தபுராணக் கலாச்சாரத்தின் தலைமைப் பண்பாக இருந்தது.

நாவலர் சைவம் என்பது ஒரு மதம். தமிழ் என்பது ஒரு மொழி. ஆதலால் சைவக்கோயில்களைதட தமிழ்க் கோயில்கள் என்று அழுத்தமாக கூறியும் கூட சைவமும் தமிழும் ஒன்றென்ற ஒரு காலம் உருவாகியமை வரலாறாக உள்ளது.

இந்த வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்றை உருவாக்கியவர் சுவாமி ஞானப்பிரகாசர். தமிழர்களின் தேசியம் உறுதிப்படுவதற்கு இந்த வகையிலான ஆய்வு சமுகத்தின் தேவையாக மாறியது.

1920களில் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் இனரீதியான சட்டசபைப் பிரதிநிதித்துவத்தை உருவாக்கிய பொழுது தமிழர்கள் இடையில் தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்த வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாயிற்று. இதனை உணர்ந்த சுவாமி ஞானப்பிரகாசர் தமிழின் பூர்வசரித்திரமும் சமயமும் என்ற ஒரு சிறு நூலினை வெளியிட்டார்.

இதில் வேளாளர் என்ற சொல் ஆரம்பத்தில் எல்லா மக்களையும் குறிக்கும் சொல்லாக இருந்தது என்பதை நிறுவி தமிழர்களிடை ஊடுருவாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட சாதீய அமைப்புக்கள் தமிழரது தேசியத்தன்மைக்கு எதிரானது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்து தமிழர்களின் தேசியத் தன்மைக்கு புத்துாக்கம் அளித்தார்.

சுவாமி ஞானப்பிரகாசர் தமிழரிடை சாதீயத் தன்மைகள் மறைவதற்காக வறுமைப்பட்ட கல்வியுரிமைகள் மறுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மத்தியில் ஆற்றிய பணிகளினால் அவரைத் தாழ்த்தப்பட்ட மக்களின் சுவாமி என கத்தோலிக்க திருச்சபையினரே தாழ்த்தி வைத்து அவரது ஆய்வுப் பணிகளுக்கு ஆதரவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்காது விட்ட வரலாறுகளும் நிறையவே உண்டு.

ஆயினும் சுவாமி ஞானப்பிரகாசர் துணிவுடன்செயற்பட்டு தமிழ் மொழியினை தமிழர் வரலாற்றினை மொழியியல் ஆய்வாக வரலாற்று ஆய்வாக வளர்க்க முற்பட்ட பொழுது தமிழின் தமிழர்களின் தொன்மை பெருமை விஞ்ஞான அணுகு முறையுடனும் ஒப்பீட்டு ரீதியாகவும் வெளிவரும் அறிவியல் யுகம் ஒன்று ஆரம்பமாகியது.

இந்தப் பணியின் தலைமையாக ஆசானாக சுவாமி ஞானப்பிரகாசர் திகழ தாவீது அடிகள் தனிநாயக அடிகள் போன்றவர்கள் தொடர்ந்து இந்த அறிவியல் அணுகுமுறையினை வளர்த்து உலகத் தமிழராய்ச்சி மகாநாடுகள் அமைப்புக்கள் தோன்ற வழிவகுத்தனர்.

இதனால் உலகத் தமிழராய்ச்சிக்கு வித்திட்டவராக சுவாமி ஞானப்பிரகாசர் வரலாற்றில் இடம் கொள்கின்றார். இவரது ஆய்வுப் பணிகளின் முக்கியத்துவம் கருதி ஜேர்மன் அரசாங்கம் இவருக்கு நினைவு முத்திரை வெளியிட்டு கௌரவித்தமை அனைத்து தமிழருக்கும் பெருமை தரும் செய்தி.

ஆயினும் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழர்களின் வரலாற்றினை வெளிக் கொணர்டு வருவதற்கு எடுத்த முயற்சிகள் அவர் 1947ல் காலமாகியதன் பின்னர் அவர் எதிர்பார்த்த அளவுக்கு திருப்பதிகரமாக நடைபெறவில்லை என்பது வேதனையான உண்மை.

தனது கத்தோலிக்க மறைப்பணிகளுக்கு மத்தியிலும் சுவாமி 30க்கு மேற்பட்ட வரலாற்று படைப்புக்களை வெளிக் கொணர்டு வந்தவராக திகழ்கின்றார். ஆனால் இவருக்குப் பின்னர் இத்தனை நூல்களை தனியாக வெளிக் கொணர்வரும் அளவுக்கு ஆராய்ச்சியாளர்கள் நம்மிடை தோன்றாமையும் இடதுசாரிச் சிந்தனைகளில் தமிழீழ மக்களினதும் தேசத்தினதும் வரலாற்றை சிங்கள மக்களினதும் தேசத்தினதும் அங்கமாகப் பார்த்த பேதமைகளுமே தமிழர்களுக்கு வரலாறு உண்டா எனச் சிங்களப் பேரினவாத புத்தி ஜீவிகளும் சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்தின் தலைமைகளும் நம்மை எள்ளி நகையாட இடமளித்தது.
இன்று சுவாமி ஞானப்பிரகாசரின் 53வது நினைவு தினத்திலாவது சுவாமி ஞானப்பிரகாசரின் பிறப்பின் 125 வது வருட ஞாபகார்த்தமாக தமிழர்களின் வரலாற்றை தமிழர் தேசத்தின் வரலாற்றை அறிவார்ந்த நிலையில் வெளிக் கொணர்வதற்கு இவ்வாண்டில் உலகெங்கும் பரவி நிற்கும் தமிழர்கள் சிந்திப்பார்களானால் அதுவே சுவாமி ஞானப்பிரகாசருக்கும் அன்னைத் தமிழுக்கும் நம் தேசத்திற்கும் செய்யும் மிகப் பெரிய சிறப்பாக அமையும். வணக்கம் நன்றி

## வன்னி மகள் பாட்டு

கண்ணீரே என் வாழ்க்கை
என்று எழுதியவன் எங்கே
வன்னிக் காட்டை அதிர வைத்தது
அன்னையின் பொருமல்

செந்நீரால் நாம் செதுக்கிய கழனிகளை
பாழ்படுத்திய பாதகர்கள் வாழ்வார்களா
மூலையில் முனகி கிடந்த தாத்தாவின் முனகல்
பாடுபட்ட நெஞ்சங்களின் நெஞ்சத்துப் பரிதவிப்பு

அப்பாவின் படத்தை நிமிர்ந்து பார்த்தேன்
களமாடிய அவர் கண்கள் சுதந்திரத்தின் சுடர்கள்
மெதுவாகப் படித்துக் கொண்டிருந்த
புத்தகத்தை மூடினேன்
பொங்கி எழுந்தன ஓயாத அலைகள்
சுதந்திரத்தின் மூன்றாவது பேரலை

அம்மாவின் வாழ்வளித்தவன்
அப்பாவின் உயிர் குடித்தவன்
தாத்தாவின் தேசம் குலைத்தவன்
ஆட்டிலறி வீச்சுக்கு இலக்காகி நின்றான்
கைகள் விசைகளை அழுத்த
எங்கள் மண் சொந்த மண்
விடியலில் குளித்தது– எங்கோ
மறைந்தனர் எங்கள் பகைவர்கள்

மீண்டும் வரலாறு வனப்புற்றெழுந்தது
காடும் தமிழர் வீரம் புகழ்ந்தசைந்தது
நாமும் கைதொழுதோம் ஓயாத அலை
மாவீரர்களை
நாளும் இனி எம் மண் காத்திட உதவுதல்
முதல் வேலை
நீரும் வாரும் புலம்பெயர் தமிழர்களே
தாரும் உதவிகள் தமிழீழத் தாயகம் விரைவில்
மீண்டிடவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சமாஜம் தந்த சுவாமி கெங்காதரானந்தா

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமியால் பாலயோகி என இனங்காட்டப்பட்ட திருகோணமலை கெங்காதரானந்தா சுவாமிகள் யோகர் சுவாமியினைப் போலவே தென் தமிழீழத்தின் தலைசிறந்த தவசிரேஸ்டராக இலங்கியவர். அவரின் 9வது அமரத்துவ தினம் 16.02.2000ல் இடம்பெற்றது. .

புற வாழ்வில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு கெங்காதரானந்தா சுவாமிகளால் நிறுவப்பட்ட சிவயோக சமாஜ அனாதை இல்லம் வாழ்வளிப்பது போலவே ஆன்மீக வாழ்வில் ஆதரவைத்தேடிய ஆன்மாக்களின் சரணாலயமாக விளங்கியவர் பிரம்மஞானி ஸ்ரீமத் கெங்காதரானந்தா சுவாமிகள்.

இவர் 1921ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் நாள் ஆதிசங்கரர் பிறந்த பொன்னாடு எனப்புகழ்பெற்ற கேரளவில் பிறந்து தனது 19வயதில் தமிழீழத் தாயகத்தில் தட்சண கைலாயம் எனப் புகழ்பெற்ற திருகோணமலையில் ஆன்மீகப் பெருவாழ்வை ஆரம்பித்தவர். அன்று முதல் 1991ம் ஆண்டு பெப்பரவரி 16ம் நாள் அமரத்துவம் எய்தும் வரை 51 ஆண்டுகள் திருகோணமலையை மையமாக கொண்டு சிவப்பணி செய்து தென்தமிழீழத்தின் ஆன்மீக உறுதிப்பாட்டிற்கு அளப்பரிய சேவைகள் புரிந்தார்.

இவரால் 1959ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சிவயோக சமாஜம் ஆச்சிரமம் தெய்வீகம் தவழும் பூமி மட்டுமல்ல சாதி சமய பேதங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் ஆதரவு தேடியவர்களுக்கு ஆதரவளிக்கும் மனிதாய சேவை நிலையமாகவும் மாறியது.

உட்கண் திறக்கும் திறவு கோல் இங்கு தான் உண்டு- வேறு எங்கும் தேட வேண்டாம் - உச்சி மலையில் தவக்குகையில் உள்ளடக்கி - உள்நோக்கி இருந்தால் அகக்கண் திறக்கும் உண்மை - என்று மாதுமை அம்மை சமேதரரான திருக்கோணேஸ்வரப் பெருமானைச் சுட்டிக்காட்டி அவன் திருக்கோயில் முன்பாக கடலுக்கு அண்மையில் உள்ள கற்குகையில் கடும் தவம் செய்து தவவடிவெடுத்த பின்னரே கெங்காதரானந்தா சுவாமிகள் சிவயோக சமாஜத்தை நிறுவினார்.

சுவாமிகள் யோகசான சக்தியினால் படுத்தபடியே உடம்பை அந்தரத்தில் மேல் எழுப்புதல் - நீர் மேல் மிதத்தல் போன்ற பல செயற்பாடுகளைச் செய்து காட்டி பலர் யோகக்கலை பயில ஊக்குவித்தவர். ஆயினும் அவரின் முழு நோக்கும் சிவபணியாக இருந்தமையால் ஏழு சுடு தண்ணீர்க் கிணறுகள் இருக்கும் கன்னியாவில் நடராஜப் பெருமானுக்கு ஆலயமமைத்து அவ்விடத்திற்கு சிவயோகபுரம் எனத் திருப்பெயர் சூட்டினார்.

திருவெம்பாவை காலத்தில் சிவயோக சமாஜத்தில் இருந்து சிவயோகபுரத்திற்கு பக்தர்கள் திருவெம்பாவை பாடிச் செல்வதும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து ஊரே திருவிழாக் கொள்வதும் சுவாமிகள் தொடக்கி வைத்த வழக்கம். ஆருத்ரா உற்சவத்தன்று நடராஜ பெருமான் மாதுமை அம்மை சமேதரராக பாபநாசசுனை தீர்த்தத்தை மக்கள் முன்னெடுத்து செல்ல சிவயோக சமாஜத்தில் இருந்து சிவயோகபுரத்திற்கு வீதிகள் ஊடாக எழுந்தருள ஊரே பெருவிழாக் கொண்டு ஆன்மீகத்தில் திளைக்கும்.

இந்த சிவயோகபுரம் நடராஜர் கோவிலும் சிறிலங்காப்படைகளினால் தகர்த்தெறியப்பட்டு சிதைக்கப்பட்ட பொழுது அது நடைபெறப்போகிறது என்பதை தெய்வீகமாக உணர்ந்த சுவாமிகள் தானே சென்று கோவிலை சிறிலங்காப் படைகள் தகர்ப்பதற்கு முன்னதாக மூல விக்கிரகங்களை சிவயோக ஆச்சிரமத்திற்கு கொண்டு வந்து சேர்த்து பாதுகாத்துள்ளார்.

சுவாமிகளின் சிவயோக சமாஜத்தின் கிளை ஆச்சிரமம் இருந்த மட்டக்களப்பு கெம்மாந்துறையும் 1990களில் சிறிலங்காப் படைகளின் கடுமையான வன்முறைகளுக்கு உள்ளாகியது. தமிழர்களுடைய மதச் சுதந்திரம் மிககடுமையாக சிங்கள அரசாங்கத்தால் பறிக்கப்பட்ட சூழலிலும் உறுதியுடன் அமரத்துவம் எய்தும் வரை மக்கள் சேவையே மகேசன் சேவையெனத் தென்தமிழீழத்து மக்களுக்கு ஆன்மீக சமுக பணிகள் புரிந்தவர் கெங்காதரானந்தா சுவாமிகள். அதே உறுதியுடன் அவரினால் நிறுவப்பட்ட சிவயோக சமாஜம் தொடர்ந்தும் தன் பணி தொடர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய குமாரசுவாமிப் புலவர்

தமிழ்ச்சங்கம் அமைத்து புலவர்களை வளர்த்த வரலாறு சங்கத்து தமிழர் வரலாறு எனப் படித்திருப்பீர்கள். ஆனால் புலவர் ஒருவர் தமிழ்ச்சங்கம் அமைத்து அதனை வளர்த்த புதிய வரலாறு எம் அனைவருக்கும் பெருமை தரும் வரலாறாக உள்ளது. ஜனவரி 25ம் நாள் 2000ல் 78வது நினைவு நாள் இடம்பெற்ற சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களால் யாழ்ப்பாணத்தில் 1898ல் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கமே பின்னர் 1901ல் பாலவந்தனம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினை ஆரம்பித்து வைக்க வழிகாட்டியது என்பது நம்மில் பலருக்கு தெரியாத ஒன்று.

தமிழ்ப் புலவர்கள் சரிதத்தை எழுதி வெளியிட்டதின் மூலம் எமது 'தமிழ்புலவர்கள் குறித்த செய்திகளைப் பேணியமை குமாரசாமிப்புலவரின் மற்றொரு பணியாக உள்ளது. புதுக்கோட்டை நீதிபதியாகவும் பிரபல தமிழ் நூல் பதிப்பாளராகவும் விளங்கி ராவ்பகதூர் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பெற்ற தாமோதரம்பிள்ளை அவர்களால் ஏழாலையில் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக 1884 முதல் 1902 வரையும் நாவலரால் வண்ணார்பண்ணையில் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராகவும் எங்கள் நாயகத்தின் கல்வித்துறைக்கு அரும்பணியாற்றிய புலவர் எழுதிய பல நூல்கள் காலத்தால் அழியாதவையாக இலங்குகின்றன. தமிழ்ப்புலவர் சரிதம் – வினைபகுபத விளக்கம் – சிசுபால சரிதம் – இரகுவம்ச சரித அமிர்தம் – சிவ தோத்திர கவித் திரட்டு– மாவைப் பதிகம் – இலக்கணச் சந்திரிகை போன்ற நூல்களின் ஆசிரியராகவும் – கலைசை சிலேடை வெண்பா– கம்பராமாயணம் பால காண்டம் – நீதி நெறி விளக்கம் – தண்டியலங்காரம் – யாப்பருங்கலக் காரிகை– சூடாமணி நிகண்டு – திருக்கரசைப் புராணம் போன்ற பழந்தமிழ் நூல்களுக்கு உரையெழுதி வெளியிட்டவருமாக குமாரசுவாமிப் புலவர் இலங்குகின்றார்.

குமாரசுவாமிப்புலவரால் தொடங்கப் பெற்ற தமிழ்ச்சங்கம் கிறிஸ்தவர்களையும் அங்கத்தவர்களாக கொண்டிருந்தமை மற்றொரு சிறப்பு. இந்தத் தமிழ்ச் சங்கம் மூலமே 1899ல் முதலாவது பண்டித பரீட்சை நடாத்தப்பெற்று தமிழ்க் கல்விக்கு பண்டிதர்–வித்துவான் போன்ற பட்டமளிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது பட்டமளிப்பு விழா 1899ல் வைமன் கதிரவேற்பிள்ளை தலைமையில் நடாத்தப் பெற்றது. இத் தமிழ்ச் சங்கம் 1906ல் கலாயோகி ஆனந்தக் குமாரசாமிக்கு வித்தியா வினோதன் என்னும் கௌரவ பட்டமளித்துக் கௌரவித்தது. குமாரசுவாமி புலவர் தமிழ் மேலும் சைவத்தின் மேலும் அளப்பரிய பக்தி கொண்டிருந்தாலும் ஆங்கிலத்தை தனது மகனுக்கு படிப்பித்து தமிழர்கள் இருமொழி அறிவுடையவர்களாக வாழ்தல் அவர்களின் முன்னேற்றத்திற்கு மிக அவசியமானது எனவும் கூறத் தவறவில்லை. வைஸ்ணவ இலக்கியமாக அன்று கருதப்பட்ட கம்பராமாயணத்திற்கு பாலகாண்ட உரை செய்து சமயப் பொறை யுடைமையையும் வெளிக் காட்டத் தவறவில்லை.

## தமிழகத்திற்கு வழிகாட்டிய நம் முன்னோர்கள்

தமிழீழத் தாயகத்தின் ஆன்மீக இலக்கிய வரலாறுகள் தமிழகத்துக்கு வழிகாட்டிய பல சம்பவங்கள் உண்டு. போர்த்துக்கேயர் எமது தாயகத்தை அடிமை கொண்ட காலத்தில் வாழ்ந்த திருநெல்வேலி ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் போர்த்துக்கேயருக்கு இறைச்சிக்காக பசுக்கன்றுகள் கொல்லப்படுவதை சிவநிந்தையாக கருதி அத்தகைய சூழலில் வாழ்வதற்கு மறுத்து தமிழகத்திற்கு சென்று செந்தமிழும் வடமொழியும் சிறக்க பல நூல்கள் செய்தார் என அவரின் வரலாறு கூறுகின்றது. சிவயோகசாரம் – சித்தாந்தசிகாமணி– பிரமாண தீபிகை – பிரசாத தீபிகை – அஞ்ஞான விசேஷசனம் – சிவயோக ரத்தினம் போன்ற பல நூல்களை வடமொழியிலும் சிவஞானபோத உரை – சிவஞான சித்தியார் உரை என்பவற்றை தமிழிலும் எழுதியதாகவும் இந்நூல்களைத் திருவண்ணாமலை ஆதீனத்திற்கு காணிக்கையாகக் கொடுத்த இவர் சிதம்பரத்திலே திருக்குளம் ஒன்று தோண்டி திருமடமும் அமைத்து வாழ்ந்தார் என்றும் இவர் குறித்த வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளிடம் ஞானம் பெற்ற வரணி தில்லைநாத தம்பிரான் சுவாமிகள் தஞ்சாவூர் மன்னனின் குழந்தையின் கடும் நோயினை திருநீற்று பூசி சுகப்படுத்தியதால் எமது சைவ மகான்கள் குறித்த நல்மதிப்பு தமிழகத்தில் உயர்வடைந்ததாக குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இத் தொடர்புகளே பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சிதம்பர தொடர்புகளுக்கு முன்னோடியாக அமைந்தன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை செய்யும் பெண்களினதும் வேலை செய்யாது வீட்டிலிருக்கும் பெண்களினதும் பிரச்சினைகள்

புலம் பெயர் தமிழீழப் பெண்கள் புலம்பெயர் வாழ்வில் இரு நதிகளின் சங்கமத்துச் சுழியோட்டத்தில் அகப்பட்ட கப்பல் சுழல்வது போல் சுழல்கின்றார். மரபு வழியாகத் தனதாக்கிய தமிழ்ப்பெரும் கலாச்சாரம் ஒரு புறத்தில் – புலம்பெயர்ந்த மண்ணின் கலாச்சாரத்தின் அழுத்தங்கள் மறுபுறத்தில். ஒரு புறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்களாய் நம் புலம்பெயர் தமிழீழப் பெண்கள் தவிக்கின்றனர்.

இந்த அவத்தை வாழ்வின் நடைமுறைக் கோலங்களே வேலைக்குச் செல்லும் பெண்ணும் வேலைக்குச் செல்லாப் பெண்ணும் அனுபவிக்கும் பிரச்சினைகள்!

வேலை செய்யும் பெண்களினதும் வேலை செய்யாது வீட்டிலிருக்கும் பெண்களினதும் பிரச்சினைகள் என்ற இத்தலைப்பு ஒவ்வொருவரதும் குடும்ப நிலைமைகளுக்கு ஏற்ப எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்று. ஆயினும் இருநிலைகளிலும் பெண்கள் அடக்கு முறைகளை அனுபவிக்க ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக நிறையச் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆதலால் இதனை பொதுப்பிரச்சினையாகப் பார்க்க வேண்டிய தேவையும் உண்டு.

முதலில் வேலைசெய்யும் பெண்களின் பிரச்சினைகளையும் அடுத்து வேலைக்குப் போகாது வீட்டிலிருக்கும் பெண்களின் பிரச்சினைகளையும் தனித்தனியாக எடுத்து நோக்கி விட்டு இறுதியாக இவ்விரு நிலைகளுக்கும் இடையில் உள்ள பொதுத் தன்மைகளையும் இவைகளின் பகைப்புலத்தில் ஏற்படுத்தக் கூடிய தீர்வுகள் சிலவற்றையும் ஆராய விரும்புகின்றேன்.

வேலை செய்யாது – கட்டின கணவனுடன் அருகிருந்து பணிகள் செய்து ஆனந்தமாக வாழ – கெஞ்சிடும் குழந்தையுடன் கொஞ்சி விளையாடி மகிழ்ந்திட – மடியமர்த்திப் பாடம் சொல்லிக் கொடுத்து பெரியவராக்கிட– புலம் பெயர்த் தமிழ்ப் பெண்களுக்கு நிறையவே ஆசை தான்.

ஆனாலும் மாதமுடிவில் வந்து குவியும் பில்களைப் பார்க்கையிலே குடும்பப் பாசங்களைத் தள்ளி வைத்து ஏதாயினும் வேலைக்குச் சென்றாலே வாழ முடியுமென்ற பரிதாப நிலையினால் வேலைக்குச் செல்லும் புலம்பெயர் பெண்களே அதிகம்.

வேலைக்குப் போகும் நம் பெண்கள் பலர் நிம்மதியாய் அந்த வேலைக்குப் போகவில்லை காரணமோ புதிய கலாச்சாரத்தின் கோலங்களுக்கு நம்மவர்களில் பலர் பழக்கப்பட்டவரில்லையென்பதே. மேனி தொட்டு பெண்ணுமாணும் பழகுதல் இவ்வூரின் வழமை நம்மவர்க்கோ அது தேள் கொட்டுமுணர்வு! ஆடை விலக்குதல் நாகரீகமென்ற நினைவில் மேனி மூடி உடுத்தும் நம் பெருமை தெரியாதவர் நகைக்கையில் ஏனப்பா இந்த வேலைக்கு வந்தோமெனத் துடிக்கும் இதயத்துடன் வேலை செய்கின்றவரே நம் பெண்களில் பலர் !

அதுமட்டுமா ஆங்கில அறிவின்மையால் அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்பல. சைகையால் வேலை தொடரும் பரிதாபநிலைகளும் பலருக்கு உண்டு. அப்படித்தான் ஆங்கிலத்தைப் படித்தாலும் நிறவெறிக்கே முதலிடம் என்பது இந்நாட்டு வேதம். சட்டங்களாயிரம் சமத்துவம் பேசினும் நடைமுறையில் முன்னேற்றத்துக்கு நிறமொரு தடை அதிலும் கறுப்புநிறப் பெண்ணென்றால் அதின்னுமொரு தடை!

முன்னேற்றத்திற்குத் தான நிறம் தடையே ஒழிய காம உணர்வின் வக்கிரப் பார்வைகளுக்கு ஆபாசப் பேச்சுகளுக்கு இரகசியச் சேட்டைகளுக்கு இந்நாடுகளில் கறுப்புப் பெண்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது என்பத வேதனையான உண்மை. இதைக் கண்டு நெஞ்சம் வெடிக்க வேலை செய்ய வேண்டிய நிலை ஒருபுறமிருக்க உங்கள் கலாச்சாரமே எங்கள் அலுவலகத்தின் பொதுஜனத் தொடர்புகளைப் பாதிக்கிறது. நீங்கள் விருந்துகள் கலந்துரையாடல்களில் மதுவருந்த மாட்டீர்கள். மற்றவர்களுடன் கைகோர்த்து நடனமிட மறுப்பீர்கள் இது அநாகரீகமென்னும் மேலிடத்துப் பேச்சுக்களை தாங்கள் தங்கள் கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பதற்கு சான்றிதழ்களாய் ஏற்க வேண்டிய நிலையில் உள்ள பெண்கள் பலர். இந்த வேதனைகளை எல்லாம் தாங்கிடும் நெஞ்சிற்கு நெருப்பையள்ளிக் கொட்டும் நீயேன் வேலைக்குப் போறாயென்னும் கணவனின் அன்றாட நச்சரிப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் பொருளாதாரப் பளுவை சேர்ந்து சுமந்திட வேலைக்குப் போய் - உன்னை யார் என்னைக் கேட்காமல் வேலைக்குப் போகச் சொன்னதெனச் சீறும் கணவனைக் கண்டு கண்ணீர் வடிக்கும் பெண்கள் பலரை நாம் கண்டிருக்கின்றோம். இன்று பிரித்தானியாவில் வேலைக்குச் செல்பவர்களில் 12.25 மில்லியன் பெண்கள் 15.09 மில்லியன் ஆண்களென்ற புள்ளி விபரம் இந்த நாட்டில் ஆணும் பெண்ணும் வேலை செய்தாலே வாழலாமென்ற உண்மையை உணர்த்திட்ட போதிலும் அதையேற்க ஏனோ எங்கள் ஆண்களில் பலருக்கு மனம் வருவதாயில்லை என்பதே உண்மை. பெண்ணைப் பேணிட வேண்டும் என்று அவளை வேலைக்கு விடாது வைத்திருக்கும் கணவன்மார் சிலர் உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் வேலைக்குப் போனால் அவளும் எனக்குச் சமமாக நியாயம் கேட்க வந்திடுவாளென்று பெண்ணை வீட்டுக் குள் அடைக்கின்றவர்களும் உண்டு என்பதும் யதார்த்த நிலை! இந்நிலையில் அது ஒரு அடக்குமுறை இதனைத் தகர்த்தெறிய எம் சந்ததிக்கு விழிப்புணர்வூட்ட வேண்டியது நம் கடமை!

அப்பாடா இந்த வேதனைகளையெல்லாம் வரித் தரும் வேலைக்குப் போகாது வீட்டிலிருப்போமென்ற பெண்களுக்கு - நீயென்ன உழைக்கிறாயா நீ நினைத்ததைச் செய்யவென ஒரு மனிதப் பிறவியின் சாதாரண தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய விடாது துடிதுடிக்க வைக்கும் கணவன்மார் பலர். தாய் தந்தை சகோதரருடன் தொலைபேசியில் பேசக் கூட அனுமதியின்றி- தனிமை உணர்வில் உள்ளம் வெதும்பி உடல் சோர்ந்து மனநோயாளிகளாக மாறும் வேலைக்குப் போகாத பெண்கள் ஆண் அடிமைத்தனத்தின் அவமானச்சின்னங்கள்! வேலக்குப் போகாப் பெண்களுக்கு உதவுவதாகவும்- தனிமைக்கு துணைசெய்வதாகவும் காட்டிப் - பிறன் மனை நோக்க விழையும் கோழைகளும் - தனிமையில் பெண் வீட்டில் இருக்கின்றாளென்றவுடன் தொலைபேசியில் தொல்லைகள் கொடுக்கும் தாய்வயிற்றில் பிறவா மனிதப்பதர்களும் - எங்கள் கலாச்சாரத்தின் சாக்கடைக் காட்சிகள் ! வேலைக்குப் போகாப் பெண்களின் பிரச்சினைகள் பலவற்றின் ஊற்றுக்கள்!

வேலை செய்யாது வீட்டில் இருக்கும் பெண்களின் முதன்மையான பிரச்சினை அவர்கள் தங்கி வாழும் நிலைக்குத் தள்ளப்படுவது தான். தங்களுடைய தேவைகளுக்கு ஒன்றில் கணவனில் அல்லது தாய்தந்தையரில் அல்லது சகோதர சகோதரிகளில் தங்கியிருக்க வேண்டியவர்களாக இவர்கள் உள்ளனர். இதனால் இவர்கள் சுதந்திரமற்ற பிறவிகளாக்கப்பட்டு விடும் அபாயம் உண்டு. குடும்பத்திற்கு வரும் வருமானம் இத்தகைய பெண்களுக்கு சமூகபாதுகாப்பு படிகளை பெறுவதற்குரிய தகுதிகளையும் இழக்க அல்லது குறைவடைய வைத்துவிடுகிறது.

பெண் ஆணில் தங்கி வாழுதல் வேண்டுமென்ற வரட்டுத் தத்துவமும் பெண் வீட்டை விட்டு வெளியே போனால் தன்னை இழந்து விடும் பலவீனப் பிறவியென்ற எண்ணமும் நம்மிடையே உள்ளவரை வேலைக்குப் போற பெண்ணும் வேலைக்குப் போகாப் பெண்ணும் ஆண் அடிமைத்தனத்தின் கொடுமைகளை பிரச்சினை களாய் கண்டு துடிப்பர்.

பிள்ளை பெற்று வளர்க்கும் இயந்திரங் களாகவும்- பாலியல் அமுதை வழங்கும் கலசங்களாகவும் = இவையிரண்டு தேவைகளுடன் சேர்த்து - சீதனம் கொண்டு வரும் அல்லது சம்பாதித்துப் போடும் கற்பக விருட்சங்களாகவும் பெண்ணை ஆண் பார்ப்பதை பெண் அனுமதிக்கும் வரை வேலைக்குப் போகும் பெண்ணுக்கும் வேலைக்குப் போகாப் பெண்ணுக்கும் பிரச்சினைகள் தொடர் கதையாய்த் தொடர்ந்து கொண்டே இருக்கப்போகிறது. தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் கடமை தமிழீழப் புலம் பெயர் பெண்களின் மனஉறுதியான செயற்பாடுகளில் தானுண்டு!

இனியொரு விதி செய்வோம் ஆணென்றும் பெண்ணென்றும் பேதங்கள் இல்லை என்பதை ஏற்று வாழ்க்கைப் போராட்டத்தில் களமாடும் சக்தியை இருவரும் பெற்றிட ஆவன செய்வோம். உயிர் மேலானது தான் அதை விட மேலானது-தன் மானம் என்ற தேசத் தலைவர் பிரபாகரன் பேச்சினை வாழ்வின் மூச்சாக கொண்டு ஒவ்வொரு தமிழீழப் புலம்பெயர் பெண்ணும் ஆணும் வாழ்ந்திட உறுதி கொள்வோம். அப்போது தானே மலரும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை வாழ்வென்பதற்கு உதாரணமாய் அங்கே தமிழீழப் பெண்களும் ஆண்களும் ஒன்றாய்க் களமாடி வெற்றிகள் ஆயிரம் அள்ளிக் குவிக்கின்றார். இங்கும் புலம்பெயர் ஆண்களும் பெண்களும் நம்மை நாமே புரிந்து கொள்வோம் நாம் வாழும் புகலிடத்தின் பெருமைகளை ஏற்று சிறுமைகளை விலக்கியே பெருமை மிகு நம் தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டிற்கு புதியதோர் பரிமாணம் செய்வோம் பெண் வேலை செய்யக் கூடாதென்பது தமிழ்ப்பண்பாடு என்று எண்ணுவது தவறு. சிறுநில விவசாயியாகத் தினைப்புனம் காத்த வள்ளியைக் கும்பிடும் தமிழர்கள் – வெற்றித் தெய்வமாக போர்த் தொழில் செய்யும் கொற்றவையினைக் கொண்ட தமிழர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் என்பது எம் கலாச்சாரத்தின் பெருமை. எம் நாட்டினைக் கைப்பற்றிய அந்நியர்கள் வகுத்ததே ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதங்கள். இதை உணர்ந்த பின் விடுதலை உணர்வு வந்ததின் பின் – ஐந்து பேரை நம்பி இறுதியில் துகிலை இழப்பதற்கும் – இராம இலட்சுமணரின் விற்களுக்கு நடுவே நடந்து கடத்தப்படுவதற்கும் – கள்ளக் காதலியுடன் பொருள் தொலைத்து வரும் கோவலருக்கு உள்ள நகையையும் தூக்கி கொடுப்பதற்கும் வாழ்க்கையை காடாக்கி நடுவழியே கைவிடும் நவீன நளன்களை எண்ணி ஏங்கித் தவித்திருப்பதற்கும் –மோதிரத்தைப் போட்டு விட்டு அதனை மீன் விழுங்காமலே மறந்து போகும் துஷ்யந்தன்களுடன் மேலும் வாழலாமென்று கனவுகள் காண்பதற்கும் இனியும் தமிழீழப் புலம் பெயர் பெண்கள் தயாராக இல்லை.

எங்கள் வாழ்வு எங்கள் கையில். தன்னம்பிக்கையை ஊட்டுவதன் மூலமும் புதிய சூழல்களில் புலம் பெயர் பெண்களும் ஆண்களும் நிலைபெறுவதற்குரிய உதவிகளை ஆலோசனைகளை அளிக்கும் சமூக நிறுவனங்களை வளர்ப்பதன் மூலமும் தான் இதனைச் செய்ய வேண்டும். குழந்தைகள் காப்பகங்கள் வேலைக்குப் போகும் பெண்களுக்கு மிகமிகத் தேவையான ஒன்று. பெண்கள் வேலை பெறுவதற்கான பயிற்சிகள் பெறுவதற்கு குழந்தைகளைப் பார்ப்பதற்கான வாராந்தப் படிகளுடன் கூடிய பயிற்சி நெறிகள் ஐரோப்பா எங்கும் நடாத்தப்படல் வேண்டும் என்பது எல்லா ஐரோப்பிய அரசுக்களினதும் பொதுவான கொள்கை. அத்துடன் பெண்களை குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்துதல் சட்டப்படி தடுக்கப்பட்டுள்ளது. வேலை செய்யும் பெண்களுடன் பாலியல் சினடல்கள் சேஷ்டைகள் செய்தல் சட்டப்படி பாரதூரமான குற்றம். இவைகளை எமது பெண்கள் தெரிந்த கொள்ள வேண்டும். எமது பெண்களுக்கு இவ்விடயங்களில் உதவக் கூடிய தமிழர் அமைப்புக்களும் பயிற்சி நிறுவனங்களும் அதிகமாக்கப்படல் வேண்டும். வீட்டு வன்முறைகள்– Domestic violences – குறித்து ஆலோசனைகளும் உதவிகளும் பெறுவதற்கான அமைப்புக்கள் – மனச்சிக்கல்கள் உளநோய்கள் என்பவற்றாலும் உடல் நோய்களாலும் துன்புறும் பெண்கள் பலர் தாம் வாழும் நாட்டில் உள்ள மொழிகளில் பேச முடியாது தங்கள் பிரச்சினைகளால் நடைபிணங்களாக வாழ்கின்றனர். இவர்களை அணைத்து ஆலோசனைகளும் மருத்துவ உதவிகளும் வழங்க கூடிய அமைப்புக்கள் தமிழர்களிடை பெருக வேண்டும். இவைகள் எல்லாம் குடும்ப உறவுகளை வலுப்படுத்தவென அமைக்கப்பட வேண்டியவை. குழந்தைகளுடைய நலம் கருதியும் தமிழ் விழுமியங்களைப் பேணி எதிர்கால சந்ததிகளுக்கு வழங்க வேண்டிய பொறுப்புக்கள் குறித்தும் இயலுமான வரை மணமுறிவுகள் ஏற்படாதவாறு தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்ச் சமுகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. சமுக கடமைகளைச் செய்யாது சமுகத்தின் விழுமியங்களுக்கு உரிமை பாராட்டுவது எந்த விழுமியங்களை வாழ வைக்க நினைக்கின்றோமோ அந்த விழுமியங்களை அழிக்க முயல்கின்ற செயற்பாடாகவே அமையும்.

இனி விடுதலை வாழ்வுக்கு மீண்டிடும் நம்மவர்க்கு வேதம் அவர் எங்கு வாழ்ந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதங்களில்லை – ஆற்றல்கள் செய்பவர் யாராக இருப்பினும் போற்றுவோம் அவரை என்பதே. வேலைக்குப் போவதும் போகாது விடுவதும் அவரவர் தேவையில் உண்டு. பொருளாதரக் காரணிகளால் மனித உறவுகள் நிர்ணயிக்கப்படும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். இதனை சரியான திட்டமிடல் ஒருங்கிணைந்த தன்னம்பிக்கையுடன் கூடிய முயற்சிகள் என்பவற்றின் மூலமே எதிர் கொள்ளலாம். இதை உணர்ந்து வாழ்வோமானால் புலம் பெயர் பெண்கள் வேலைக்குப் போவதிலும் வேலைக்குப் போகதிருப்பதிலும் உள்ள பிரச்சினைகள் பல தானே மறைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலன்ரைன் தினம் என்றால் என்ன

மாசி 14ம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படும் வலன்ரைன் டே என்றால் என்ன? உரோமைக் கலாச்சாரத்தில் தோன்றி கிறிஸ்தவ கலாச்சாரத்தில் பரிணாமம் அடைந்து இன்றைய ஐரோப்பிய கலாச்சாரத்திலும் சோடிகளை தெரியும் தினமாக திகழுகின்ற தினம் தான் வலன்ரைன் தினம்.

உரோமை நகரை நரிகளின் தொல்லைகளில் இருந்து நீக்கிய லூபர்சிலியா என்னும் தேவதைக்கு பெப்ரவரி 15ல் பெருவிழா எடுப்பது உரோமையர்களின் மரபு. இந்த விழாவுக்கு முதல் நாள் இளம் பெண்களின் பெயர்களை எழுதி ஒரு பெட்டியில் போட்டு வைப்பர். அன்று மாலை ஆண்கள் இந்த பெயர்களை எழுந்தமானதாக பொறுக்கி எடுத்து ஓராண்டுக்கான தங்கள் சோடிகளை தெரிவு செய்வர். இதுவே பெப்ரவரி 14 வலன்ரைன் தினமாகியதன் ஆரம்பம். மன்மதன் மன்மதபாணம் விடுவது நமது பாரம்பரிய கதையாகத் திகழ்வது போல் கியூபிட் என்னும்- காதல் தேவதை வீனஸின் மகன் – மன்மதபாணம் விடுவதாக உரோமர்கள் நம்பினர். இந்த கியூபிட் இருசிறகுகள் கொண்ட கண்கட்டப்பட்ட நிலையில் உள்ள பாலகன் இவனுடைய கைகளில் வில்லும் அம்பும் இருக்கும். இவனுடைய மன்மத பாணத்தினாலேயே சோடிகள் தெரிவாவர் என்பது உரோமர்களின் நம்பிக்கை. இன்றும் வலன்ரைன் டே அட்டைகளில் கியூபிட்டின் படத்தை காணலாம்.

இந்த உரோமைக் கலாச்சாரம் கத்தோலிக்க மதம் அங்கு பரவிய பொழுது மாற்றப்பட்டது. வலன்ரைன் என்னும் கத்தோலிக்க மதகுரு ஒருவர் உரோமையில் வாழ்ந்து வந்தார். அக்காலத்து உரோமை சக்கரவர்த்தியான 2வது குளோடியஸ் இளம் ஆண்கள் யாருமே திருமணம் செய்யாது தனது படைகளில் சேவையாற்ற வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான். கத்தோலிக்க குரு வலன்ரைன் இரகசியமாக திருமணங்களை செய்து வந்தார். இதனை கேள்வியுற்ற அரசன் அவரைச் சிறையில் இட்டான். சிறையிலும் தன்னைப் பார்க்க வரும் காதலர்களிடம் கடிதங்களை வாங்கி மற்றவருக்கு இரகசியமாக பரிமாறுதல் – இரகசியமாக மோதிரங்களை ஆசீர்வதித்து காதலர்களுக்கு உதவுதல் போன்ற செயல்களை வலன்ரைன் தொடர்ந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அரசன் அவருக்கு மரண தண்டனையை நிறைவேற்றக் கட்டளையிட்டான்.

சிறையில் பார்வையற்றவளாக இருந்த சிறை அதிகாரியின் மகளுக்கு வலன்ரைன் தனது மன்றாட்டினால் கண்பார்வை கிடைக்கச் செய்தார். இதனால் அவள் வலன்ரைனின் பக்தையானாள். அரசனின் ஆணைப்படி வலன்ரைன் கொல்லப்படுவதற்கு . முன்பதாக கி.பி 279ல் சிறையதிகாரியின் மகளுக்கு கடிதமெழுதிய வலன்ரைன் From Your Valentine எனக் கையெழுத்திட்டு பிரியாவிடை பெற்று மரணத்தையேற்றார். கி.பி. 179 ல் பாப்பரசரால் வலன்ரைன் புனிதராக பிரகடனப்பட்டார். அன்று முதல் வலன்ரைன் தினமாக உரோமரின் இளம் பெண்களை தெரிவு செய்யும் தினம் மாற்றப்பட்டு இன்று வரை தொடர்கிறது. இவ்வகையில் காதலர் தினம் என்ற வலன்ரைன் டே காதல் மனிதனின் பிறப்புரிமை என்பதை நிலைநாட்டத் தன் உயிரையே ஈந்த மகத்தான மனிதர் ஒருவரின் நினைவு நாளாகவும் உள்ளது.

ஆங்கில கலாச்சாரத்தில் பெப்பரவரி மாதத்தில் பறவைகள் சோடி தேடிச் சேர்வதைப் பார்த்து வலன்ரைன் அட்டைகளில் சோடிப்பறவைகளை வலன்ரைன் டேயின் அடையாளமாகச் சேர்த்துக் கொண்டனர். வலன்ரைன் தினத்திற்கு முதல் நாள் மாலை காதல் ததும்பும் கடிதங்களை எழுதி தங்கள் காதலிகளின் வாசலில் வைப்பது இங்கிலாந்தின் கலாச்சாரம். ஆனால் ஸ்கொட்டிஸ் மக்கள் சிவப்பு வர்ண நாடாக்களால் கட்டிய பரிசுப் பொருட்களை காதலிக்குப் பரிசளிப்பதை வலன்ரைன் தின வழக்கமாக கொண்டிருந்தனர். வேல்ஸ் மக்களோ கரண்டிகளை காதலிக்கு பரிசு கொடுத்தனர். இவ்வாறாக வளர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலன்ரைன் தினம் இன்று மலர்களையும் அன்பளிப்புக்களையும் வாழ்த்து அட்டைகளையும் தங்கள் காதலிக்கு பரிசளித்து மகிழும் நாளாகப் பரிணாமம் அடைந்து காணப்படுகிறது.

மலர்களை தெரிவு செய்யும் பொழுது கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மலருக்கும் ஒரு அர்த்தம் உண்டு. டீடநநனைபெ சநன என்ற மலர் நீ உதவாத நீ ஆனாலும் இதயமற்றவளல்ல என்ற பொருளைக் கொடுக்கும். புயசனநஜெய மலர் நான் உன்னை இரகசியமாக நேசிக்கிறேன் என்ற பொருளைக் கொடுக்கும் புடயனழைடரள மலர் நீ என் இதயத்தை துளைத்து விட்டாய் என்ற பொருளைக் கொடுக்கும். வெண்ணிற மஞ்சள் நிற புடயனழைடரள மலர்களை ஒருபொழுதும் தெரிவு செய்யக் கூடாது. இவைகள் மரணவீட்டுக்கு அளிக்கும் மலர்கள். டுடைடல ழக வாந எயடடநல மலர்கள் நாங்கள் உறவில் இணைவோமாக என்ற கருத்தைக் கொடுக்கும். ரோஜா மலர்கள் நான் உன்னை காதலிப்பதை இனிமையானதாக கருதுகிறேன் என்னும் பொருளைக் கொடுக்கும். ஊதாப் பூக்கள் நான் உன்னைப் பதிலுக்கு காதலிக்கிறேன் என்னும் பொருளைக் கொடுக்கும். ஆதலால் வலன்ரன் தினத்திற்கு மலர்களைத் தெரிவு செய்வதில் தனி அக்கறை எடுக்கப்படுகிறது.

இன்ற வலன்ரைன் தினம் மற்றொரு வர்த்தக தினமாக இருப்பதால் காதலர்களிடம் இருதயங்கள் இல்லை. அவை கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன என்ற நகைச்சுவை மிகப் பொருத்தமான ஒன்றாக உள்ளது.

மேலும் தமிழரிடை இவ்வாறாக சோடியினைத் தெரிவு செய்யும் விழா இருந்ததா என்ற கேள்விக்கு இருந்தது. இந்திர விழா என அது அழைக்கப்பட்டது. ஆனால் தெரிவு செய்யும் உரிமை பெண்ணுக்கே கொடுக்கபட்டது . அதனால் தான் மாதவி வீணையை தன் காதலனாக கருதிப் பாட கோவலன் அவளை விட்டுப் பிரிந்தான். சுயம்வரங்கள் எல்லாமே ஒரு வகை வலன்ரைன் தினம் தான். ஆனால் ஒருத்தனுக்கு ஒருத்தி என்னும் பண்பாடும் பிறன் மனை நோக்காமையே ஆண்மை என்ற தத்துவமும் ஆணுக்கு வேலியாகவும் மனஉறுதி என்னும் பொருள்படும் கற்பு என்பது பெண்ணுக்கு அணிகலனாகவும் கொண்ட சட்டகத்தில் தாம் விரும்பியவர்களைத் தெரிவு செய்யும் காதலையும் அவளை அவனை அடையும் வீரத்தையும் கொண்டது நம் கலாச்சாரம். இதை மறவாது வலன்ரைன் தினத்தை கொண்டாட நம் குழந்தைகளை வழிநடத்த வேண்டியது தமிழ்ப் பெற்றோர்களாகிய நம் கடமை. காதல் காதல் காதல் - காதல் இல்லையேல் சாதல் சாதல் சாதல் என்ற பாரதியின் வார்த்தைகளையும் உறுதி உறுதி உறுதி- உறுதிக்கோர் உடைவு உண்டாயின் - இறுதி இறுதி இறுதி என்ற பாரதியின் எச்சரிக்கையும் நாம் மறக்க கூடாது.

## மனைவிக்கும் காதலர் தினம் வேண்டும்

மனைவியைக் காதலியுங்கள்
ஊரெல்லாம் காதல் வேண்டாம் -
உங்கள் மனைவியைக் காதலியுங்கள் !

பிறன் மனை நோக்காமை பேராண்மை என்ற
வள்ளுவன் வாக்கேற்று - மனைவியைக் காதலியுங்கள் !

ஒருத்தனுக்கு ஒருத்தி -ஒருத்திக்கு ஒருவன் தத்துவங்கள் வாழ்வுபெற -
உங்கள் மனைவியைக் காதலியுங்கள் !

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் பெண்ணில் நல்லாளோடும் என்று தீ வலம் வந்தோரோ - பொன்னோடு வாழாது பெண்ணோடு வாழுங்கள் -
உங்கள் மனைவியைக் காதலியுங்கள்

இன்பத்திலும் துன்பத்திலும் நோயிலும் எந்நொடியிலும் ஒருவராய் வாழ்ந்திடவே-
தாய்தந்தையர் விட்டுப் பிரிந்து நீங்களே சகலமும் கதியென இணைந்தவள்-
இதயத்தை
மகிழ்விப்பதே - இனி உம் வாழ்வென காதலர் தினத்தில் மீண்டுமே உறுதி செய்வீர்! உங்கள் மனைவியைக் காதலியுங்கள் - அவளுக்கும் காதலர் தினம் வேண்டும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கவிஞர்கள் சிந்திய காதல் தேன் துளிகள்

காதலும் வீரமுமே தமிழர்கள் கலாச்சாரம். இதனால் தமிழ்க்கவிஞர்கள் காதலுக்கு முன்னுரிமை கொடுத்து கவி படைத்தனர். காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மலரும் பிரிக்க முடியாத அன்புணர்வு.

இதனை தாய் தந்தையர் சகோதர சகோதரிகளிடை தோன்றும் பாசம் – நண்பர்களிடை தோன்றும் நட்பு– தேசத்தின் மீதும் தேசத்தலைவர்கள் மீதும் தோன்றும் பற்று – தெய்வத்தின் மீது தோன்றும் பக்தி என்பவற்றில் இருந்து நம் முன்னோர்கள் தெளிவாக வேறுபடுத்தி காட்டிட மறக்கவில்லை.

இங்கு காதலுக்கு நம் கவிஞர்கள் சிலர் தந்த கருத்துக்கள் சிலவற்றை தொகுத்து தருகிறேன். சுவைத்துப் பாருங்கள்.

காதலுக்கு வள்ளுவன்
வரைந்த வரைவிலக்கணம்

வள்ளுவன் தமிழிலக்கியத்துக் தலைமைப் புலவன் இன்பத்துப்பால் கற்று காதலையும் கற்புடை வாழ்க்கையும் ஆண் பெண் இருவருக்கும் பொதுவாக்கிய பெருங்கவிஞன் படைத்தளித்த இன்பத்துப் பாலில் ஒரு துளி காதல் பெருஞ்சுவை சொட்ட படிக்கின்றேன்.

உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு

காதல் என்றால் என்ன என் உடம்புக்கும் உயிருக்கும் என்ன தொடர்பு உண்டோ அந்த தொடர்பு தான் அவளுக்கும் எனக்கும் இடையிலுள்ள தொடர்பு – அந்த தொடர்புக்குப் பெயர் தான் காதல். ஒரு உயிர் ஒரு உடலில் தான் ஒரு பிறவியில் உறவாடும் என்பதை அழகாக வள்ளுவர் காதலுக்கு வரைவிலக்கணம் வடிக்கின்றார்.

காதல் என்றால் என்ன
சங்க இலக்கியம் தரும் சொற்சித்திரம்

என்னுடைய தாய்க்கும் உன்னுடைய தாய்க்கும் என்ன உறவு
என் தந்தைக்கும் உன் தந்தைக்கும் எவ்வகையிலாவது ஏதாவது தொடர்புகள் உண்டா
எப்படி நானும் நீயும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டோம்
ஆனாலும் செம் மண்ணில் விழும் மழைநீர் செந்நிறமாகி பாய்வது போல
என்நெஞ்சும் உன் நெஞ்சும் பிரிக்க முடியாத அன்பு நதியாகி நிற்கின்றதே !

என ஒரு காதலனும் காதலியும் பேசும் உரையாடலாக காதல் என்றால் என்ன என குறுந்தொகையில் சொற்சித்திரம் சமைத்த கவிஞன் செம்புலப்பெய்பனார் அவன் சமைத்த படிமத்தின் பெயரையே தன் சங்கப்புலவர் பெயராகவும் பெற்று சிறப்பெய்துகின்றார். சாதி சமயம் பதவி பட்டங்களால் காதல் உருவாக மாட்டாது மனஒன்றிப்பே உண்மைக் காதலுக்கு காரணமாதல் வேண்டும் என்பதை கவிதை அழகாக எடுத்து விளக்குகின்றது.

காதல் இன்பத்துக்குப்
பாரதி தரும் விளக்கம்

ஆவிக்கலப்பின் அமுத சுகந்தன்னில்
மூடியிருந்த விழிநான்கு எனக் காதல்
இன்பத்துக்கு வரைவிலக்கணம் தந்த பாரதி

நாடகத்திற் காவியத்திற் காதலென்றால்
நாட்டினத்தார் தாம் வியப்பெய்தி நன்றாமென்பார்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டி யதைக்கொல்ல வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுகின்றாரே

எனக் காதலை ஏட்டில் எழுத்தில் கலையில் ஏற்று வாழ்வில் ஏற்க மறுக்கும் தமிழர்களுக்கு சாட்டையடி கொடுக்கத் தவறவில்லை.

பாரதிதாசனின் கவிதையில்
காதல் வீச்சுக்கள்

கன்னி அனுப்பும் புதுப்பார்வை – அவன்
கட்டுடல் மீதிலும் தோளினிலும் – சென்று
மின்னலின் மீண்டது! கட்டழகன் – தந்த
விளைச்சலைப்பம் ஒப்பினான் புன்னகையால் !

என கம்பனின் அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள் பாணியில் பாரதிதாசன் தந்த கவிதாவீச்சு காதலர் இருவரின் உள்ளங்கள் இணையும் காட்சியின் கவிதா வடிவம்.

தேன் உண்டாலே தித்திக்கும் அவளைக் கண்டாலே தித்திக்கும் எனக் காதல் இன்பப் பெருக்கை கவிதை வசனமாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசனுக்கு தாலி கட்டி பதிவுப்புத்தகத்தில் பெயர் எழுதி செய்யும் திருமணச் சடங்குகளில் நம்பிக்கை இருக்கவில்லை. இரண்டு மாடுகள் இணைபிரியாது கூடி வாழ்வதை தன் கவிதை ஒன்றில் சுட்டிக் காட்டி விட்டு தாலி கழுத்தில் இருக்க கைவிடப்பட்ட இளம் பெண்களையும் சுட்டிக் காட்டி சம்பிரதாயங்கள் சடங்குகளை கேலி செய்யும் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் விழியினாள் எழுதினாள் ஒப்பந்தம் – வெண்ணகையால் இட்டாள் கையெழுத்து எனச் சுந்தரத்தமிழால் நம்பிக்கையே ஆழமான வாழ்வுக்கு உறவுக்கு அடிப்படை என்பதை விளக்கின்றான். அருகருகு இருவர் – மிக்க அன்பு உண்டு–செயலே இல்லை என்பது பாரதிபாணியில் பாரதிதாசன் சொல்கையில் எத்தனையோ அர்த்தங்கள் தெரிகின்றன.

பாரதிதாசன் மிகவும் இரசிக்கத் தக்க முறையில் காதல் உறவை வெளிப்படுத்திய பெருங் கவிஞன். இதோ அவரின் எழுத்திற்கு ஒரு சிறு உதாரணம்.

*நாவற்பழம் நீர் நிலையில் விழுந்து கொண்டிருக்கும். இச் இச் சென்ற ஒலி தடிசைக்குள் சென்றது. அதே ஒலி தடிசையினின்றும் வெளிவந்தது. இது எதிரொலி அன்று.*

விரித்தவரே விழும் வலை காதல்
என்னும் கவிஞர் மேத்தாவின் மொழி

விரித்தவர்களே அகப்பட்டுக் கொள்ளும் விசித்திர வலை – இரண்டு கண்களும் எதிர்ப்பட்டுக் கொள்ள நான்கும் குருடான பின் நடக்கும் நாடகம் – என பாரதிபாணியில் பாட்டெழுதிய மேத்தா நடைமுறையில் காதல் வேகம் ஏற்படுத்தும் சில கோலங்களை

*வாலிபத்தின் பூங்கொத்தில் வருடல்கள் – தாலிகட்டும் முன்பு சில தரிசனங்கள்– வேலியிலா இளநிலத்தில் விதைகள்*

என எடுத்துக் காட்டி சமுதாயத்தை எச்சரிக்கவும் தவறவில்லை. எனக்குத் தெரியும் – நீ வேண்டுவது – தொழுவதையல்ல – தொடுவதை எனக் காதலி கூறுவதாக காட்டும் கவிஞர் மேத்தா இக்காலப் பெண்கள் காதல் உறவில் ஏற்பட்டு விட்ட கோலமாற்றங்களை உணாந்தவர்கள் என்பதையும் வெளிப்படுத்த தவறவில்லை.

*அண்ணலும் நோக்கினான்*
*அவளும் நோக்கினாள்*

*இரண்டு பேரையும்*
*அடித்துக் கொல்வதற்கு*
*அப்பன் காரனும்*
*நோக்கினான்!*

எனக் கம்பன் பாணியில் புதுக்கவிதை வடித்து இன்று காதலை பெரியவர்கள் வெறுப்பதை கிண்டல் செய்யவும் மேத்தா மறக்கவில்லை.

எமது தாயகத்து காதல் கோலங்கள் சில
கவிஞர் காசியின் கவிதை மொழியில்

கல்லடிப்பாலத்தில் – உப்பேரிக் கயல்பாடும் முழுநிலாவில் – சில்லென்ற குளிர்காற்றில் – தோணியில் காதலர் சிரிப்பும் பேச்சும் – மெல்லவே எழும் – தோணி ஏரியின் அலைமேனி தழுவி ஆடும்– சொல்லின் வசப்படாக் காதலின் சுவை பொங்கிப்பாயும் நாடு!

என நம் தமிழீழத் தாயகத்தை காதலின் உயர்நாடாய்ப் பாடுகிறான் நம் கவி காசி ஆனந்தன்.

அப்புக்குளித்துக் கொண்டிருப்பார் – எதிர்வீட்டில் இருக்கும் அத்தான் துப்புமாப்போல் வந்து – வேலியால் தலைதூக்கி மெல்லப்பார்ப்பான்–சுப்பு நலந்தானா? என்பாள். அப்பன் தும்மல் உள்ளே கேட்கத் – தப்பு நீ! ஓடித் தப்படி என்பான் களவின்பம் தாங்கும் நாடு

என நம் நாட்டு நாளந்தக் காதல் வாழ்வை படம்பிடித்துக் காட்டும் காசி ஆனந்தன் காட்டும் மற்றொரு கிராமத்துக் காதலையும் பார்ப்போமே!

காளை பனை ஏறும் எழில் காண – உழவர் பெண் கண்ணும் ஏறும் – பாளை அவன் தட்டத் தட்ட – இவள் நெஞ்சில் பனங்கள் ஊறும்– வேளை தோறும் காதல் வளரும்– அவன் நெஞ்சம் எல்லை மீறும் – நாளை நாளை என்று பெண் கூறும் – மணம் நடந்தேறும் நாடு என்பதே காசி ஆனந்தனின் அக்கிராமத்து காதல் காட்சி.

புலம்பெயர்ந்த நாட்டு தமிழர்
காதல் உணர்வுக்கு ஒரு உதாரணம்

புலம்பெயர்ந்த தமிழர்கள் இடையிலும் காதல் உணர்வு தமிழ்ப் பண்புடன் வளர்ந்து வருகிறது. இதோ நியூயோர்க்கில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாலன் என்னும் கவிஞர் எழுதிய தமிழில் காதல் என்று சொல் என்ற கவிதை

வுழியாலே வரைந்தாயோ காதல் படத்தை –
நான் வழிமாறி விட்டு விட்டேன் போகும்
இடத்தை சிரிப்பாலே சிந்தினாயோ மாணிக்கக்
குடத்தை – அதற்குச் சிறையாகித்
தந்துவிட்டேன் எனது மனத்தை!

நடை தவழ்ந்து வரும் நதியை
ஞாபகப்படுத்தும் நாட்டியக் கலையை
எனக்குக் காட்டிக் கொடுக்கும் சடை வளர்ந்து
உடலுயரம் அளக்கும் – அது சாமரம் வீசியோ
உனது வெப்பம் தணிக்கும்!

உன் உடல் எல்லா அழகையும் படிக்கும் –
என் உள்ளத்திலோ காதல் வெடிக்கும் – உன்
உதட்டிலோ என்றும் தமிழே துடிக்கும் –
அதுஇனிப்பதால் எனக்குப் பிடிக்கும்!

பால்நிறப் பல்வரிசை –அது படைத்திட
வேண்டும் –இன்னொரு வரிசை
பொன் நிறக் குடிசை மேனி – நீயோ
மண்ணுலகில் உதித்த கலைவாணி!

பெண்ணே நினைக்கும் போது நீ வாராயோ –
என் நெஞ்சில் பூ மழை தூவாயோ !
தவிக்கும் என்னைப் பாராயோ
தமிழில் காதல் என்று சொல்லாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடியடி இராமன் – 1

இயற்கை வளங்கள் நிறை கிராமம் ஒன்றில் இராமன் என்றொரு சின்னப்பையன் இருந்தான். அவனது தந்தை ஒரு விறகு வெட்டி. அவனுக்கு ஒரு ஆறு மாதக் குட்டித் தங்கையும் இருந்தாள்.

அம்மா தங்கையை பார்க்க வேண்டியிருந்ததினால் இராமனை விறகு வெட்டுவதற்கு உதவியாகத் தந்தை கூட்டிச் சென்றார்.

மனைவி கட்டிக் கொடுத்த சோற்று உறியை மரமொன்றின் கிளையில் கட்டித் தூக்கி விட்டு தந்தை மரத்தில் ஏறி விறகை வெட்டத் தொடங்கினார்.

தந்தை விறகை வெட்டிப்போட அதைப் பொறுக்கி கட்டுக்கட்டாக கட்டி வைப்பது இராமனின் வேலை. ஒவ்வொரு ஒவ்வொரு விறகாக பொறுக்கி கட்டிக் கொண்டிருந்த இராமன் தந்தையிடம் அருகில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றைக் காட்டி அப்பா இந்த ஆறு எங்கே போகின்றது என்று திருப்பி திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தான் இராமன்.

வேலை செய்வதில் சுறுசுறுப்பாக இருந்த தந்தைக்கு இவனது கேள்வி தொல்லையாக இருந்தது. உன்ர வீட்டை போகுது என வெறுப்பாக கூறிவிட்டு தொடர்ந்து தன் வேலையை தொடர்ந்தார் தந்தை.

தந்தை மரத்தின் மேல் இருக்கையில் இராமனுக்குப் பசிக்கத் தொடங்கியது. மரத்தில் கட்டியிருந்த சோற்று உறியை எட்டி அவிழ்க்க முனைந்தான் இராமன். எட்டவில்லை. விட்டான் கல்லால் ஒரு எறி. பானை உடைந்து சோற்றுக் கஞ்சி ஒழுகத் தொடங்கியது.

வாயை ஒழுகும் கஞ்சிக்கு நேரே பிடித்துக் குடிக்க முயன்றான். வாய்க்குள் விழுந்தது சில துளிகள் முகத்தில் வழிந்தவை தான் அதிகம். பேசாமல் ஆற்றில் முகத்தைக் கழுவி விட்டு மௌனமாக இருந்தான் இராமன்.

விறகை வெட்டி விட்டு மரத்தில் இருந்து இறங்கிய தகப்பன் விறகு கட்டுக்கள் ஒன்றையும் காணாது தவித்தான். எங்கேடா விறகு கட்டுக்கள் என அவசரம் அவசரமாக தந்தை இராமனிடம் கேட்டார்.

விறகுகட்டுக்கள் வீட்டை போயிற்று என்றான். என்னடா கூறுகிறாய் எனத் தந்தை பதற்றத்துடன் கேட்டார்.

நீங்கள் தான் சொன்னீர்களே இந்த ஆறு எங்கட வீட்டை போகுது என்று பின்னர் நாமேன் இந்த விறகு கட்டுக்களை சுமந்து கொண்டு போய் கஸ்டப்படுவானென்று எல்லாவற்றையும் ஆற்றுக்குள் போட்டு விட்டேன். ஆறு இப்பொழுது அவற்றை வீட்டை கொண்டு போயிருக்கும் என்றான் இராமன்.

ஐயோ! என்னுடைய இன்றைய உழைப்பையெல்லாம் நாசமாக்கி விட்டாயடா. ஆறு எப்படியடா வீட்டை போகும்

நான் தான் குழந்தைகளுடன் பேசுகையில் கவனமாக இருக்க வேண்டும் என்பதை மறந்து அலட்சியமாக உனது கேள்விக்குப் பதில் அளித்த விட்டேன். அதற்கு இந்தத் தண்டனை எனக்கு காணாது. என்று கூறிய தந்தை சரி வாடா சாப்பிட்டு விட்டு திரும்பவும் நான் விறகு வெட்டுகிறேன் அதை ஒழுங்காக கட்டி ஆற்றுக்கு அருகில் வை நான் வேலை முடிந்தவுடன் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போவோம் என்ற படி சோற்று உறியை நோக்கி நடந்தான்.

அங்கும் அவனுக்குத் திகைப்பு. டே! இது என்னடா சோற்றுப் பானை உடைந்து கிடக்குது பசியின் அகோரத்தில் கத்தினான் தந்தை. அம்மா சொன்னா அப்பா வேலை செய்யும் பொழுது குழப்பக் கூடாதென்று. எனக்கு சரியாகப் பசித்தது. சோற்றை எடுக்கப் பார்த்தேன். எட்டவில்லை அதனால் உங்களை குழப்பாமல் கல்லால் அடித்து கஞ்சியைக் குடித்தேன் என்றான்.

தந்தைக்கு கோபம் பிட்டுக் கொண்டு வந்தது. மகனைக் கொர இழுவையாக இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து மனைவியிடம் இவனை போல ஒரு மடையன் இருக்கின்றானா எனக் கத்தினான்.

மனைவி அமைதியாக சிறுகுழந்தைகளுடன் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொழுது கவனமாக பதிலளிக்க வேண்டும். சிறு குழந்தைகள் தங்களது தேவைகளை உடன் பூர்த்தி செய்ய முயல்வார்கள் என்பதை உணர்ந்து சாப்பாடு தண்ணீர் போன்றவற்றை அவர்கள் வேண்டிய நேரத்தில் எடுக்க கூடியவாறு வைக்க வேண்டும். என்ன என்ன எந்த எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என அவர்களுக்கு விளக்கமாக சொல்லிக் கொடுக்க வேண்டும். அதைச் செய்யாதது உங்கள் பிழை என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு எப்பவுமே என்னில் பிழை பிடிப்பது தான் வேலை. நான் இனிமேல் அவனை விறகு வெட்ட கூட்டிப் போக மாட்டேன் அவன் வீட்டில் இருந்து தங்கச்சியை பார்க்கட்டும் நாளைக்கு நீ என்னோடு உதவிக்கு வரவேண்டும் என்று சீறினான் இராமனின் தந்தை. இராமன் வீட்டில் இருந்து என்ன செய்தான் என்பதை அடுத்த இதழில் பார்ப்போமே!

## அடாங்காத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர் சி. சுந்தரலிங்கத்தின் 15வது நினைவு தினம்

தமிழீழத்தின் தலைசிறந்த கணிதப் பேராசிரியரும் அடாங்காத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர் சி. சுந்தரலிங்கத்தின் 15வது நினைவு தினம் இன்றாகும். 1895ல் பிறந்த அவர் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகத்தில் தனது உயர் படிப்பை முடித்துக் கொண்டு 1920ல் தாயகம் திரும்பி இலங்கை சிவில் சேவையில் இணைந்தார். ஆனால் இரண்டு வருடத்தில் அதிலிருந்து விலகி இலங்கை பல்கலைக்கழக கல்லூரியில் ஆசிரியப் பணியினைத் தொடங்கி அதன் கணிதப் பேராசிரியராக இலங்கினார். E=MC² என்ற ஈன்ஸ்டினின் சக்திச் சமன்பாட்டிற்கு விளக்கமளித்து அதனை ஏற்ற உலகின் மூன்று கணித மேதைகளில் சுந்தரலிங்கமும் ஒருவராக கருதப்படுகின்றார். இவரின் கணிதப் புலமை காரணமாக பிரித்தானிய மகாராணி அவர்களது முடிசூட்டு வைபவத்தின் பின் கையுறை கழற்றி அவர் கைகுலுக்கிய சிலரில் இவரும் அடங்குவர்.

இலங்கைப் பலகலைக்கழக கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் இவர் இருமுறை சட்டவாக்கசபைக்கான தேர்தலில் போட்டியிட்டபோதிலும் வெற்றி பெறவில்லை. 1940ல் இலங்கைப் பல்கலைக் கழக கல்லூரியில் இருந்து விலகி சட்டத்தரணியாக தொழில் தொடங்கிய அவர் 1947ல் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு நடாத்தப்பட்ட தேர்தலில் வவனியாப் பிரதிநிதியாக வெற்றி பெற்று வர்த்தக வாணிப அமைச்சராக நியமனம் பெற்றார். இவரும் மற்றைய தமிழ்த்தலைவர்களைப் போல் சிங்களவர்களுடன் கூடி வாழ்ந்து பேச்சுவார்த்தை நடாத்தி தமிழர்களுக்கு எதனையும் உருப்படியாக பெற முடியாது என்பதை அனுபவ பூர்வமாக கண்டு சாம பேத தான தண்டத்தில் இனித் தண்டம் தான் எமக்கு வழி என அடங்காத் தமிழர் ஐக்கிய முன்னணியை தொடங்கினார்.

அடங்காத் தமிழர் ஐக்கிய முன்னணியியே முதன் முதலில் தனிநாடே தமிழர்க்கு வழி எனத் தொடங்கப்பட்ட தமிழர்களின் முதல் அரசியல் கட்சியாகும். இவரது கோரிக்கையை அன்றைய தமிழ்த் தலைவர்கள் அன்றே தமது கொள்கையாக முன்னெடுத்து தனிநாடு கோரியிருந்தால் என்றோ எமது தேசிய இனப்பிரச்சினை தீர்ந்து இருக்குமென்னும் ஆய்வாளர்கள் பலர். நண்டுகளை அடைத்து விற்கும் வியாபாரி ஒருவன் எல்லா நண்டுகளையும் பெட்டிக்குள் போட்டு மேலே அடைத்தான். ஆனால் ஒரு நண்டு பெட்டியை மட்டும் மேலே அடைக்கவில்லை. அவனது உதவியாளன் ஏன் அவ்வாறு செய்கின்றீர் எனக் கேட்டதற்கு இது தமிழர்களின் கடலில் பிடித்த நண்டு எனவே அடைக்கத்தேவையில்லை. ஒன்று சுதந்திரமாக போவதற்கு மேலே ஏறினால் மற்றது நீயா எனக்கு வழிகாட்டுகிறாய் எனக்கேட்டு அதனை கீழே இழுத்து விழுத்தி விடும். ஆதலால் ஒரு நண்டு கூட சுதந்திரமாக வெளியேறாது நாம் அந்த தமிழ் நண்டுகள் இருக்கும் பெட்டியை மூடத்தேவையில்லை என்றானாம். இந்தக் கதை தான் சுந்தரலிங்கத்தால் 1956களில் எழுப்பப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை அன்றைய தமிழ்த் தலைவர்கள் முன்னெடுக்காத செயலை நினைக்கும் பொழுது நினைவுக்கு வருகிறது. ஆயினும் தனிநாடே தமிழர்க்கு இனி வழி - இனி எந்தப் பேச்சிலும் பயனில்லை. எமக்கு குற்றம் செய்தவர்களை தண்டித்து நீதியை நிலைநாட்டி வாழவேண்டும் என்ற தண்டக் கருத்தை 90வது வயதில் 1985ல் இறக்கும் வரை சுந்தரலிங்கம் தெளிவாக கூறி வந்தார். வன்னி மண்ணின் எதற்கும் அஞ்சாத அடங்காத் தன்மை அதன் முன்னாள் பிரதிநிதியாக திகழ்ந்த சுந்தரலிங்கத்திற்கும் தொற்றி அவரின் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் நிறைந்து காணப்பட்டு அவரை அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் என வரலாறு குறிப்பிடச்செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் காலனித்துவ விலகல் தினமும் இந்தியக் குடியரசு தினமும் தந்த சில சிந்தனைகள்

இலங்கைத் தீவில் இருந்து காலனித்துவம் விலகிய 52வது ஆண்டு 04.02.2000ல் நிறைவு பெற்றது. தமிழர்கள் எதற்காக காலனித்துவத்திற்கு எதிராகப் போராடினார்கள் எதனை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்பதை காலனித்துவம் விலகியது முதல் சிறிலங்கா பௌத்த சிங்கள குடியரசு ஒன்று திணிக்கப்படும் வரை தமிழர்களின் அரசியல் தலைவராக விளங்கிய தந்தை எஸ்.ஜே. வி செல்வநாயகம் அவர்கள் வார்த்தைகளில் பார்ப்போம்.

1972ம் ஆண்டு சிங்கள பௌத்த குடியரசுக்கெதிராக தனது காங்கேசன்துறை பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜினமா செய்து அடையாள மக்கள் குடியொப்பத்திற்கு வழிசமைத்தார் தந்தை செல்வநாயகம். 1975 வரை சிறிலங்கா தேர்தல் நடைபெறுவதை இழுத்தடித்தது. இறுதியாக 1975ல் நடந்த காங்கேசன்துறை இடைத்தேர்தலில் பல்லாயிரக்கணக்கான வாக்குக்களால் வெற்றி பெற்றதன் பின்னர் சிறிலங்காப் பாராளமன்றத்தில் நிகழ்த்திய உரையினை சற்றுப் பார்ப்போம்.

அந்நியர்கள் தமிழர்களையும் சிங்களவர்களையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் வரையில் தமிழர்களும் சிங்களவர்களும் வேறுவேறான இறைமைகளின் கீழ் காலாதி காலமாக வாழ்ந்து வந்தனர். தமிழர்கள் தமது விடுதலையை மீள பெறலாம் என்ற நோக்குடனேயே சுதந்திரத்திற்கான போராட்டத்தில் முன்னணியில் நின்று போராடினார்கள் என்பதை நினைவு படுத்த விரும்புகின்றேன்.

நாங்கள் கடந்த 25 ஆண்டுகளாக சிங்களவர்களுடன் ஐக்கிய இலங்கைக்கு கீழ் சமத்துமான அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு எம்மாலான அனைத்து வழிகளிலும் முயற்சித்து வந்தோம். தொடர்ந்து வந்த எல்லா சிங்கள அரசாங்கங்களுமே தமக்கு காலனித்துவ விலகலினால் கிடைத்த அதிகாரத்தை பயன்படுத்தி எங்களுடைய அடிப்படை மனித உரிமைகளை மறுத்ததும் அல்லாமல் எங்களுடைய நிலையை இரண்டாந்தர குடிகள் என்ற நிலைக்கு குறைக்கவும் செய்தன. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவாக இறைமை [illegible] தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க கூடியதாக உள்ளது. இந்த தேர்தல் தீர்ப்பை தமிழீழ தேச மக்கள் தம்மிடம் ஏற்கனவே உள்ள இறைமையைப்பயன்படுத்தி மீளவும் சுதந்திரமாக வாழ்வதற்கான ஆணையாக வெளிப்படுத்தியுள்ளனர் என எனது மக்களுக்கும் தேசங்களுக்கும் அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனது கட்சியினர் இந்த ஆணையை முன்னெடுப்பர் என அவர்கள் சார்பாக உறுதி கூற விரும்புகின்றேன்.

தமிழர்கள் காலனித்துவ விலகலுக்காக ஏன் போராடினார்கள் அந்த காலனித்துவ விலகல் தமிழர்கள் எதிர்பார்த்தவற்றை கொடுக்காது சிறிலங்கா என்னும் புதுக் காலனித்துவம் ஒன்றை எவ்வாறு தமிழர்கள் மேல் திணித்தது என்பதை சிறிலங்காப் பாராளமன்றத்தில் விளக்கிய தந்தை செல்வா அன்றுடன் தமிழர்களுக்கும் சிறிலங்காப் பாராளமன்றத்திற்கும் இடையிலான தொடர்புகளை அறுத்துக் கொண்டார்.

தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமையினை கொண்டு தங்கள் தமிழீழத் தாயகத்தை தமிழர்கள் மீள நிறுவப் போவதாக 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் வெளிப்படுத்திய தந்தை செல்வநாயகம் இனிமேல் இதனை அடைவதற்கான பேச்சுவார்த்தைகளில் மட்டுமே தமிழர்கள் ஈடுபடுவர் எனவும் தெளிவாக கூறினார்.

டி. எஸ் சேனநாயக்கா சுதந்திரத்தை தடுக்க வேண்டாம் சுதந்திரம் கிடைத்த பின் சிறுபான்மையினங்களின் பிரச்சினைகளை நானே தீர்த்து வைப்பேன் என ஜி.ஜி. பொன்னம்பலத்தை ஏமாற்றியது. 26 ஆடி 1957ம் திகதிய பண்டா செல்வா ஒப்பந்தம் 24 பங்குனி 1965ம் திகதிய டட்லி செல்வா ஒப்பந்தம் என்பன சிங்களத் தலைமைகளால் மீறப்பட்டது போன்ற அனுபவங்களின் அடிப்படையில் தந்தை செல்வா சிங்கள அரசாங்கங்களுடன் எல்லா விதமான பேச்சுவார்த்தைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தார்.

ஜனநாயக வழிகளில் தமிழீழத்தை சிறிலங்கா ஏற்காதுவிடின் போராடி பெறப்படும் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 தேர்தல் விஞ்ஞாபனம் தெளிவாக எடுத்துரைத்தது. அத்துடன் 1977 தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் தமிழர் பிரதிநிதிகள் சிறிலங்காப் பாராளமன்றத்தின் பிரதிநிதிகளாக அல்லாது தமிழீழ அரசியல் அமைப்பு சபையின் பிரதிநிதியாகவே செயற்பட்டு தமிழீழ அரசியல் அமைப்பை உருவாக்குவர் எனவும் 1977 தேர்தல் விஞ்ஞாபனம் விளக்கமாக எடுத்துரைத்தது. இதன் பின் நடந்தவைகள் எல்லாம் நாடறியும். ஆயினும் மக்கள் உறுதி உறுதி உறுதி உறுதிக்கோர் உடைவுண்டாயின் இறுதி இறுதி இறுதி என்ற பாரதியின் எச்சரிக்கையை மறவாது இன்று வரை மனஉறுதியுடன் தமிழீழ விடுதலையை முன்னெடுத்து போராடி வருகின்றனர். தற்பொழுது இலங்கைத் தீவில் இரண்டு படைகள் இரண்டு விதமான நிர்வாகங்கள் இரண்டு விதமான சட்டஅமுலாக்கங்கள் உள்ளன என்பது உலகிற்கு நன்கு தெரிகிறது. இதனை உலகு ஏற்று எங்கள் தமிழீழத் தாயகத்தின் தலைமைக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கும் பொழுதே காலனித்துவத்தை விலக்கி தமிழர்கள் அடைய முயன்ற சுதந்திரத்தை தமிழர்கள் பூரணமாகப் பெற்றுக் கொள்வர். அதனால் தான் இந்நாளை தமிழர்களின் சுதந்திரநாளாக கருதமுடியாது காலனித்துவ விலகலின் 52வது ஆண்டு எனத் தலைப்பிட்டேன்.

இந்திய குடியரசு தினம் என்றதும் கவிஞர் வைரமுத்து 1947 ஆகஸ்ட் 15 என்ற தலைப்பில் எழுதிய கவிதை ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இதுதான் அந்தக் கவிதை.

1947 ஆகஸ்ட் 15
அவன்
ஒரு
பட்டுவேட்டி பற்றிய
கனவில் இருந்த போது
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது!

இவ்வாறு அடைய நினைத்த சுதந்திரம் ஒன்று அடைந்த நிலை வேறொன்று என்று பாட்டெழுதிய பாவலன் சுதந்திர வாழ்வு பற்றி சில நானாந்தக் காட்சிகளையும் பின்வருமாறு கூறிச் செல்கிறான். சிங்க இளைஞர்களின் சிலம்பக் கழிகள் இன்று ஊன்று கோல்களாய் உருமாற்றம் அடைந்தன. கிராமத்துப் பொது மரத்தில் அதன் இலைகளை விட அதில் பறக்கும் கட்சிக்கொடிகளின் எண்ணிக்கையே அதிகம் இப்போது. ராஜாக்கள் வெண் கொற்றக்குடையின் கீழ் வாழ வைத்தார்களாம் இன்றுவறுமைக்கோட்டின் கீழ் வாழ வைக்கிறார்கள். ராமராச்சிய மனுக்களுக்கு அனுமன்களே தீ வைத்து விட்டார்கள் !

அது சரி எப்போது உருப்படும் இத்தேசம் ? இனி என்ன செய்வதாய் உத்தேசம் எனக் கேள்விக் கணை தொடுத்து மக்களை சுதந்திரம் குடியரசு என்னும் தத்துவங்கள் குறித்து சிந்தித்து செயற்படவும் அழைக்கின்றான்.

சுதந்திர கீதம் கடைசி இந்தியனின் காதுகளில் இன்னும் கேட்கவில்லையே என அங்கலாய்க்கும் கவிஞன் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்றாயேநம் அகதிகள் நடந்தாவது வரட்டும் என்ற நல்லெண்ணத்தாலா என தமிழீழ மக்களின் தேசியத் தன்மையையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் சுதந்திர இந்தியாவுக்கு அக்கறையற்றுப் போனதால் ஏற்பட்ட விளைவுகளையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறான்.

தேர்தல் வந்தால் ஊருக்குள்ளே செத்தவன் எல்லாம் பிறக்கின்றான். தேர்தல் முடிந்தால் அய்யோ பாவம் இருப்பவன் எல்லாம் சாகின்றான். என குடியரசு இந்தியாவின் நிலையினை படிமக் கவிதையாக்கின்றான் கவிஞன்.

குடியரசு தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெறுவதைப் பார்க்கும் தமிழீழ மக்களுக்கு நளினி உட்பட நால்வர் சார்பாகவும் தாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த ஆயிரம் ஆயிரம் கருணை மனுக்களின் நினைவு தான் ஞாபகத்தில் நிற்கிறது.

முன்பு தியாகி திலீபனுக்கு அன்னை பூபதிக்கு நடந்தவை போல் – கவிஞர் வைரமுத்துவின் வார்த்தைகளில் சொல்வதானால்

காந்தி அண்ணல் சிலை உடைத்து – அதில் கைத்தடி மட்டும் நாம் எடுத்துக் கொண்டோம்

என்று இந்தியா இன்றும் நடந்து கொள்ளக் கூடாது என்பதே தமிழீழ மக்களின் இந்திய குடியரசு தின சிந்தனையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் வயதை தெரிந்து கொள்ள

பெண்களிடம் இருந்து தெரிந்து கொள்ள முடியாத ஒன்று அவர்களின் வயது. ஆம். வயதைப் பெண்களிடம் கேட்பதை முறையற்ற செயலாக கருதுபவர்களும் உண்டு. இதற்கு ஒரு குறுக்கு வழியை நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லித் தரப்போகின்றேன். எப்படியென்கின்றீர்களா?

ஒருவரைப் பார்த்து அவருடைய வீட்டு இலக்கத்தை மனதில் நினைக்கும்படி கூறுங்கள்
உதாரணமாக எனது வீட்டு இலக்கம் 39

அதனை இரண்டு மடங்காக்கி அதனுடன் 5ஐக் கூட்டும்படி கூறுங்கள்
என்னுடைய வீட்டு இலக்கத்தை இரண்டால் பெருக்கினால் 78 அதனுடன் 5 ஐக் கூட்டினால் 83

கூட்டி வரும் விடையை 50 ஆல் பெருக்கும் படி கூறுங்கள்
என்னுடைய விடையான 83 ஐ 50 ஆல் பெருக்கினால் 4150

இப்பொழுது கிடைக்கும் விடைக்கு அவருடைய வயதைக் கூட்டும்படி கூறுங்கள்
4150 உடன் எனது வயது 43 ஐக் கூட்டினால் 4193

வரும்விடைக்கு 365 ஐக் கூட்டுங்கள்
எனது விடையான 4193 க்கு 365 ஐக் கூட்டினால் 4558

தற்போது வரும் விடையில் இருந்து 615 ஐக் கழியுங்கள்
எனது விடையான 4558 க்கு 615 ஐக் கழித்தால் விடை 3943

இப்பொழுது கிடைக்கும் இறுதி விடையில் இடமிருந்து வலமாக உள்ள இறுதி இரண்டு தானங்களும் உங்கள் வயதையும் முதல் இரண்டு தானங்கள் உங்கள் வீட்டு இலக்கத்தையும் தரும்

எனது விடையான 3943 ல் இறுதி இரண்டு தானங்களும் அதாவது 43 எனது வயது அவ்வாறே முதல் இரண்டு தானங்களும் எனது வீட்டு இலக்கம்.

உங்கள் வயதுக்கும் வீட்டு இலக்கத்திற்கும் இதனை பரீட்சித்த பொழுது அது சரியாக அமைந்திருக்கும்

பெண்களின் வயதைக் கேட்டால் சொல்ல மாட்டார்கள் ஆனால் புதிர்க் கணக்கு என்று இந்தக் கணக்கைப் கேட்டீர்களானல் வழமாக மாட்டிக் கொள்வார்கள். Best of your luck!

## 1729 என்னும் இலக்கத்தின் முக்கியத்துவம் என்ன?

இராமனுஜம் அவர்கள் கேம்பிரிஜில் படித்துக் கொண்டிருக்கையில் ஒரு முறை நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது அவரைச் சந்திக்க பிரித்தானியாவின் புகழ்பெற்ற கணிதப் பேராசிரியர் ஜி. எச். ஹார்டி டாக்ஸி ஒன்றில் வந்திறங்கினார். அந்த டாக்ஸியின் இலக்கமான 1729 ஐ சுட்டிக் காட்டி இதற்கு ஒரு முக்கியத்துவம் உள்ளது என்றார் இராமனுஜம். ஹார்டி அதிசயமாகப் பார்த்தார். இந்த இலக்கமே இரண்டு கனமூலங்களை கூட்டுவதால் இன்னொரு கனமூலத்தை தரக் கூடிய மிக சிறிய இலக்கமென்றார். எப்படியென்கின்றீர்களா? இதோ கூட்டிப் பாருங்கள்.

$$1729 = 10^3 + 9^3$$
$$1729 = 12^3 + 1^3$$

இராமனுஜன் அவ்வளவு தூரத்திற்கு இலக்கங்களை குறித்து துல்லியமான அறிவைக் கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் உள்ள 22 மார்கழி 1887ல் பிறந்து 26 சித்திரை 1920ல் காலமாகிய சிறிநிவாச அய்யங்கார் இராமனுஜன் 33 ஆண்டுகளே வாழ்ந்தாலும் இராமனுஜன் தனது கண்டுபிடிப்புக்களால் இன்றைய நவீன உலகின் மிக முக்கியமான கணித மேதையாக திகழ்கின்றார். இவர் சென்னை பச்சையப்பாக் கல்லூரியில் கணிதத்தை தவிர்ந்த மற்றைய பாடங்களில் சித்தியடையத் தவறியதினால் பல்கலைக்கழக படிப்பை ஆரம்பத்தில் பெறமுடியவில்லை. ஆனாலும் அவர் மனம் சோராது சாதாரண எழுதுவினைஞராகவே இருந்து கொண்டு வறுமையுடனும் வாழ்க்கைப் பிரச்சினை களுடனும் எண்கள் சம்பந்தமான தனது ஆய்வுகளைத் தன்னந்தனியாக தொடர்ந்து தனது புதிய கொள்கைகளை உலகிற்கு அறிவிக்கத் தொடங்கிய பின்னரே அவரை கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் கணிதப் பேராசிரியர் ஹார்டி அங்கு அழைத்து அங்கு பட்டங்கள் பெறச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்த்து பதியின் சுருக்க வரலாறு

அருள் வெள்ளம் பாயும் பிரான்சின் லூர்த்து மாதாவின் திருப்பதி இன மத மொழி வேறுபாடுகளின்றி ஆண்டுதோறும் 5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தரிசித்து ஆன்மீக பலம் பெறும் அற்புத திருப்பதியாக திகழ்ந்து வருகிறது.

1858 ம் ஆண்டு மாசி 11ம் நாள் விறகு பொறுக்கச் சென்ற 14 வயது சிறுமியான பெர்ணடட் லூர்த்து கெபியில் தூய வெண்ணிற ஆடை தரித்த நீலப் பட்டி ஒன்றை இடையிலே கட்டிய கையில் திருச்செபமாலையை தாங்கிய பேரெழில் பெண் ஒருவரைக் கண்டு திகைப்புற்றாள். அப்பெண் பெர்ணடாட்டை அக்குகையடிக்கு அடிக்கடி வரும்படியும் அவள் மூலமாக தான் சில செய்திகளை உலகத்தவர்க்கு தெரிவிக்க விரும்புவதாகவும் தெரிவித்தாள். அப்பெண் பெர்ணட்டுக்கு 18 முறை திருக்காட்சி அளித்து உலகின் பாவப்போக்கினால் அளவில்லாத கவலை அடைந்து உள்ளேன். பாவிகள் மனந்திரும்ப செபம் செய்யுங்கள். என்று உலகிற்கு வேண்டுகோள் விடுத்தாள். 1848ல் கம்யூனிச பிரகடனம் விடுக்கப்பட்டதை அடுத்து ஆரம்பமான லூர்த்துபதிக் காட்சிகள் ஆன்மீகத்திற்கும் நாத்தீகத்திற்கும் இடையிலான போராட்டம் எனவும் அன்னை மரியாளின் திருக்காட்சிகள் இடம்பெற்றிராவிட்டால் ஐரோப்பா முழுவதும் நாத்திக மயமாகி இருக்கும் என ஆய்வாளர்கள் லூர்த்துபதி காட்சியின் சமுகதேவையினை குறிப்பிடுகின்றனர்.

பெப்ரவரி 25ம் நாள் இடம்பெற்ற திருக்காட்சியின் பொழுது தன் விரலால் பெர்ணடட் முழந்தாளில் நின்ற இடத்துக்கு அருகில் நீர்ச்சுனையொன்று பெருக்கெடுத்து பாயவைத்த அன்னை மார்ச் 2ம் நாள் காட்சியில் அவ்விடத்தில் திருக்கோவில் கட்டும்படி உத்தரவிட்டாள். இதுவே லூர்த்து திருப்பதியும் நோய்களைக் குணமாக்கும் லூாத்து நீரூற்றும் தோன்றிய வரலாறு. மார்ச் 25ம் நாள் இறுதிக் காட்சியின் பொழுது அன்னை மரியாள் நானே அமல உற்பவம் என தன் வாயால் திருவாய் மொழிந்ததினால் லூர்த்துபதியில் திருக்காட்சி அளித்த அன்னைமரியாள் அமலஉற்பவ மாதா என்ற சிறப்பு திருப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறாள். தேவஅன்னை இயேசுவை பாவமாசு அணுகாது பரிசுத்த ஆவியினால் கருத்தரித்து கன்னிமை அழியாமலே அவரைப் பெற்றெடுத்தாள் என்ற நம்பிக்கைக்கு உலகில் எழுப்பப்பட்டு வந்த சந்தேகங்களுக்கும் பகுத்தறிவு வாதங்களுக்கும் பதிலாக அன்னையே தன் வாயால் லூாத்து பதியில் தான் அமல உற்பவம் – அதாவது பாவமாசு அணுகாதவள் என சாட்சியம் கூறி இறைநம்பிக்கை நிலைபெறச் செய்தாள். எமது தாயகத்தில் அமல உற்பவ மாதாங் கோவில்கள் நிறைய உண்டு. அந்த அமல உற்பவ அன்னையிடம் நாமும் எம்மக்களுக்கு பாதுகாப்பான அமைதி விரைவில் கிடைக்க வேண்டி விடைபெறுவோம்.

### தோல கட்டித் தோமஸ் அடிகள்

தோலகட்டி என்றதுமே தோலகட்டி ஆச்சிரமத்தின் உலகப்புகழ் பெற்ற தயாரிப்பான தோலகட்டி நெல்லி இரசமே நினைவுக்கு வரும். முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் விருப்பத்திற்குரிய குளிர்பானமாகத் திகழும் அளவுக்கு பிரசித்தி பெற்றது அதன் இனிமை. ஆனால் அதை விட இனிமையானது தோலகட்டி நிறுவனர் புனித துறவி அவர்களின் பெரு வாழ்வு. தமிழீழத் தாயகத்தின் புனிதத் துறவி தோமஜ் அடிகள். மௌனமாக தியானங்களுடன் மாமிச உணவைத் தவிர்த்து தமிழ் முனிவர்கள் போல் தம் வாழ்வைக் கழிக்கும் கடும் தவங்கள் நிறைந்த தோலகட்டி செபமாலைத் தாசர்கள் ஆச்சிரமத்தை அமைத்தவர். இங்கு ஒவ்வொரு துறவியும் தன் சுய உழைப்பின் மூலம் நிலத்தில் பயிரிட்டும் சிறு சிறு கைத்தொழில்கள் செய்தும் தம் உணவிற்கு உழைக்க வேண்டும்..

உலகிலே தமிழ் முனிவர்கள் தவவழியில் நிறுவப்பட்ட முதல் கத்தோலிக்க ஆச்சிரமமாக தோலகட்டி திகழ்கிறது. யாழப்பாணம் கோவில் வீதியில் உள்ள அருள் ஆச்சிரமத்திலும் தமிழக மணப்பாறையிலும் திருச்சி கண்டொமன்ட் பகுதியிலும் தோலகட்டி செபமாலைத் தாசர்களின் கிளைச் சபைகள் பின்னர் நிறுவப்பட்டன. இன்று இந்த புனித துறவியின் பெரு முயற்சியினால் ஆன்மீக ஒளி வீசி பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் தரிசன பூமியாக அமைதிக்காக சென்று வரும் புனித இடமாகத் திகழ்ந்த தோலகட்டி ஆச்சிரமப் பகுதி சிறிலங்கா இராணுவத்தின் பூட்ஸ் கால்களினால் மிதிக்கப்படும் பலாலி இராணுவத் தளத்தின் முன் பகுதியாக காட்சி அளிக்கிறது. இந்தக் கொடுமையான நிலை நம்மவர்களின் முயற்சியினால் மாற்றப்பட்டு சுதந்திரத் தமிழீழத் தனியரசின் முதல் கத்தோலிக்க புனிதராக எங்கள் தமிழ் மாமுனி தோலகட்டி தோமஸ் அடிகள் திருநிலைப்படுத்துவதற்கு கத்தோலிக்கர்கள் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சமுதாய உருவாக்கம்

## அத்தியாயம் 1 – தொல்காப்பியத்தில் கற்பு

தமிழர்களுடைய சமுதாய உருவாக்கம் விஞ்ஞான நோக்குடையதாக ஆரம்பமாகியது என்பதை தமிழர்களின் இலக்கிய இலக்கண நூல்களில் காலத்தால் மிக முந்தியதாக கூறப்படும் தொல்காப்பியம் எடுத்து விளக்குகின்றது.

தமிழ் மொழி உலகின் மிகப் பழம் மொழிகளில் ஒன்றாக இருந்தாலும் கிறிஸ்துவுக்கு பின் இரண்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாக அறிஞர்கள் ஏறகும் தொல்காப்பியமே தமிழ் நூல்களில் காலத்தால் முந்திய நூலாக கருதப்படுகின்றது.

அப்படியானால் இதற்கு முன்னர் தமிழோ தமிழிலக்கிய இலக்கணமோ இருக்க வில்லையா? என்ற கேள்வி எழுப்பப்படலாம். உண்மையில் தமிழர்களது கலாச்சார அரசியல் வரலாறு உலகின் மூத்த இனங்களின் வரலாறுகளில் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அந்த கலாச்சார அரசியல் வரலாறுகளும் தமிழ் இலக்கண இலக்கிய வளர்ச்சிகளும் வாய்மொழி மரபாக போற்றப்பட்டு வந்துள்ளனவேயன்றி அவை எழுத்துருவம் பெறவில்லை. தொல்காப்பியம் ஏடேறிய பின்னரே வாய் மொழி மரபினூடாக வளர்ந்து வந்த தமிழர்களின் கலை இலக்கிய நூல்கள் நூலுருப் பெற்றன. இந்த வகையில் தமிழர்களின் இலக்கிய இலக்கண நூல்களில் இன்று கிடைக்க கூடிய முதன் நூலகாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது.

இனித் தொல்காப்பியம் மனித வாழ்வின் முதலாக நிலத்தையும் காலத்தையும் குறிக்கின்றது. அம் மனிதன் தான் வாழும் நிலம் தான் வாழும் காலம் என்பவற்றுக்கு ஏற்பவே தன் கருத்துருவாக்கத்தை உருவாக்குகின்றான். இந்த வகையில்

'முதலெனப்படுவது நிலம் பொழுதிரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே'

என்கிறது தொல்காப்பியம்.

பிறப்பு உயிரின் இருக்கையை அடையாளம் காட்டுகையில் அவ்வுயிரின் வாழ்க்கைக் காலம் ஆரம்பமாகிறது. அவ் உயிர் இயக்கம் அற்றுப் போகும் பொழுது வாழ்வுக்குரிய காலம் முடிவடைகிறது.இதனால் தான் ஒரு மனிதனின் முடிவைக் காலமாகினான் என்று கூறும் வழமை தமிழ் மரபாக அமைந்தது. இவ்வாறு காலத்தில் இருந்து ஆரம்பமாகும் மனிதனின் வாழ்வு அவன் வாழும் நிலத்தின் தன்மையில் தங்கியுள்ளது. இதனால் மனிதனை அவன் வாழும் நிலத்தைக் கொண்டு சுட்டி அழைக்கும் பண்பு தொல்காப்பியப் பண்பாக அமைகிறது.

தமிழரின் தோற்றம் கற்காலத்துக்கும் முற்பட்டது. தமிழர் வாழ்வு மலையில் ஆரம்பமாகியது என்பது ஆய்வாளர் கருத்து. மலையில் மலையும் மலைசார் பகுதிகளும் மலையில் மலரும் மலரான குறிஞ்சி மலரின் பெயரால் குறிஞ்சி நிலம் என தொல்காப்பியத்தில் அழைக்கப்படுகிறது.

மலைசார் வாழ்வின் பின்னணியில் உருவான சேயோன் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்படும் முருகனே தமிழர்களின் தெய்வவழிபாட்டின் ஊற்றாகிறான். காடும் காடு சார்ந்த நிலமும் காட்டு மலரான முல்லையின் பெயரால் முல்லை நிலம் என அழைக்கப்படுகிறது. முல்லை நிலத் தெய்வமாக திருமால் தொல்காப்பியத்தில குறிப்பிடப்படுகிறான். வயலும் வயல்சார் நிலமும் மருதம் என அழைக்கப்படுகிறது. மருதத்தின் தெய்வமாக இந்திரன் குறிப்பிடப்படுகிறான். கடற் கரை மருங்கில் மணல் பொருந்திய நிலமான நெய்தலின் தெய்வமாக வருணன் குறிப்பிடப்படுகின்றான்.

மனிதனை அடையாளம் காண அவன் வாழும் நிலத்தின் தன்மையைப் பயன்படுத்திய தொல்காப்பிய நிலப்பகுப்பினை தலைசிறந்த விஞ்ஞானத்தன்மையான முறை என்று போற்றுகின்றார் செக் நாட்டுப் பேராசிரியரான கமில்சுவலபில்.

ஒரு நிலத்தில் வாழும் மனிதன் இன்னொரு நிலத்திற்கு இடம் பெயர்ந்து வாழ வேண்டிய தேவை ஏற்பட்ட பொழுது அவன் எந்த நிலத்தில் குடியமர்கின்றானோ அந்த நிலத்தின் பெயரால் அவன் அழைக்கப்படும் மரபு கையாளப்பட்டது.

இதனால் மனிதனது அகத்தன்மை கொண்டு மனிதனை அடையாளப்படுத்தும் இழிநிலை இல்லாது மனிதனது சமத்துவத்தை சகோதரத்துவத்தை பேணிய நிலையில் அவனின் புறத்தன்மையான அவன் வாழும் நிலத்தைக் கொண்டு அவனை அடையாளம் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை உயர்வான ஒரு பகுப்பு என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை.

**தமிழர்களுடைய கலாச்சாரம் என்றால் என்ன?**

தமிழர்களின் கலாச்சார வளர்ச்சி தமிழர்களின் ஆன்மீக வளர்ச்சியினூடாக வளர்ச்சி பெற்ற ஒன்று என்ற வகையில் தமிழர்களின் கலாச்சாரத்தன்மையினை இனங்காண்பதற்கு தமிழர்களின் வாழ்வின் முதல் நிலை எனக் கூறப்படும் குறிஞ்சி நில வாழ்வில் தமிழர்களிடை நிலவிய ஆன்மீகச் சிந்தனைகள் உருவான முறைகள் குறித்து எடுத்து நோக்குவது அவசியம்.

ஆரம்ப கால மனிதன் தன்னை அழிக்கும் தன்மையுள்ளவற்றை தன்னைவிட அதிக சக்தி வாய்ந்தவையாக கருதி அவற்றுடன் தான் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றிலிருந்து தன்னைப் பாதுகாக்க முனைந்தான்.

இதனாலேயே அக்கினி வழிபாடு வருணனை வழிபடுதல் நாக வழிபாடு போன்றவை ஆரம்பகால மனித வழிபாடுகளில் பரவலாக காணப்படுகின்றது. பின்னர் மனித சிந்தனை விரிய விரிய தனக்கு மேற்பட்டவன் எனப்படும் இறைவனை தான் வாழும் புறச்சூழலுக்கு ஏற்ற தன் அரசனுக்குரிய வடிவில் பார்க்கும் தன்மை விரிவு பெற்றது. இத்தகைய ஒரு தன்மையின் பின்னணியில் வளர்ந்ததே முருக வழிபாடு.

குறிஞ்சி நிலத் தலைவனுக்குரிய அத்தனை பண்புகளையும் கொண்ட தலைவனாக 'சேயோன்' எனத் தொல்காப்பியம் கூறும் முருகன் இலங்குகின்றான். அத்துடன் தமிழர்களின் ஆதிகால வாழ்வியலும் முருக வழிபாட்டினூடாக உலகிற்குப் புலனாகின்றது.

தமிழர்கள் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த காலத்தில் பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த தன்மை கிரேக்க மக்களிடையிலும் அக்கால கட்டத்தில் காணப்பட்டதாக ஒப்பீட்டு ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பெண்கள் சிறுநில விவசாயத்தில் தம் இருப்பிடங்களைச் சுற்றி நிலத்தில் இருந்து இலகுவில் இழுத்தெடுக்க கூடிய கிழங்கு வகைகள் தானிய வகைகளையே இவர்கள் பயிரிட்டு பலன் பெற்று வந்தனர்.

குறிஞ்சி நிலத்தைப் பொறுத்த மட்டில் யானை பன்றி போன்ற மிருகங்கள் பயிர்களை புகுந்து மிதித்து அழிக்காமலும் கிளி குருவிகள் போன்றவை கொத்தியழிக்காமலும் பெண்கள் காவலரண்கள் அமைத்து பயிர்களை பாதுகாத்து வந்ததாக அக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த விஞ்ஞான ரீதியான தகவல்களுடன் வள்ளி முருகன் கதையினை மீள் நோக்கினால் அக்கதையின் கருவினதும் கதை வளர்க்கப்பட்டுள்ள பகைப் புலத்தினதும் சமுகவியல் தன்மை மிக நம்பகத் தன்மையானதாக அமைந்திருப்பதைக் காணலாம். சங்க காலச் செய்யுளில் முருகன் மயில் மேல் அல்லாது யானை மேல் ஏறி வரும் செய்தி கூறப்பட்டுள்ளமையையும் ஈண்டு நோக்கத்தக்கது.

குறிஞ்சி நிலத்தின் புவியியல் தன்மை காரணமாக களவியல் பண்பு குறிஞ்சியின் பண்பாக விதந்துரைக்கப்படுதலையும் காணலாம்.

காதல் கொள்வதை காதல் வாழ்வை களவியல் என வர்ணிப்பதற்கு காரணம் மனத்தை மற்றொருவர் கவர்ந்து செல்ல அவரிடம் மனதை இழந்த நிலையில்- மனம் களவாடப்பட்ட நிலையில் வாழ்வினை ஓட்டிச் செல்வதைக் குறிக்கின்றது.

இதனால் காதல் தன்மைக்குச் சாதகமான இயற்கைத்தன்மையைக் கொண்டிருந்த குறிஞ்சி நில வாழ்வில் களவியல் முதன்மைப்பண்பாக மாறி புணர்ச்சி இந்நிலத்திற்குரிய உரிப்பொருளாக கூறப்படுவதில் வியப்பில்லை.

நிலமும் காலமும் முதற்பொருளாக கொள்ளப்பட்டு அவை தவிர்ந்த ஏனைய பண்புகள் உரிப் பொருளாக கூறப்படுவது தொல்காப்பிய முறைமை.

புணர்ச்சி குறிஞ்சி நிலத்திற்கு உரிப்பொருளாவது அக்காலத்தில் பெண்-ஆண் சமத்துவம் போற்றப்பட்டு பெண் ஆணுக்கு நிகரான சுதந்திரத்தை அனுபவித்தமையை வெளிப்படுத்துகின்றது. குறிஞ்சி நில வாழ்வின் பின் ஏற்பட்ட பொருளாதார முறைமைகள் பெண் பாலியலைப் பொறுத்தவரை ஆணைவிட அதிக கட்டுப்பாடுகளை அடக்குமுறைகளை அனுபவிக்கும் நிலைக்கு அவளைத் தள்ளி விட்டமை கலாச்சார வரலாறு.

குறிஞ்சி நில வாழ்வில் நிலம் என்னும் பொருளாதாரக்காரணி பெண்ணுக்குரியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இதனால் தாய்வழிச் சமுதாய அமைப்பினை உடைய இனமாகத் தமிழினம் வளர்ச்சி பெற்றது.

பின்னைய ஆய்வாளர்கள் இதனைத் திராவிட இனத்தின் தலைமைப் பண்புகளில் ஒன்றாகக் குறிப்பிடுவர்.

தமிழர்களிடை பெண்ணைத் தெய்வமாக கொண்டு வழிபடும் மரபு மிக பழங்காலம் முதல் தொடர்ந்து வருகிறது. கொற்றவை வழிபாடு குறிஞ்சி நில வாழ்வில் சிறப்புற்றிருந்த மற்றொரு வழிபாடாகும்.

'மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப்புறனே'

என்னும் தொல்காப்பிய வரிகள் குறிஞ்சி நிலத்தில் கொற்றவை வழிபாடு சிறப்புற்றிருந்தமையை சுட்டிக்காட்டுகின்றது.

பெண்களின் வீரத்தினை கொற்றவை நிலை என குறிஞ்சி நில வாழ்வு போற்றிய போதிலும் முல்லை நில வாழ்வுடன் குறிஞ்சி வாழ்வு கலப்புறும் பின்னைய நிலையில் இல்லாண் முல்லை என ஆண்களின் வீரமும் போற்றப்படும் தன்மை பின்னர்தோன்றி வளர்ந்தமையை தொல்காப்பியத்துக்கான விளக்க உரைகளில் காணலாம்.

முருகனை கொற்றவை மைந்தன் எனப் போற்றுவதும் வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறினாட்டு அயர்ந்த காந்தளும் என முருகன் போர்த்தொழிலினை நடாத்தும்படி வேலன் ஆட்டம் என்னும் நாட்டார் நடனத்தினை ஆடும் சுதாபாத்திரங்களூடாக பேசுவதாக கூறும் மரபும் தமிழர்களிடை வீரம் குறிஞ்சிப் பண்பாக வளர்ந்தமையைக் காணலாம்.

**இதனால் தான் தமிழ்க்கலாச்சாரம் என்பது காதலும் வீரமும் இணைந்த வாழ்வு என்கின்றனர்.**

## பெண்ணடிமைத் தனத்தின் ஆரம்பம்

'மாயோன் மேய காடுறை உலகமும்' என திருமாலின் காத்தலைக் கொண்ட காடாகிய இடம் எனத் தொல்காப்பியம் கூறும் முல்லை நிலம் ஆடுமாடு மேய்த்தலை முதன்மைத் தொழிலாக கொண்ட மக்கள் வாழ்ந்த பிரதேசத்தைக் குறிக்கின்றது. இம் மக்களில் ஆண்கள் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு பசும் புல்தரைகள் தேடிச் சென்று விட அவர்களின் தலைவியர்கள் அவர்கள் திரும்பி வரும் வரை தலைவரை எதிர்பார்த்து காத்திருக்கும் அந்த அகவுணர்ச்சி இருத்தல் என்னும் முல்லை நிலத்திற்குரிய உரிப்பொருளாக தொல்காப்பியத்தால் சுட்டிக்காட்டப்படுகிறது.

முல்லை நிலப் பெண்ணின் மனஉறுதியே இருத்தல் என்னும் உரிப்பொருளை முல்லைக்கு கூட்டுவிக்கின்றது. இவ்வாறு கல்போன்று உறுதியாக இருப்பதினால் பெண் கற்புடையாள் எனப்பட்டாள்.

ஆனால் பெண் சிறுநில விவசாயியாக இருந்து பொருளாதார உற்பத்தி முறைமையில் ஆட்சி புரிந்த நிலை மாறி ஆண் பொருளாதார முறைமைகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற தன்மை முல்லை நிலத்தில் முளைவிடத் தொடங்குகின்றது.

இதனால் தலைவன் பிரிந்த நேரத்தில் பெண் அவனை நினைந்து காத்திருக்க வேண்டும் என்ற ஒரு சமுகப் போக்கு சமுக கடப்பாடாக இக்கால கட்டத்தில் உருவாகின்றது.

மேலும் முல்லைநில வாழ்வில் ஆயர்தலைவனாக இறைவன் போற்றப்பட்டு அத்தலைவனுக்குரிய ஆயர்குலப் பண்புகளுடன் கண்ணன் வழிபாடு வளர்ச்சியுற்றுச் சென்றதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மருதம் எனப்படும் வயல் சார் வாழ்வில் பயிரிட்டு அறுவடை செய்து அதனை சேர்த்து வைத்து விட்டு மீதியுள்ள காலத்தில் அதனை வைத்து வாழும் பொருளாதார மிகை நிலை தமிழரிடை தோற்றம் பெற்றது.

இந்தப் பொருளாதரா மிகை நிலை பெண்ணடிமைத்தனத்திற்கு கால்கோளிட்டது என்பது பல ஆய்வாளர்களின் முடிபு. பொருளாதார மிகையுடன் வாழ்ந்த மருதநில ஆண்கள் தங்களிடம் உள்ள பொருட்களை பரிசளித்து தம் மனைவியர் அல்லாத பெண்களுடன் காமஇன்பம் துய்க்கும் வழமை –பரத்தையர் ஒழுக்கம் என்ற பெயரில் இக்கால கட்டத்தில் ஆரம்பமாகியது. இதனால் அத்தகைய ஆண்களின் மனைவியர்கள் ஊடல் கொள்வதும் பின்னர் இணைவதும் இக்கால சமுகப்பண்பாகி ஊடல் மருதத்தின் உரிப்பொருளாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்படு பொருளாதாரத்தின் வளர்ச்சி தமிழர்களை மீன்பிடித்தல் உப்பு விளைத்தல் என்பவற்றுக்காக கடற்கரை சார் பிரதேசங்களில் வாழ்வைத் தொடர வைத்தது. நெய்தல் என அழைக்கப்பட்ட இப்பிரதேச வாழ்வில் ஆண்கள் கடல்மீது செல்ல பெண்கள் அவர்களை நினைந்து இரங்கி வாழும் தன்மை தோற்றம் பெற்றது. இதனால் நெய்தலின் உரிப்பொருளாக இரங்கல் கொள்ளப்பட்டது. ஆணாதிக்க பொருளாதார முறைமைகளின் வளர்ச்சியில் வீரம் மிகுந்தவளாக விதந்துரைக்கப்பட்ட தமிழ்ப்பெண் இரங்கலுக்குரியவளாக மாற்றப்பட்டு விடுகிறாள்.

**போர்த்தன்மை தமிழ்க்கலாச்சாரத்தின் ஒரு குணம்**

பாலை என்கின்ற வாழ்வியல் நால்வகை நிலப்பகுப்புடன் தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. ஆனால் ஐந்து நிலங்களில் வாழும் மக்களின் தன்மைகளை அன்பினைந்திணையாக உரிப்பொருளில் கூறும் பொழுது பிரிதல் என்னும் உரிப் பொருளும் அடக்கப்பட்டு ஐந்து உரிப்பொருட்கள் கூறப்பட்டுள்ளன. இந்த பிரிதல் பாலைக்கு கூறப்பட்டதாக தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தலைவன் போருக்குச் சென்ற நேரத்தில் அவன் திரும்பி வருவானா எனப் பெண்மனது அடையும் துடிப்பே பிரிதல் என்னும் உரிப்பொருளாக சுட்டப்படுகிறது.

மேலும் நால் நிலங்களுக்கும் தெய்வங்கள் குறித்த தொல்காப்பியம் பாலைக்கு தெய்வம் குறிப்பிடவில்லை. இதற்கு முதற் காரணம் தமிழர் வாழ்ந்த பகுதிகளில் புவியியல்ரீதியான பாலைநிலம் இல்லை. அடுத்த காரணம் இயற்கை அழிவுகளாலோ அல்லது யுத்த அனர்த்தங்களோ அல்லது வறுமையோ ஏற்படும் பொழுது நால்வகை நிலங்களில் மக்கள் வாழ்வுக்கு ஏற்படும் நிலைகளே பாலை வாழ்க்கையினை அவர்கள் வாழ வைக்கின்றது. தொல்காப்பியம் நால் நிலங்களும் தெய்வத்தின் பாதுகாப்பினுள் இருக்கின்றது என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தவே தெய்வங்களைக் குறிப்பிட்டது. ஆனால் பாலை என்பது மக்கள் பாதுகாப்பினை இழப்பதினால் தோன்றும் அல்லது தோன்றிய பிரதேசம். இதற்கு தெய்வம் கூறமுடியாத நிலை இயல்பாக தோன்றுவதால் தொல்காப்பிம் தெய்வம் கூறாது விட்டுவிடுகின்து. ஆயினும் கருப் பொருள் குறித்த தொல்காபபிய சூத்திரமாகிய

தெய்வம் உணர்வே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு
அவ்வகை பிறவும் கருவென மொழிப

என்பதற்கு உரை கூறுகையில் கொற்றவையை பாலைக்கு தெய்வமாக கூறுகின்றனர் தொல்காபபியத்திற்கு உரைகண்டவர்கள்.

மக்களது வாழ்வு பாலை வாழ்வாக மாறிய நிலையில் அவர்கள் வறுமைப்பட்டு குடிமனையிழந்து ஊரின் ஒதுக்குப் புறங்களில் நீர் வசதியற்ற நிலைகளில் வாழ்வது வழமை. இவ்விதம் பாலை வாழ்வை அனுபவிக்கும் மக்கள் தங்கள் வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்றை தங்கள் இழிநிலையை அடக்குமறைகளை ஒடுக்கு முறைகளைத் தகர்த்தெறியும் வாழ்க்கையை வாழ முற்படுவர். இதனால் போராட்டம் பாலை வாழ்வின் சமுதாய இயங்கியலாக அமையும்.

இந்த போராட்டத்தில் அவர்கள் பெருவெற்றி ஈட்டுவது வரலாற்று நியதியானதனால் பாலை வாழ் மக்கள் போருக்கு அணிந்து செல்லும் பூவாகிய வாகை வெற்றி வாகை எனச் சிறப்பித்து கூறப்பட்டு இன்று தமிழில் வெற்றிக்கு ஒரு சொல்லாக மிளிர்கிறது.

குறிஞ்சி நில மக்கள் வெட்சிப் பூவையும் முல்லை நில மக்கள் வஞ்சிப்பூவையும் மருதநில மக்கள் உழிஞைப் பூவையும் நெய்தல் நில மக்கள் தும்பைப்பூவையும் அணிந்து போருக்கு செல்வர். இவ்வாறாக போரும் தமிழ்க் கலாச்சாரத்தின் ஒரு அம்சமாக விளங்கியமையை தொல்காப்பியம் எடுத்து விளக்குகின்றது.

ஆயினும் கல்வி கேள்வி கற்றலுக்கு செல்லுதல் பகை காரணமாகப் பிரிதல் தூது போவதற்காகப் பிரிதல் எனப் பிரிதல் மூன்று வகையாக நிகழலாம் எனவும் தொல்காப்பியம் அகத்திணையியலில் எடுத்து விளக்குகின்றது. தமிழர்களிடை தலைவன் தலைவியை கடல்கடந்து அழைத்துச் செல்லும் வழக்கம் இருக்கவில்லை என்கிறது தொல்காப்பியம். அவ்வாறே கணவன் காலமாகும் பொழுது அவனோடு உடன்கட்டை ஏறும் வழக்கமும் தமிழர்களிடை இருக்கவில்லை எனத் தொல்காப்பியம் தெளிவாக கூறுகின்றது.

**கற்பெண்ணும் கோட்பாடு**

பொருளாதார மிகை தோன்றியதும் சமுதாயத்தில் காணப்படும் ஒழுக்க நெறிகள் பிறழ்ச்சியடைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமை. இதனால் தான் திருமண முறைமைகள்ெ தோன்றி குடும்ப உறவுகளை நெறிப்படுத்த வேண்டிய நிலை தோன்றியது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப

என்னும் தொல்காப்பிய வரிகள் இதனையே வலியுறுத்துகின்றன. கரணம் என்பது திருமணச் சடங்குகள் முறைமைகளைக் குறிக்கின்றது.
மேலும் தொல்காப்பியம்

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரிய மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே

என கற்பென்றால் என்ன என விளக்குகின்றார்.

இங்கு கற்பெனப்படுவதை சடங்கோடு பொருந்திக் கொள்வதற்குரிய தலைவன் கொள்ளுதற்குரிய மரபினை உடைய தலைவியை கொடுத்தற்குரிய தலைவியின் உற்றவர்கள் மணம் செய்து கொடுக்க மணம் செய்து கொள்ளும் தன்மை என்றே தொல்காபபியர் கூறுகின்றார். அதாவது தமிழ் மரபு வழுவாத முறைமையில் ஆணும் பெண்ணும் திருமணம் செய்யும் தன்மையினைத் தான் கற்பு என்கிறார் தொல்காபபியர். இன்னும் ஆழமாகப் பார்த்தால் ஆணும் பெண்ணும் பழிக்கு அஞ்சுதல் என்ற இயல்பினைப் போற்றி தங்கள் வாழ்வை பழிகள் அற்ற வகையில் தொடங்கும் மன உறுதியுள்ளவர்களாக வாழ்ந்து பின்னரும் அதே மன உறுதியுடன் நல்லறம் நடாத்துவதையே கற்பு என்பது குறித்து நிற்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி மனஉறுதியுள்ளவனாக ஆண்மகன் விளங்கும் மரபே தமிழர் மரபு. இதனை உணர்ந்து அதற்கேற்ப பெண்ணும் வாழ்தல் தமிழர் பெருமை. அதனால் கற்பைப் பற்றிக் கூற வந்த தொல்காபபியர் 'பெற்ற தேஎத்து பெருமையின் நிலை' என அதனைக் கூறுகின்றார். இதனைத் தான் பாரதி பின்னர் கற்பு நிலை என்று சொல்ல வந்தார் அதை இருவருக்கும் பொதுவில் வைப்போம்' என்று அழகாக கூறினான். எனவே தமிழர்களைப் பொறுத்தவரையில் கற்பு என்பது ஆணினதும் பெண்ணினதும் மனஉறுதியினை வெளிப்படுத்தும் கோட்பாடாகவே வளர்ச்சி பெற்றது. பின்னர் ஆணாதிக்க சமுதாயத்தின் மேலாண்மை காரணமாக கற்பு என்பது பெண்ணுக்குரிய ஒரு கட்டுப்பாடு என்ற நிலை தோன்றி பெண்ணின் உரிமைகளை மறுப்பதற்குரிய சமுக ஊடகமானமை பின்னைய கலாச்சார வரலாறு. - தொடரும்

## வானுக்கும் மண்ணுக்கும் சண்டையா
## ஆணுக்கும் பெண்ணுக்கும் போட்டியா

பெண்ணின் பெருமை
ஆணின் ஆண்மை
இரண்டின் இணைப்பு
வாழ்வின் உயர்வு
புரிந்தவர் வாழ்வில் என்றுமில்லை
பிரிவும் கண்ணீரும் அறிந்திடுவோமே

ஆணுக்கும் பெண்ணுக்கும்
போட்டி என்பது
வானுக்கும் மண்ணுக்கும்
சண்டை போன்றது
ஆணும் பெண்ணும் என்றும்
மானிடத்தின் மகத்துவங்கள் தெரிந்திடுவோமே

நீருக்கும் நெருப்புக்கும்
இரு வேறு இயல்புகள்
நெருப்பினால் கொதிப்பது நீரானால்
நீரினால் அணைவது நெருப்பன்றோ
ஆணும் பெண்ணும் இருவேறு இயல்பினர்
இருவரும் ஒன்றாவர் அன்பென்னும் உறவினால்

பெண்மையே மானிடத்தின் தாயே
உன்னை நீ புரிந்து கொள்
ஆண்மையே மானிடத்தின் ஊற்றே
உன்னை நீ தெரிந்து கொள்
அடக்கு முறையாளர்கள் எழுதுகின்ற
வேதங்களோ உன்னில் யார் பெரிதென்ற
கோலங்கள்

விடுதலைப் பூமியில்
வெட்டிப்பேச்சுக்கு இடமேயில்லை
யாருக்கும் யாரும் என்றும் அடிமையில்லை
யாரிலும் எவரும் பெரிதாவது சாதனைகளாலேயே
தேசம் உயர்ந்திட மானிடம் சிறந்திட
உழைப்பவர் பெரியவர்
ஆணும் பெண்ணும் தேசத்தின் செல்வங்கள்
வாழுவோம் என்றும் சுதந்திரமாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத வாசிக்க ஆரம்பிக்கும் குழந்தைகளுக்கு பெரியோர்கள் எப்படி உதவலாம்?

ஒரு குழந்தை எழுத ஆரமப்பிப்பது என்பது அக்குழந்தையின் வளர்ச்சியில் முக்கியமான ஒன்று. இதனால் தான் கல்விக்குத் தெய்வமான அன்னை சரஸ்வதிக்கு பூஜை செய்து குரு ஒருவர் நவதானியங்களின் மேல் குழந்தையைக் கொண்டு முதல் எழுத்தை எழுத வைக்கும் பண்பாடு தமிழ்ப்பண்பாடாகப் கொள்ளப்பட்டு வருகிறது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது தமிழர் இடை நீண்ட காலமாக இருந்து வரும் நம்பிக்கை. குடந்தைக்கு அருகில் உள்ள இன்னம்பர் என்னும்புண்ணிய பதியில் வைத்து இறைவன் அகத்தியர்க்கு தமிழினை படிப்பித்ததினால் எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற சொற்றொடர் தமிழில் பழகத் தொடங்கியது என்பது தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தும் செய்தி. இமயம் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே பிரபஞ்சத்தின் ஆதாரமாகத் தோன்றிய மேரு மலையின் மூன்று சிகரங்களிலும் ஞான வடிவான விநாயகர் தன் தந்தமொன்றை முறித்து அதனை எழுத்தாணியாக கொண்டு இயல்-இசை-நாடகம் என்னும் முத்தமிழ்த்துறைகளையும் எழுதினார் என்பது தமிழர்களிடை நிலவும் மற்றொரு நம்பிக்கை. இந்தச் செய்தியை அருணகிரிநாதர்

முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

எனப்பாடிச் செல்கின்றார். எது எப்படியிருப்பினும் தமிழர்களிடை எழுத்தினை எழுதத் தொடங்குதல் என்பது தெய்வீகமான - புனிதமான ஒன்றாக கொள்ளப்பட்டது - கொள்ளப்பட்டு வருகிறது.

எண் என்ப
ஏனை எழுத்தென்ப இவை இரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு

என்பது வள்ளுவர் வாக்கு. ஆதலால் நாம் குழந்தை எழுத ஆரம்பிக்கும் பொழுது அம்முயற்சிக்கு முழு ஆதரவினை வழங்க வேண்டியவர்களாக உள்ளோம்.
முதலில் குழந்தை அவதானிப்பதன் மூலமே எழுதுவதற்குத் தன்னைத் தயார் செய்கிறது. இதனால் பெற்றோர்களே குழந்தையின் முதலாவது ஆசிரியர்களாக உள்ளனர். அழகான சித்திரங்களைக் கீறும் பொழுது - வீட்டை அலங்கரிக்கும் பொழுது - கடிதங்கள் வாழ்த்து அட்டைகள் எழுதும் பொழுது - எல்லாம் குழந்தையும் அவற்றை அவதானிக்க - பார்க்க விரும்புகிறது என்பதை மறந்து விடாதீர்கள். குழந்தையுடன் சேர்ந்து அவற்றைச் செய்யுங்கள். குழந்தையின் மூளை விரைவாக அவற்றைத் தன்வயப்படுத்திக் கொள்ளும். அதே பாணியில் தானும் கீறக் கிறுக்கத் தொடங்கும். அதிகமான குழந்தைகள் கிறுக்குதல் சில அடையாளங்களை வரைதல் என்பவற்றையே தமது ஆரம்ப எழுத்துப்பயிற்சியாக கைக்கொள்வர். அதனைக் கண்டித்து தடுக்காது குழந்தை கிறுக்குவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள். தரையில் சுவரில் கிறுக்காது பேப்பரில் கிறுக்க பழக்குங்கள். குழந்தை எதையாவது கிறுக்கி விட்டு உங்களிடம் காட்டினால் அல்லது உங்களைப் பார்த்தால் குழந்தை தனது கிறுக்கல் குறித்து உங்களின் கருத்தை அறிய முற்படுகிறது என்பதை மறந்து விடாதீர்கள். அந்நேரத்தில் அது கிறுக்கியுள்ளது உங்களுக்கு விளங்குவது போல காட்டி பாராட்டுங்கள். ஊக்குவியுங்கள். அப்பொழுதுதான் அக்குழந்தை தன்நம்பிக்கையுடன் தொடர்ந்து தன் கருத்துக்களை உருவகங்களை இரசனைகளை கீற எழுதத் தொடங்கும்.

எழுத்துக்களை எழுதப்பழக்கு முன் குழந்தைக்கு அவ் எழுத்தின் வடிவமும் ஓசையும் நன்கு பரிச்சயமாக்கப்படல் வேண்டும். எனவே குழந்தையுடன் சிறுவர் புத்தகங்களை நீங்கள் வாசிக்க வாசிக்க குழந்தைக்கு எழுத்து வடிவம் பரிச்சயமாகும். முதலில் பெரிய படங்களின் கீழ் பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களை வாசியுங்கள். குழந்தை தான் இரசிக்கும் அந்த வர்ணத்தை அல்லது படத்தை தனக்கு தெரிந்த மாதிரி கீறுக்க முயலும். குழந்தை எழுதப் பழக முன்னதாக வேறுபிரித்து அறியும் பகுத்தறியும் ஆற்றலைத் தன்னில் வளர்க்கும். இது எவ்வளவுக்கு வளர்க்கப்படுகிறதோ அவ்வளவுக்க அவ்வளவு இலகுவாக குழந்தை எழுத எண்ணப் பழகும். ஆகவே முதலில் வடிவங்களை ஒன்றாகச் சேர்த்தல்- வர்ணங்களை ஒன்றாக வைத்தல்- படங்களை ஒரே தொகுதியாக சேர்த்தல் போன்ற விளையாட்டுக்களை குழந்தையுடன் சேர்ந்து விளையாடுங்கள். கணிதத்திற்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். உதாரணமாக பிரித்தானியாவின் பிரபல கவிஞரான பைரனின் மகள் ஆடா பைரன் லவ்லேஸ் தான் முதலாவது கொம்பியூட்டர் புரோகிராமராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுகிறார். இவர் தான் கல்குலேட்டர்களின் தாய் எனவும் சிலரால் வர்ணிக்கப்படுகின்றார் .இவர் உடைய பெயரையே பின்னர் 1970களில் எழுதப்பட்ட கொம்பியூட்டர் புரோகிராமுக்கு'ஆடா' புரோகிராம் என வைத்தனர். இவர் சிறுவயதில் தன் தந்தை எதுகை மோனையுடன் ஆங்கிலத்தில் வடித்த கவிதைகளின் ஓசைகளால் ஈர்க்கப்பட்டு இசைக்கலைஞையாகத் தன்னை வெளிப்படுத்தி அதன் பின்னரே தலை சிறந்த கணிதக்கண்டுபிடிப்புக்களை செய்தார் என்பது இவரின் வரலாறு. எனவே இசையும் ஓவியமும் கூட குழந்தைகளின் எழுத்தியல் கணிதவியல் வளர்ச்சிகளில் பெரும் பங்கேற்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள்.

சமச்சீர்கள்- பிரதிபலிப்புக்கள்-சுழற்சிகள் போன்ற சிக்கலான கணிதப்பிரிவுகளை சிறுவர்களை நடனமிட வைத்து இலகுவாகப் படிப்பிக்கலாம் என்பது கணித ஆய்வாளர்கள் பலரின் கருத்து. ஆதலால் குழந்தையின் நடனமாடும் முயற்சிகளை ஊக்குவியுங்கள். இசை பாடும் திறமைகளை வளருங்கள். சித்திரம் வரையும் ஆற்றல்களை பாராட்டுங்கள். இவை தான் குழந்தையின் எழுதும் கணிக்கும் ஆற்றல்களாக பரிணமிக்கின்றன.

மேலும் குழந்தையின் அறிவியல் வளர்ச்சிக்கு குழந்தை மகிழ்ச்சியான மனதுடன் வளருவது மிக மிக அவசியம். குழந்தைகளுக்கு முன்பாக சத்தமிடுதல்- சண்டையிடுதல்- வன்முறைப் படங்களைப் பார்த்தல்- பாலியல் படங்களைப் பார்த்தல் போன்றவற்றைத் தவிர்த்து கொள்ளுங்கள். குழந்தைக்கு தகப்பனோ தாயோ விளையாட்டுப் பொருட்கள் தீன்பண்டங்களை வாங்கி கொடுக்கும் பொழுது குழந்தைக்கு முன்னால் காசுக் கணக்கு பார்த்து சண்டையிடுவதை குழந்தையிடம் இனி இப்படி கேட்பியா என்று கண்டிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

குழந்தை உருவத்தில் சின்னதாக இருந்தாலும் உணர்ச்சிகளை புரிந்து வேதனைப்படும் தன்மையுள்ள மனிதன் என்பதை மறந்து விடாதீர்கள். குழச்தை எழுத்துக்களை கோணல் மாணலாக எழுதினால் இடக்கையால் எழுதினால் தயவு செய்து கண்டித்து திருத்த முற்படாதீர்கள். இலக்கங்களையும் குழந்தை ஆரம்பத்தில் எழுத்தாகவே கருதும் அதனால் சில சமயங்களில் சில குழந்தைகள் இலக்கங்களை வலமிடமாக மாறி எழுதுவர். இதனைக் கண்டு அதனைக் கண்டிக்க வேண்டாம். காலகெதியில் அவை அவற்றை சரியான வடிவில் எழுத தாமாகவே தொடங்குவர். அறிவு எனப்பட்டது உண்மையினை கண்டறிவதற்கான கருவி. இதனை மறவாது குழந்தைகளை சிறுவயது முதலே உண்மைகளை உணர பேச நேசிக்க கூடிய வகையில் அவற்றுக்கு கதைகள் பாடல்கள் சொல்லிக் கொடுத்து வளர்த்தீர்களானால் அவைகளின் எழுத்தில் சிந்தனையில் சத்தியத்தன்மை நித்தியமும் சுடர் விடும்.

## வாசித்தல் என்பது ஒரு கலை

வாசித்தல் என்பது ஒரு கலை. எந்தக் கலையையுமே பயிற்சியினால் தான் மனிதன் தனதாக்குகின்றான். ஆனால் வாசித்தல் எனும் கலை இரண்டு செயல் முறைகளுடன் தொடர்புடையது. ஒன்று வரைபை அல்லது வரிவடிவத்தை அல்லது வர்ணபேதத்தை அடையாளப்படுத்தி அறிந்து கொள்ளல். அடுத்தது தான் அறிந்து கொண்டதை ஓசையினால் பேச்சினால் விளக்குவது. இவை இரண்டுமே வாசித்தலின் பொழுது எம்மையறியாமலே பின்னிப் பிணைந்து நடைபெறும் செயல்கள். இவை இரண்டு செயல்களாக இருந்தாலும் அவை அடுத்து அடுத்து நடைபெறும் வேகத்தினால் ஒரே செயலாக -வாசித்தல் என்னும் செயலாக கொள்ளப்படுகிறது. இந்த வாசித்தல் குறித்த சிந்தனையுடன் குழந்தைகளுக்கு எவ்விதம் வாசிப்பதில் நாம் உதவலாம் என்பது குறித்து எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கு தொகுத்து தருகின்றேன்.

குழந்தைக்கு எதையும் தன் அகப்படுத்தல் என்னும் பண்பு மிக வேகமாக செயற்படும். அது தன் சின்னஞ்சிறு விழியைச் சுழற்றிச் சுழற்றிப் பார்க்கையில் இந்த உலகை துருவித் துருவி ஆராய்கிறது என்பதை நாம் மறக்க கூடாது. இந்த புறத்தை அகமாக்கும் தன் முயற்சியில் குழந்தை அறிந்து கொள்ளுதல் என்னும் செயற்பாட்டில் தானாகவே வளரத் தொடர்கிறது. அந்த வளர்ச்சியில் தனக்கு தெரிந்த வகையில் ஓசைகள் மூலம் வெளிப்படுத்த தொடங்கும். இதுவே குழந்தையின் முதல் வாசிப்பு.

ஏனவே குழந்தையின் இந்த அகவயப்படுத்தும் தன்மையை அதிகரிக்க கூடிய வகையில் குழந்தையினை இயற்கையழகுடன் பழக விடுதல் குழந்தையின் அகவயப்படுத்தலுக்கு ஊக்க சக்தியளிக்கும். பூங்காவில் மலர்களுடன் குழந்தை பேசும் அழகை பார்த்திருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்களுடன் குழந்தை கதைப்பதை கண்டிருப்பீர்கள். தாயின் முகத்தையே குழந்தை மிக அதிகமாக அகவயப்படுத்துகிறது. இதனால் தான் தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என நம் முன்னோர்கள் கூறிச் சென்றனர். தந்தையின் துணையில் குழந்தை உலகை அகவயப்படுத்த முயல்கிறது. தந்தை தன்னை தூக்கி வெளியே கொண்டு செல்ல வேண்டுமென்றும் குழந்தை நெஞ்சம் எதிர்பார்க்கிறது. சகோதரர்களின் தன்னை ஒத்த சிறு குழந்தைகளின் கூட்டுறவில் குழந்தை அகவயப்படுத்தலை அதிகரித்துக் கொள்கின்றது. குழந்தையோடு பழகும் ஒவ்வொருவரும் குழந்தை தங்களை வாசிக்கும் புத்தகமாக கருதி தங்கள் செயல்களை வாசிக்கின்றது என்ற உண்மையை மனதிருத்திக் கொள்ளல் அவசியம். குழந்தை மனிதர்களை மட்டுமல்ல உருவங்களை சித்திரங்களை இயற்கையினை தன் புறச் சூழலை விளங்கிக் கொள்ள முயற்சிக்கும். இவ்வாறு குழந்தையின் அகவயப்படுத்தல் அதிகரிக்க அதிகரிக்க அது பேச முற்படும். இந்த நிலையில் அது தன்னைச் சுற்றி வரப் பழகி வரும் ஓசைகளை தானும் கேட்டு அனுபவித்து வெளிப்படுத்த முயற்சிக்கும். இந்நேரத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு தமிழ் மொழியினை அக்குழந்தை கேட்கின்றதோ தமிழ் மொழியுடன் கூடிய வான் ஒலி-ஒளி நிகழ்ச்சிகளைக் கேட்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழினை பேச முயற்சிக்கும். குழந்தையின் இந்த பேச்சு முயற்சியினை நெறிப்படுத்தும் கலையே வாசிப்பு. பேசுவதில் அக்கறையற்ற குழந்தை வாசிக்காது. இதனை நாம் மறக்காது. முழுமை பேச்சை எவ்வளவு தூரத்திற்கு உற்சாகப்படுத்து கின்றோமோ அவ்வளவு தூரத்திற்கு குழந்தை இலகுவாக வாசிக்கத் தொடங்கும்.

அகவயப்படுத்தல் என்ற குழந்தையின் இயல்பான வளர்ச்சியின் அடுத்த கட்ட உயர்ச்சியே கிரகித்தல் பயிற்சி எனப்படும் செயல். கிரகித்தல் பயிற்சி என்பதனை விளங்கி கொள்ளுதல் எனத் தமிழில் கூறலாம். எழுத்தின் ஓசையை அந்த ஓசைக்குரிய எழுத்தின் வரிவடிவத்தை அந்த எழுத்துக்களால் ஏற்படுத்தப்படும் சொல்லை அந்த சொல்லின் பொருளை சொற்களால் ஏற்படுத்தப்படும் வசனத்தை வசனத்தின் விளக்கத்தை குழந்தை படிப்படியாக அறிதல் கிரகித்தல் ஆகும். அந்த எழுத்துக்களை சொல்லை வசனத்தை குழந்தை ஓசை மூலம் பிறப்பிக்கும் பொழுது வாசித்தல் ஆகும்.

எனவே எழுத்துக் கூட்டி வாசித்தல் என்பது வாசித்தலை ஆரம்பிப்பதற்கான பயிற்சியாகின்றது.

முதலில் படங்களுடன் உள்ள புத்தகங்களை குழந்தைகளுக்கு கொடுத்து அது அதிகமாக கவரப்படும் பக்கங்களில் உள்ள படத்தின் விளக்கத்தை அதற்கு கூறுங்கள். பின்னர் பெரிய அளவிலான எழுத்துக்களுடன் உள்ள படங்களைக் காட்டி அவற்றில் உள்ள எழுத்துக்களை மேலெழுந்தவாரியாக சொல்லிக் கொடுங்கள். அடுத்து அவற்றை எழுத்துக் கூட்டி நீங்கள் வாசித்து அதனுடைய விளக்கத்தை கூடிய அளவு இலகுவாக சொல்லிக் கொடுங்கள். பிள்ளை எழுந்து சென்றால் அத்துடன் சொல்லிக் கொடுப்பதை விட்டு விடுங்கள். பிள்ளைகளுக்கு பாடல்களைக் கேட்கவும் அவை முணுமுணுக்கும் பொழுது உற்சாகப்படுத்தவும் மறக்க வேண்டாம். சிறுவர் பாடல்களை அவர்கள் முன்பாக பாடுங்கள் அல்லது சிறுவர் பாடல் ஒலிநாடாக்களை போடுங்கள். குழந்தைகள் தாம் நடிக்க முற்பட்டால் அல்லது முகபாவங்களை வெளிப்படுத்தினால் அதனை பாராட்டுங்கள். அவை பாடல்களைக் கேட்டு துள்ளிக் குதித்தால் கத்திக் கொண்டு ஓடி மகிழ்ந்தால் அவற்றை அனுமதித்து ஆடிபாடி மகிழுங்கள். இதன் மூலம் குழந்தை நூல்களை தன் நண்பர்களாக கருதும் நிலை வளரும். குழந்தைகள் நூல்களை சித்திரங்களை இரசித்து வளர இவை அவசியம்.

தயவுசெய்து குழந்தைகளுக்கு மட்டுமல்ல சிறுவர்களுக்கும் கூட அவர்கள் விரும்பாத நூல்களை அவர்கள் விரும்பாத நேரங்களில் வாசிக்கும் படி திணிக்காதீர்கள். இதனால் குழந்தைகள் சிறுவர்கள் வாசிக்கம் பழக்கத்தையே வெறுக்கத் தொடங்கிவிடுவார்கள். இவ்வாறு வாசிக்கும் படி நிர்ப்பந்தித்தல் மூலம் நாம் குழந்தைகளுக்கு வாசிப்பின் மேல் ஆர்வத்தை அல்ல வெறுப்பையே வளர்ப்போம். இவ்விடத்தில் எண்ணையும் ஆரம்பத்தில் ஒரு வரிவடிவமாகவே குழந்தைகள் கருதுகின்றன. ஆகவே தான் இலக்கங்களையும் எழுதப் பழக்குதல் என்ற சொற்றொடர் வழங்கி வருகிறது.

எனவே எண்களையும் எழுத வாசிக்கப் பழக்கும் பொழுது குழந்தைகளுக்கு அவைகளுடைய திசையில் சென்று பழக்குதல் அவசியம். குழந்தைகளுடன் எண்ணையோ அல்லது எழுத்தையோ வாசிக்கும் பொழுது அவர்களை மடியில் இருத்தி புத்தகத்தை இருவரும் சேர்ந்து வாசித்தல் அவசியம். பிள்ளை வாசித்த விடயங்கள் குறித்து அவர் அவர் வயதுக்கேற்ப கேள்விகள் கேட்டு அவை எவ்வளவு தூரத்திற்கு அவற்றை விளங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளன என்பதை அறிந்து வாசிப்பை வளர்த்து செல்லுங்கள். இந்த கேள்வி கேட்பது என்பது நீங்கள் எவ்வளவு தூரத்துக்கு குழந்தை வாசிப்பை விளங்கி கொண்டுள்ளது என்பதை அறிந்து உங்கள் வாசிப்பதற்கான உதவியினை திட்டமிடுவதற்காகவே அல்லாது குழந்தையின் திறனை பரிசிக்கும் முயற்சியாக கருதி அதனை வாசிக்கவில்லை எனத் திட்டுவது கூடாது. குழந்தையின் முயற்சி எந்த அளவாக இருந்தாலும் அதனைப் பாராட்டியே ஆக வேண்டும்.

எம்மிடையே அடியாத மாடு படியாது என்றொரு பழமொழி நிலவுவதை குழந்தைகளை அடித்து படிப்பிப்பவர்கள் தமக்கு சாதகமாக அடிக்கடி கூறுவதை கேட்டிருக்கின்றோம். ஆனால் இங்கு மாடு என்பது எதனைக் குறிக்கிறது என்பதை இப்பழமொழியினைக் கூறுபவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. மாடு ஒரு அஃறிணைப் பொருள். அது எப்படிப் படிக்கலாம்? அல்லது குழந்தையை மாடு என இழிவாக கூறுவது எவ்வளவுக்கு மனிதநேயத்திற்கு ஏற்புடையது என்ற கேள்விகளை இவர்கள் கடுகளவும் சிந்திப்பதில்லை. உண்மையில் அடியாத மாடு பணியாது என்ற கூற்றின் மாறுபட்ட கையாளுதலே அடியாத மாடு படியாது ஆயிற்று என்பது. எனவே குழந்தைகளை அடித்து வற்புறுத்தி வாசிக்க எழுதப் பழக்காது அன்பாக அணைத்து அவற்றின் ஆற்றல்களை ஊக்கப்படுத்தி வளர்த்தல் அவசியம்.

சில குழந்தைகளுக்கு அவற்றின் உடல் உள வளர்ச்சிகளில் உள்ள குறைபாடுகள் நோய்கள் காரணமாக வாசிப்பதில் எழுதுவதில் சிக்கல்கள் தோன்றக் கூடும். அவ்வாறான குறைபாடுகளோ அல்லது நோய்களோ இருப்பதாக நீங்கள் சந்தேகித்தால் வைத்தியர்களை அல்லது கல்வி உளவியலாளர்களை அணுகுவதன் மூலம் உங்கள் குழந்தைகளுக்கு உரிய முறையில் சிகிச்சை அளித்து அதனின் ஆற்றல்களைப் பெருக்கி அதன் வாசிப்பு ஆற்றலை வளப்படுத்தலாம்.

## குழந்தையின் வாசிப்பில் பெற்றோரின் பங்கு

சிறுகுழந்தைகளுக்கு பள்ளிக் கூடத்துக்கு செல்வதற்கு முன்பாக அதன் பெற்றோர் என்ற வகையில் நான் என்ன செய்ய வேண்டும் என்ற தலைப்பில் பிரித்தானியாவில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாண்டை பிரித்தானியா தேசிய வாசித்தல் ஆண்டாக - National Year of Reading - அனுஸ்டிப்பதையொட்டி இத்துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. இதிலிருந்து சில கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

- குழந்தைகள் முன்மாதிரிகைகள் மூலமே கற்றுக்கொள்கின்றார்கள். ஆதலால் நீங்கள் பத்திரிகைகளை சஞ்சிகைகளை புத்தகங்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுகின்றீர்களா என்பதை குழந்தை முன்பாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- குழந்தையுடன் உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள நூலகத்திற்கு போகத் தவறாதீர்கள். அவசரம் அவசரமாக உள்ளே போய் விட்டு அவசரம் அவசரமாக வெளியே ஓடி வராதீர்கள். உள்ளே போய் உட்கார்ந்து குழந்தை தானாக நூலை தொட தேட எடுக்க அனுமதியுங்கள். இவ்வாறு குழந்தையை செய்ய விடுவதன் மூலம் புத்தகத்தை எடுத்தலும் ஒரு விளையாட்டு என குழந்தை கருதத் தொடங்கும். குழந்தை திரும்பத் திரும்ப ஒரே புத்தகத்தையே எடுத்தால் அதனை தடுக்காதீர்கள். மேலும் நூலகரிடம் நல்ல நூல்கள் குறித்து ஆலோசனை கேளுங்கள். இவ்வாறு ஆலோசனை கேட்கத் தயங்க வேண்டாம். அவ்வாறு ஆலோசனை கூறவேண்டியது நூலகரின் பதவி வழிக் கடமைகளில் ஒன்று.
- குழந்தையுடன் நூல்களை வாசிப்பதற்கு சில மணித்துளிகளை நீங்கள் ஒதுக்குங்கள். குழந்தை நித்திரைக்குப் போகும் முன்னுள்ள நேரம் இதற்கு உகந்தது. ஆயினும் குழந்தை எந்நேரத்திலும் புத்தகம் ஒன்றை உங்களுடன் சேர்ந்து வாசிக்க கூடிய வகையில் எந்நேரமும் குழந்தைக்கு ஒரு புத்தகத்தை அதன் அருகில் வைத்திருங்கள். உதாரணமாக டாக்டரைச் சந்திப்பதற்கு காத்திருக்கும் பொழுது அல்லது பஸ்ஸில் பயணம் செய்யும் பொழுது குழந்தை தானாக அல்லது உங்களுடன் சேர்ந்து புத்தகத்தை பார்க்க விரும்பக் கூடும்.
- குழந்தையுடன் நிறையக் கதையுங்கள். ஏனெனில் நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக சொற்களை உபயோகிக்கின்றீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு குழந்தை மகிழ்ச்சியடையும். குழந்தையுடன் புத்தகங்களில் உள்ள படங்கள் சஞ்சிகைகளில் உள்ள விளம்பரப் படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து அடிக்கடி கதையுங்கள். இதனால் குழந்தை புத்தகத்தை நேசிக்கத் தொடங்கும்.

- குழந்தை பிறந்து சில மாதங்களிலேயே அதற்கு அருகில் சிறுவர் பாட்டு ஒலியிழை நாடாக்களை போட்டு அவை அந்த இசையை ஓசையை இரசிக்க விடுங்கள். அவை பேசத் தொடங்குகையில் அந்த பாடல்களில் ஒரு அல்லது இரண்டு சொற்களை முதலில் சொல்லிக் கொடுத்துப் பின்னர் படிப்படியாக முழு பாடல் வரிகளையும் சொல்லிக் கொடுங்கள்.

- குழந்தை தனது பெயரின் முதல் எழுத்தை கூறத் தொடங்கும் நேரத்தில் அந்த எழுத்து உள்ள புத்தகங்கள் படங்கள் வேறு பொருட்களை எல்லாம் அதற்கு காட்டி அவ் எழுத்தை அது அவற்றில் உச்சரிக்க கற்றுக் கொடுங்கள். இதனை குழந்தைகள் லெகுவாக விரும்புவதாக ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

- பிறந்த நாள் பரிசாக நூல்களைப் பரிசளியுங்கள். பலவிதமான நூல்கள் உண்டு. பேசும் எலெக்ரொனிக் நூல்கள் - பலவடிவங்களில் பல வர்ணங்களில் அமைந்த நூல்கள் - துணிகளில் எழுதப்பட்ட நூல்கள் என எத்தனையோ வகை வகையான நூல்கள் உண்டு. அவைகளை வாங்கி பரிசளியுங்கள்.

- கதைகள் உள்ள ஒலியிழை நாடாக்களை குழந்தை கேட்பது கதைகேட்டலில் அதன் ஆர்வத்தை தூண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். பயணம் செய்யும் பொழுதும் படுக்கைக்கு போகம் பொழுதும் கதைகள் உள்ள ஒலியிழை நடாக்களை குழந்தை கேட்பது நல்லது.

- சிறு குழந்தைகள் தொடர்ச்சியாக கதை கேட்க மாட்டார்கள். ஆகவே அவர்களுடன் உரையாடி உரையாடியே கதை கூறவேண்டும்.

- உங்கள் குழந்தையுடன் கதைகளை வாசிக்கும் பொழுது அவர்கள் கதையினை உங்களுடன் சேர்ந்து வாசிக்கப் பழகியதன் பின்னர் கதையினை வாசித்து விட்டு இடையில் நிறுத்தி குழந்தையிடம் அதற்கு பின் என்ன நடக்கலாம் என ஊகித்து கூறும்படி கேளுங்கள். ஒன்று இரண்டு வரிகளை குழந்தை கூறியதும் அதைப்பாராட்டுங்கள். அது கதையின் போக்குக்கு மாறுபட்டதாக இருப்பின் நீங்கள் சொன்னது சரி ஆனால் புத்தகத்தில் இப்படி சொல்லியிருக்கிறார்கள் எனக் கதையை தொடருங்கள். இந்த உத்தியை சாதாரண நூல்களை வாசிக்கும் பொழுதும் கையாண்டு அடுத்த வரியை அல்லது சொல்லை குழந்தையை கூறும்படி கேட்டு அதனுடைய படைப்பாற்றலை வளருங்கள்.

- இறுதியாக உங்கள் குழந்தைக்கு எனது புத்தகம் என்ற பெயரில் அது தனக்கென ஒரு புத்தகத்தை உருவாக்க உதவுங்கள். அந்த புத்தகத்தின் முன்மட்டையில் குழந்தையின் படத்தை ஒட்டி வேலைப்பாடு செய்து கொடுங்கள். புத்தகத்தின் உள்ளே குடும்பப் படங்கள் சகோதர சகோதரிகளின் படங்கள் குழந்தைக்கு பிடித்தமான படங்கள் அதற்கு பிடித்தமான உருவங்கள் வண்ணங்கள் சிறுவர் நிகழ்ச்சிகளின் கதாபாத்திரங்கள் சாமி படங்கள் குழந்தை கிறுக்கி அல்லது கீறி தனது படமென வைக்க விரும்பும் படங்கள் இப்படியானவைகளை குழந்தையையே சேர்த்து வைக்க செய்யுங்கள். அவற்றுக்கு கீழே அவை ஏதாவது கீற எழுத விரும்பினால் அதற்கு உதவுங்கள். வயது கூட கூட இந்த எனது புத்தகம் குழந்தையின் சொந்த வாழ்க்கை வரலாறாக அல்லது சொந்த படைப்புக்களின் திரட்டாக வளரக் கூடும். உங்கள் குழந்தையை ஒரு பெரும் படைப்பாளனாக்கிய பெருமையில் நீங்களும் பூரித்து மகிழ்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்

### முதுகலைமாணி கலாநிதிப் பட்டப் படிப்பினை படிக்க விரும்புகின்றீர்களா?

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணி மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்பினைப் புதிதாகப் படிப்பதற்கு அல்லது முன்னர் படித்து விட்டு விட்ட படிப்பைத் தொடர விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை செய்து தரவுள்ளோம். நீங்கள் வசிக்கும் நாடுகளில் இருந்தபடியே தமிழில் உங்கள் பட்ட மேற்படிப்பை உங்களுக்கு வசதியான காலத்தில் தொடர இது உதவும். நீங்கள் உங்கள் பெயர் விலாசம் வயது உங்களது பட்டப்படிப்புக்கான பாடம் அல்லது நீங்கள் செய்ய விரும்பும் ஆராய்ச்சி குறித்த சுருக்கமான விபரம். உங்களது கல்வித் தகைமை அல்லது அனுபவம் என்பவற்றை எழுதி பின்வரும் விலாசத்திற்கு உடன் அனுப்பி வையுங்கள் நாம் உங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை தருவோம்.

Mr. S.J. Fatimaharan
39 Napier Road
Cowley
Oxford OX4 3HZ.
Telephone / Fax : 01865 775553
E-mail sfatimaharan @compuserve.com

## முத்தமிழ் மாத இதழை சலுகை விலையில் பெற வழி இதோ

முத்தமிழ் மாதாந்த இதழைச் சலுகை விலையில் பெறுவதற்கு இன்றே உங்கள் சந்தாவை வழங்குங்கள். இதன் மூலம் உங்கள் சுவைக்கும் எங்கள் பணிக்கும் வளமூட்டுகின்றீர்கள்.

**சந்தாவிபரம் வருமாறு:**

ஆண்டு ஒன்றுக்கு 12 பவுண்கள்(தபாற் செலவு உட்பட)
ஆறு மாதங்களுக்கு 6 பவுண்கள் (தபாற் செலவு உட்பட)

உங்கள் காசோலைகளை அல்லது தபால் மணியோடர்களை JR Print என்ற பெயருக்கு எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

MUTHTHAMIL PUBLICATION
JR PRINT
57 Boundary Road
Walthamstow
London E17 8NQ

## எழுத்தாளர்களே! கவிஞர்களே!

உங்கள் ஆக்கங்களை நூலுருவில் பிரசுரிக்க முடியாமல் வருந்துகிறீர்களா. கவலையை விடுங்கள். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். மிகக்குறைந்த விலையில் உங்கள் ஆக்கங்களை நூலுருவில் அச்சேற்றித் தருகிறோம். தொடர்புகட்கு: முத்தமிழ் பிரசுரம் 57 Boundary Road Walthamstow London E17 8NQ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு ஓர் அவசர அழைப்பு

## ஒரு ஆய்வுக்கு உதவுங்கள் !
## உண்மைக்குச் சாட்சி சொல்லுங்கள்!

உலகம் சிறிலங்காவை ஒரு ஜனநாயக நாடு என்று இன்றும் கூறுகின்றது
எமக்குத் தானே நாம் எத்தகைய ஜனநாயகத்தில் வாழ்ந்தோம் என்பது தெரியும்
நாம் தானே எமது தாயகத்தின் உண்மை நிலையை உலகறியச் செய்யலாம்
அப்பொழுது தானே எமது மக்களுக்குப் பாதுகாப்பான அமைதி கிட்டும்!

நீங்கள் உங்கள் தாயகத்தில் வாழ்ந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கத்தில் ( 1972க்குப் பின்) அல்லது இலங்கை அரசாங்கத்தில் (1948 முதல் 1972 வரை) உங்களது ஜனநாயக அனுபவம் எப்படியிருந்தது?

உங்கள் அனுபவத்தை எழுதி அனுப்புங்கள் பெயர் உட்பட அனைத்து விபரங்களும் இரகசியமாக வைக்கப்பட்டு ஆய்வுக்கு மட்டும் பயன்படுத்தப்படும். நீங்கள் விரும்பினால் மட்டுமே உங்கள் கருத்துக்கள் உங்கள் பெயருடன் பயன்படுத்தப்படும்.

இன்றே உங்கள் தாயக ஜனநாயக அனுபவங்களை எழுதி பின்வரும் விலாசத்திற்கு உடன் அனுப்பி வையுங்கள். மேலதிக விபரம் தேவையாயின் நீங்கள் தொடர்பு கொண்டால் நாம் உங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைத் தருவோம்.

Mr. S.J. Fatimaharan
39 Napier Road
Cowley
Oxford OX4 3HZ.
Telephone / Fax : 01865 775553
E-mail Sfatimaharan @compuserve.com

---

## ஒக்ஸ்வேர்ட் பல்கலைக் கழக நகரில் தங்கியிருந்து அல்லது விடுமுறை காலத்தில் விஜயம் செய்து தமிழ் – ஆங்கிலம் – கம்பியூட்டர் படிப்புக்கள் படிக்க விரும்புகின்றீர்களா?

குறுகிய கால நீண்ட கால படிப்புக்கள் உண்டு. ஆராய்ச்சிகள் செய்ய விரும்புவர்கள் அது குறித்த விபரங்களை எழுதினால் இயலுமான அளவுக்கு தொடர்புகள் ஏற்படுத்தி தரப்படும்.உங்கள் தேவை எதுவென்று எழுதி பின்வரும் விலாசத்திற்கு உடன் அனுப்பி வையுங்கள். விண்ணப்ப படிவம் அனுப்பி வைக்கப்டும். மேலதிக விபரம் தேவையாயின் நீங்கள் தொடர்பு கொண்டால் நாம் உங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைத் தருவோம்.

Mrs. Rita Fatimaharan
39 Napier Road
Cowley
Oxford OX4 3HZ.
Telephone / Fax : 01865 775553
E-mail Sfatimaharan @compuserve.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மைக்கும் நீதிக்கும்
தோள் கொடுத்து
மாண்டமண்ணினை
வணங்குகிறோம்

# கொடுங்கள் எம் மண்ணைத் தொடுங்கள்

இந்தப் பிள்ளையின் உதட்டிலும்
உணவுப் பருக்கைகள் ஒட்டட்டும்
அந்தத் தாயரின் கரங்களும்
தங்கள் பிஞ்சுகளுக்கு ஊட்டட்டும்
எங்கெல்லாமிருந்தோ எம்மையும் நினைக்கத்
தம்பிகளும் தங்கைகளும் தந்தைகளும் தாய்களும்
எங்களுக்கும் உள்ளார்கள் இந்த நம்பிக்கை வரிகள்
நாடெங்கும் ஒலிக்கட்டும் இருப்பதைப் பகிர்வோம்
எங்கள் நினைவுகளையும் சேர்த்துத் தான்

தொடர்புகட்கு:
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
*79 Hoe Street, London E17 4SA*
*Tel: 020 - 8520 5876*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


TSSA'S
13th
Summer Sports Festival
- 2004
வட கிழக்கு
விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரி
NORTH EAST
ACADAMY OF SPORTS SC
BRITAIN (U.K)
T.A.A.L